225302

# சீதா கல்யாணம்

DIGITIZED

U31,892A
M1
225302

1910

சீதா கலியாணம்

031,892ɴ
N11
225-302

உ

ஸ்ரீ ராம ஜெயம்.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
REGISTERED
15 FEB 1911
MADRAS.

இவை

ஆற்காடு தாலுக்கா

கணியனூர் மதுரபுதூரில் வசிக்கும்

ஜங்கம முனுசாமி ஐயர் குமாரனாகிய

சுப்புராய உபாத்தியார் அவர்களால்

இயற்றிய

# சீதா கல்யாணம்.

இதை கலவை வீரசைவ மகா-ள-ள-ஸ்ரீ. குமாரசாமி.

உபாத்தியாராலும்,

காஞ்சிமா நகருக்கடுத்த குண்டியார்தண்டலம்

பரசுராம முதலியார் குமாரனாகிய

மகா-ள-ள-ஸ்ரீ கடம்பநாத முதலியாரவர்களாலும்,

கணியனூர் மதுராபுதூர் கிராமத்தில் வசிக்கும்

தலால்

வீரதப்ப உடையாரவர்களாலும்,

பார்வையிட்டு

பூந்தமல்லிக் கடுத்த திருக்கோவில் பத்து கிராமத்திற்-வசிக்கும்

அனுமந்த இராகவல் நாயுடவர்களாலும் பார்வையிட்டு.

1910.

ஆரணி அமெரிக்கன் ஆற்காட் மிஷன் அச்சுக்கூடத்தில் பதிப்பிக்கப்பட்டது.

[Price As. 10

விலை அணா. ௰]

(சாத்துக் கவிகள்)

லளையில் வசிக்கும் வீரசைவ குமாரசாமி
உபாத்தியாயர் இயற்றிய

(வெண்பா)

தான் ஹுமரை தான் புகழும் தய்யற்கு ராமபதம்
பன்னும் சுப்ராயனுக்கே பரமனருள்
பெற்றான் நாடகத்தை பேசினன் இவ்வுலகிற்
கற்றாரினி யாவருக்கும் களிப்பே.

——:o:——

குண்டியார் தண்டலம் பரசுராம கவிராயர் குமாரனுன்
கடம்பனுத முதலியாரால் இயற்றிய

(வெண்பா)

ஸ்ரீராமஜெய மெனவும் செப்பும்படி யார்தனக்கு
ஆராத துயரமது அகன்றிடுமே மாருத
பதமது தான்பெருகும் பரமனருளினி சிறக்கும்
இதமென இன்னூடகமே யியம்பு.

——:o:——

கணியனூர் மதராபுதூர் கிராமத்தில் வசிக்கும் குலால்
வரதப்ப உடையாரால் இயற்றிய

(வெண்பா)

முக்தியருள் சிவபெருமான் முகமலர்நுமை தனக்கே
சித்தமே மிககிழ்வா செப்பிய ராமபதம்
பாடினன் நாடகமாய் பலருமென்மேல் மகிழ
ஆடினன் எவர்களுக்கும் அன்பே.

——:o:——

தமிழ்நாடு ஆவணக்காப்பக நூலகம்
225302
சென்னை-600 008



REGISTRAR OF BOOKS
REGISTERED
15 FEB 1911
MADRAS

ஸ்ரீ ராமஜெயம்

சீதா கலியாணம்.

வெண்பா.

சீராரை யோத்தியாளும் தசரதராமனென்னும்
பாரோர்ப்
பேசால் நாடகமடியேன் பேசவே
புகழும் கெஜமுகவனே உன் பொன்னடிக்கே இணங்க
அகமகிழ்ந்தெனக் கருளே

(தருவு - தாளம் - ஆதி - ராகம் - நாட்டை)

பல்லவி

வந்தருள் கெஜமுகனே நல்ல (வந்)
வீரமது தருகவே பரவசமுடனி ணி

அனுபல்லவி

சிந்தை தனிற் மகிழ்வா சேவடியை தருக (வந்)
உந்தன் மூஷிகமீ தோங்கி வாமால் ம ரு க

சரணங்கள்

அப்பமுபின் வடை அவல் பயரும் எள்
ளுருண்டை பொரி இள நீர்
தொப்பயப்ப மகிழ்வா துரிதமுடன் படைப்பேன் (வந்)
அப்பனேபால் தேன் அமுது உடன் கொடுப்பேன்

சர்க்கரையு மாம்பழம் கதலிபிலா
சுளை கரும்பின் ர சமும்
அக்கரை யுடனே யானழைத்து தருவேனினி (வந்)
வக்கிர தந்த வந்தன மிதோ தந்தே ணி

பாலனெனும் சுப்பாராயன் போற்றி செய்
பாசாங்கு சதர னே
ஞாலம் புகழவே வுன் நன்னிணை தாரா (வந்)
ஜாலம் செய்யத்தகாதுஜல்தியி கோரா

### வேலவர் வணக்கம்

வானவர் மகிழ முன்னாள் வடிவான வேல்கைகொண்டு
தானவர் தனை அடித்தா தரணியோர் மகிழ யிர் த
ஜானகி ராமனென்னும் சரித்திரம் நாடகமா செப் ப
கானகமயில் மீதேறி கந்தனே வருகு வா யே

தருவு - தாளம் ஆதி - ராகம் - காம்போதி

#### பல்லவி

நயம் தரும் வேலனே ஞான செங்கோல னே (நய

#### அநுபல்லவி

அயன் திகழ் சீலனே அம்பிகை யால னே
தயங்கி நின்றேனருள் வாதற்பரனே னற்குணனே (நய

#### சரணங்கள்

வள்ளி சமேதனே வனஜ பொற்பா தனே
புள்ளி மயூர பேறும் புண்ணனே கண்ண னே (நய

சூரனை வென்றவ சுரப்புகழ் நின ற வ.
காரண குருவான கதிர்வேலவா முன்வா வா (நய)

தற்பரஜோதியே தயைய செய்பிரக் கர்தியே
சர்ப்பா பரணன் மகிழ் சதுர் நிதியே தி யே (நய)

நம்பும் சுப்பராயன் கவி நயம் பெற செய்யு தவி
அம்புவி யோர்க் களிக்க அருள் செய்குவாப தவி (நய)

### பரமசிவன் வணக்கம்

திங்கள் செஞ்சடையா போற்றி திருபுர மெரித்தாய் போற்றி
மங்கைக்கே பாகம் தந்த மான் மழுகை யாயுந்தன்
ஆங்கமே சளிப்பா இந்த அடியேன் செய் நாடகத்திற்
பங்கமொன் றணுகாதாள் வாபரமனே போற்றி போற்றி

### திருமால் வணக்கம்

ஆதவன் குலம் தழைக்க அயோத்தி மன்னனுக்கே
மாதவா சேயநாக மாநிலம் தனிலுதி த் த
கோதண்ட பதியே எந்தன் குறையதை நீக்கி என் று
நீதண்டா தெனையாளா உன் திருவடி போற்றி போற்றி

தருவு-தாளம்-ரூபகம்-ராகம்-கமாஸ்.

#### லாவணி

அய்யனே உன் மகிமை சொல்ல யாராலா குமோ
அண்ட முண்டவாயனே அரிய போகுமா
வெய்யவன் குலத்து தித்த வீர ராகுவா இந்த
வேளையுந் தன்னுளளித் தென் வினையை போக்குவா



அன்னை தந்தை குரு தெய்வ மென்பதும் நீ யே
ஆதியந்த மான பிரணவ ஜோதியும் நீ யே
உன்னை விட தெய்வம் யாது வோதவும் நானே இந்த
உலகெலாம் உமதருளல்லால் வேறுண்டோ சொல்தானே
நாலாம் பதமருள் வாணுக சய ஞ இந்த
பாலன் மீதருள் புரிவா பாபகர ச நா
சிறந்த கணிய நகரில் வளரும் ஸ்ரீ ரகுரா மா உன்
பறந்த புயத்திற் கினை எவர்தான் சொல்லப் போகுமா

### அநுமார் வணக்கம்

காரண குருவோனந்த கதிரவன் குலத் துதித் த
நாரணன் நாடகத்தை நயமுடன் புவியிற் செப் ப
மாருதியானே உந்தன் மலர் மிசை பணிந்தேனன்றே
வாருதி கடைந்தாய் துணை வந்தருள் செய்குவாயே

### உமையாள் வணக்கம்

பரிபூரணி நிரஞ்சனி பங்கய திருநேத் தி ரி
அரிநாரணி சாகுநதி அமரர்கள் புகழ்காத் தி ரி
கிரா ரா ணி சுரர்காலினி நிஷ்களத்திரி சூ லி
மூவாயாண்டருள் கருணாகரி முச்சகம் புகழ் கபாலி
வாவேதகி அயன் மால் துதி வந்தருளிது சமயம்
சிறியேன் குறைதனை போக்குவா சிவசங்கரியே

தருவு-தாளம்-திருபுடை-ராகம்-பைரவி

#### பல்லவி

இணையடியை தாரும் தாரும் ஏழைக்கருள் கூரும் கண்பாரும் (இணை)

#### அநுபல்லவி

பணிமீதுறங்குவோன் சோ தரி
பராமுகமேன் ஸ்ரீ தரி (இணை)

#### சரணங்கள்

அரவாபரணுர மதிலாடிட தருவே யிச்சிறியேன் நாடி
வரமருள் புரிந்தருளினி சாமளி வானவர் தொழுதேற்றிடும் கோமளி (இணை)
கதி என உனதடியிணையிற் போற்றிட மகிழ்ந்துனை துதித்தேற்றிட
திருட னென்குறை தனக்கி தங்குமே சாம்பவி பொன்னியம்ம நீதியுமே இனை
நினதடி தனைகதி எனவர் மருள் இனி தனையே னெந்தனை யாண் டருள்
கனகாம்பர பதமலி லோசனி கனியனன்ன கர்வளர் நேசி னி (இணை)

### கலைமகள் வணக்கம்

வெண்மை வாரணி நிறஞ்சனி வேத பாரண துரந் தரி
உண்மை ராமநாடகத்தை உறைத்திட என் கரி கதிர்
வண்மையாய் ஆடிதான் கொண்டு வையகம் மகிழ அன்பாய்
என்னுமே நீங்காதாள் வதுன் கடன் போற்றி, போற்றி

தருவு-தாளம்-ஆதி-ராகம்-காம்போதி

லாவணி

வாணி சதுர்மறையின் வேணி நித்தியானந்த
தராணி னயந்தரச கேணி திவ்விய
பாணி அயன் மகிழும் ராணி சுப்ரசன்னமா
தோணி வரமருள் கல்யாணி

யானே உன் சுதனென தானே கருணை செய்ய
தேனே யிது தருி என் கோனே திவ்விய
தேனே பராமுக மாவானே கல்வியருளும்
மோனே பத்மாசனத்தின் மானே

மேட்டி சம்ரசக்லை நீட்டி மன மகிழ
நாட்டி அடியேன் மீதேன் போட்டி என்னை
காட்டி கொடாதே அருள் கூட்டி பலுவ
லாட்டி தராயுனது பேட்டி

மாதே அருள்முதகோதே இனி அடியேன்
போதே பாராமுகமாமோ தே திவ்விய
சாதே சுப்பராயன் தன் மீதே வாது தகாதே
சமயம் வரமருளிப் போதே

அவையடக்கம்

ககனமதி லுலவுகின்ற கருடாழ்வாரை கண்டுமேசம்பார்ந்த கதை வார்ப்போலும்

ஜகமதினிர் செந்தமிழை செப்ப வேண்டி தேவரடி தொழும் கவி (வானவர் பாதம்

அசமகிழ்ந்து அடியேன் தன் சிரமேற் கொண்டு ஆனந்த ஆழி தனிர்க் குளித்தாய் போலும்

மகிமை பெரும் ராமநாடகம் தனக்கே மனம் கொள்வீர் பெரியோர் (பொருந்தினம் கொள்வீரே.

தோடயம்-தாளம்-சம்பை-ராகம்-நாட்டை

அரி நமோ நாரணனே அண்டரும் பூரணனே
(அடியேன் முறைக் கருள்புரிவா அன்னபர்க்கோனே விண்ணவர் புகழ்

ஆதியாய் நின்றவனே அப்பிகை சோதரனே
வேதம்தில் நடனமிடும் வினை தீர்க்கோனே
அன்பர்கள் துதி (அரி)

நளினமலரிணை நேதரு நாரத சங்கீத காத்ரு
தளிர் பெர இன்றருள் புரிவதநி ஏன இன்றெ
தாரகவோம் (அரி)

பணிசயன் உனது யிருப்பதமே கதி எனவும் திரு
கணியன் கரிநில் வளரும் கரி ராகவா
காத்தருள் தநி (அரி)



விநாயகர் கொலு விருத்தம்.

அம்பிகை அரனார்க் கன்று அகமிக மகிழச் செய்த
தும்பிகை நாதர் தாமே துரிதமாய் பணிகள் பூண்டு
செந்தமிழ்க்கு தவியாக ஜகம் தனிலுள்ளோர்ப் போற்ற
கந்தமே லணிந்து திவ்விய கடவுள் தானி தோவந்தாரே

(வ-ம்.) உமையவள் பரமசிவத்தின் மனம் களிக்கும் படியாகச் செய்த துதிக்கை யுடைய செல்வ விநாயகர் பரிமள மிகுந்த நருமலரணிந்து சுகந்த பூஷண மணிந்து கொலுவுக்கு வருகின்ற விதம் காண்க.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
REGISTERED
1? FEB 1911
MADRAS

தருவு-தாளம் சாப்பு-ராகம் காம்போதி

பல்லவி

ஐங்கரரும் வந்தாரருள் சேவைத் தந்தார்

அநுபல்லவி

(ஐங்)

சங்கரன் பயன்ற சண்முகன் மகிழ்ந்த

சரணங்கள்

இங்கிதகுணாளன் இனியனற்றோளன் (ஐங்)
தங்கும் பொன்னின் கருளன் தான் வல்லமை போலன்

பொன் முடிநீறலங்க பூசுரரிலங்க (ஐங்)
கன்னுலட்ட இலங்க காரியர்க் குலுங்க

மறை முதல் நேசன் மங்கள விஸ்வாசன் (ஐங்)
நிறைப் பொரு ளீசன் நீங்காத கணேசன்

களிக்கும் சத்பாத்தரன் கணியனார் கோத்தரன் (ஐங்)
இளைத்தப் பேர் சூத்தரன் யோரம்பனர்க் காத்தரன்

சூஸ்தரதார்-சொல்-தருவு-தாளம்-ஆதி-ராகம்-காம்போதி

லாவணி

சித்த மகிழ சத்தியபாலனை நித்தம் தொழுவோம்

எத்திசையிற் புகழு மய்கரர்க் கிணங்கி அஞ்ஜலிட்போம் (சித்)
மல்லி முல்லை திரு சாமந்தி மலர்தனை எடுத் து
தில்லைப் பாலன் மகிழ யவர்த் திருவடி தொடுத்து (சித்)
சரிகை கிரிகை யோகஞான சார்ந்த தீரராம்
அரி அரபிரம்மாதி முதல் நின்ற அங்கா ரராம் (சித்)
சீர்ப் பெருகும் கணியமாக கர்ணனி லமர்ந்த வா
பார்ப்புகழ எந்தன் முன் வந்தருள் தருகு வா (சித்)

(விநாயகர் வ-ம்) எதனையா நான் என் தாயாராகிய மலையரவன் புத்திரியின் மடியின் மீது நான் உல்லாசத்துடன் விளையாடி யிருக்கும் சமயம் உன் தினை சாத்தைக் கேட்டு உனக்கு நான் பிரார்த்தனை செய்வேன் உன் கவலை யாதனைவிலும் தனையா

(சூஸ்தார் வ-ம்) விநாயக அங்குச பாச அரிமரிக அம்பிகைதனைய யேகதந்த-எரம்மா. கெஜமுக-கௌரிசேய காமன் மத்துன-கணபதி? வந்தனம், நாங்கள் இன்றிரவு நடத்தும் இந்த இயல் மிசை நாடகத்திற்கு யாதொரு யிடையூர் சேரிடாமல் முன்னதாய் இருந்து பாதுகாப்பதுன் கடமை சத்திபாவா.

விநாயகர் வ-ம். தனையா யினி இன்னாடகத்திற்கு யாதொரு இடை யூறுநொரது கலைமகளை ஸமரிப்பர்

சூஸ்தார் வ-ம் தமதருளின் படியானந்த கலைமகளை ஸமரிப்பேன். ஆண்டவா

சூஸ்தார்- தருவு-தாளம்-சாப்பு-ராகம்-அடாணு

லாவணி

வெண்மை வாணி தாணி வேதபாரணி சாணி
வேண்டி னேநின்றருள் புரிவி மலசச்சுத வேணி
தன்மை சாவிவிசாவி தருணம் பாவிருண சீவி
தஞ்சமூர்சன் அடிமைஞன் அஞ்சலி செய்தேனே மேவி
உண்மையின் சேயே நீயே உதவி செய்வாயே மாயே
உத்தமி அணிகிட்டாமல் உளமகிழ்ந்தருள் தாயே
அயனருளே பொருளே ஆண்டருளே வரு ளே
அறியாசிறியோன் தனக்கன்பா நீ வரமருளே
சகலஜன பிரபல சாந்த சீலா வி சா ல
சதுர்முகன் சதியே நான் சதானம்பி னேனை மேல
ருள்தனை தாரா நேரா தஞ்சம் நீபாரா கூரா.
தகி என கப்பராயன் தமிழக்கு சவி ளி வா ரா

பொது விருத்தம்

சிறந்த யிப்புவியி லன்பாய் சீர்ப் பெற வளமை யோத்தி
அரசனும் தசர தேந்தரன் அவனிட வாசல் தன்னி ல்
வரிசையா எச்சரிக்கும் வடிவுள்ள கட்டியன் ற ன்
காந்தனிற் பிரம்பு கொண்டு கடுகென வருகின்று னே

(வ-ம்) சிறப்போடும் கூடிய அயோத்திமா நகரை அரசாளும் தசரத சக்ரவத்தியின் வாசல் காக்கும்கட்டியன் உல்லாசத்துடன் கொலுவில் வருகின்ற விதம் காண்க

(கட்டியன் வரும் தருவு) தாளம்-சாப்பு-ராகம்-சுருட்டி.



பல்லவி.

வந்தனன் கட்டியன் திறமுடன் வந்தனன்

அநுபல்லவி

சிந்தை மகிழ்ந்திட விந்தையுடன் திட
எந்த திசைதன் சொர்ந்தமென்னிட (வந்)
சகல வன் புவனகிலமும் நிவ
சுகமே மன்னவ புகல வென றிவன் (வந்)
மகுட மன்னவ ரடியைத் தாழ்ந்திங்
ககுலை நிமி ததிங்குன் தோ மென்றி வன் (வந்)
அகலம் புகழ கண்ணினகரில் வாழ ணி
பகிமையால் பிணி தகலா தென்றி வ ன் (வந்)

(கட்டியன் சொல்-வ-ம்) ராஜாதி ராஜன் ராஜமார்த்தாண்டன் ரணரங்க கோதண்டன் ராஜகம்பீரன் பால்கர குலதீரன் சிலாக்கியமுள்ள வீரன் நல்லார்க்கு மித்துரு பொல்லார்க்கு சத்துரு சுஜசரித குண நேசன் தசரத மகாராஜன் மனுநிதி கோணமல் கணவேதை தோணமல் ஆரிலொரு கடமை கொண்டு மாறுபடுபகையை வென்று திங்கள் மும்மாரி பெய்ய எங்கு முப்போகம் செய்ய பசுவும் புலியும் ஓர்த்துறை நீர் வருந்த செங்கோல் நடாத்திய தசரத சக்ரவர்த்தி கொலுவில் வருவதினால் யான் முன் எச்சரிக்கை செய்ய வந்தேன். புண்ணியவான்களே

பொது விருத்தம்.

கர்ப்பகப் தருக்கள் சோலை கனத்த தோர்கதலி பிள்ளை
அற்புத பிலாவும் தேக்கு அழகு மங் தாரை வில்வம்
நற்பெரு மல்லி முல்லை நயமா செண்பகமநேக
பற்பல விதம் செழும்பாம் பாங்குள்ள நாட்டிற்தானே

இதுவுமது

தசரத சக்ரவர்த்தி கொலு படலம்
மாவிலத்தோர்கள் போற்றும் மகிழ்பெற அயோத்தி நாட்டிற்
கானக மயில்களாட் களிப்புடன் குயில்கள் பாட
வானவராகி கூடும் வன்மையாய் பெண்கள் காட
தானவர் திடுக்கிட்டோட தசரதன் வருகின்றானே

(வ-ம்) மாபெருமை பொருந்திய அயோத்திமா நகரை அரசாட்சி செய்யும் அசமகா ராஜாவின் புதல்வனாகிய தசரத சக்ரவர்த்தி தனது அமைச்சர்கள் புடை சூழ கட்டியர் ஆரிக்கல் மாதர்கள் னடிக்க தனது கொலுவுக்கு வருகின்ற விதம் காண்க

சருவு-தாளம்-ரூபகம்-ராகம்-கமாஸ்

பல்லவி

மன்னன் தசரத பூபதி மகிபன் கொலுவினில் வந்தானே

அனுபல்லவி

தன்னை சூழ்ந்து கொலுவினில் ளுள் தனிர் வணங்கிட சரணன
ஆள் கருணை என இணங்கிட (மன்)

சரணங்கள்.

முத்துக் குடைகள் நயமாய் பிடிக்க
முரசு எக்காளை தவிலும் அடிக்க
சுத்தி சங்கீதமே சுகம்தான் கொடுக்க
சூழ்ந்து விண்ணவர் தினமும் சாமவேதமே
படிக்க (மன்)

விண்ணோர் தினம் மலர் சொரிந்திட
வேகமாய மச்சரேமே சேர்ந்திட
என்னுள் மறை வேதியர் சார்ந்திட
இன்பமுடனேகுடிகள் வந்தனமெனவே நேர்ந்திட (மன்)

மாதர்க்கவரி இருபுரமும் வீச
மாவிலம் தன்னிற் வாழ் மன்னர்நயம் பேச
பாதமே பணிந்து பலர்கள் கூச
பரவசமா கௌசலையாள் பதிஎனபுகழும் உலாச (மன்)

கட்டியன் விருத்தம்.

ஐயா பராக்கு எங்கள் அரசே பராக்கு செங் கோல்
வையா பராக்கு திவ்விய கடலே பராக்கு அன்பர்
துய்யா பராக்கு நீதி துரையே பராக்கு இந்த
வெய்யோன் குலத்துதித்த வேந்தே பராக்கு
(வ-ம்) மணிமகுட ஆர்கேயூர் பராக்கு வீந்தனம் பராக்கு

சுந்திரன் போற்றி விருத்தம்

அம்பரர் உலக மெல்லாம் அதிர்ந்திட முன்னாள் பொல்லா
சம்பரன் தன்னோடிந்தரன் சண்டை செய்து வாட
வம்பு செய்யார்க் கன்றன்னை வதைத்தவ னாவி போக்கி
உம்பர்கள் தனை யாண்ட உத்தமா போற்றி போற்றி

(வ-ம்) முர்க்காலம் இந்திரனுடன் எதிர்த்த சம்பனை



சம்மரித்து தேவர்களை யாதரித்த சர்வதீன ரக்ஷகா தமது பாதார
விந்தமதிர் அடியேன் போற்றி போற்றி பிரபு
சேனாதிபதி போற்றி கவி

விசும்புல காசன் தன்னால் விஜயனென்றனை புகழ்ந்து
தசரதனென மகிழ்ந்த தேவனே யுன்னுள் போற்றி

OFFICE OF THE REGISTRAR OF
REGISTERED
[illegible] FEB 1911
MADRAS.

தசரதன் போற்றி விருத்தம்

தர்ம மிச்செங்கோலிந்த தாரணி புகழ் பெற்றோங்கி
தர்ம மும்மாரி பெய்து சகலனர்க் குடிகள் வாழ்ந்து
தர்மமே மிகமே லோங்கி சதாசாலமே தழைத்து
தர்மமே பெருகவேண்டும் தற்பரா போற்றி போற்றி

தேச விசாரணை

கார்சூழ்ந்த அண்டாண்ட கண்டமெண் டிசையுளத்
ம மா
தார்களும் மிகக்ஷே

சுமித்திரன் விடை

சீர் கொண்டாண்டனவ் கண்டமெண்டிசைகளும்
துரை யே
க்ஷேமமே எனது

தசரதன் வினா

துரிதமுடன் இரவுபகலறிகில் மறையோர்ச் சதுர்
மறைவிரித் துரைப்ப துண்ட

சுமிந்திரன் விடை

பரிதிகுல சதுர்வேத சுரிதி மறை யோர்தினமும்
னே
பசருகின்றுறைய

தசரதன் வினா

பகருலநிலரச ரகமகிழ்ந்திட கொலுமுன்
சுகப் பெற வந்தார் களா

சுமிந்திரன் விடை

இகப் பொருள் தனையவறகத்தி நிர்பன்னியே
சுகப்பெற நிலைறந்துளின் றார்

தசரதன் வினா

நிறைய விலை குறைவு செய்யாமலே வைசியர்க்
துண்ட
கரிதா கவிப்ப

சுமிந்திரன் விடை

நிறை புறண்டாலு மோறறை யனுமாத்திரம்
குறைவது இல்லை எங்குமே

தசரதன் வினா

எங்கு முப்போக பயரிடும் குடிகள் தழைக்க
உண்ட
திங்கள் மும்மாரி

சுமித்திரன் விடை

சங்கை இல்லாமலே திங்கள் மும்மாரியும்
எங்கணும் பொழியு ஐயா

தசரதன் வினா

ஐயமிடமை யிவ்வையகம் தன்னிற் ழ
சைகை எங்காக இருண்டா

சுமித்திரன் விடை

மெய்யனே இப்புவியானோ பனே கருணை பொழி
துய்யா இங்கொருவ ரிலையே

(தசரதன் வினா)

ஒருமித்து பசுவுபுலி யோர்த்துறை புனலுண்டு
ஓங்கியே செழிப்ப துண்டா

(சுமிந்திரன் விடை)

மருவித்த காயிந்த நிறைஉற்ற புவிதனில்
ஒருமித்து வாழு லையா

(தசரதன் வினா)

வாழு மிப்புவியிலுள வர்ணநால் வகைகளும்
தாழாமல் இருப்ப துண்டா

(சுமிந்திரன் விடை)

வேள்வி செய்வேதியரர் ரசர்வைசியர் சூத்திரர்
ஊழ்வினைப்படி தலை முக்கு ரார்

(தசரதன் சொல்-வ-ம) என்னகரில் சூழும் எனது மந்திரிஎனக்கு

அஷ்ட ஐஸ்வரியமும் இருப்பதா லென்னசுகம் இல்லா வாழ்வல்லவோ மந்திரி.

(சுமிந்திரன் சொல் வ-ம்) யாது கவலை சொல்லும் மன்னவ

(தசரதன் சொல்-தருவுதாளம்-ரூபகம் ராகம்-எதுகுலகாம்போதி)

பல்லவி

சேயிவாத ஜன்மமேனோ சேணுலகினிலே மந்திரி சே

அநுபல்லவி

தீவினைமுன்னாள் என்செய்தேனோ
தெரிகிலேனே தரணியில் தானோ சே

சரணங்கள்

இரவி குலமினி தழைக் க
ஏந்தன் பின்னர்ச் செங்கோல் செழிக்க
கருவதொன்றிலா காரணமே
காண்கிலேனே ஆனானே மந்திரி (சே)



செங்கோல் வேண்டேன் நான்கு வைநதன்
சேனைமனவி தனையும் வேண்டேன்
இங்கித அமைச்சரையும் வேண்டேன்
இவ்வுலகி லெவரையும் வேண்டேன் (சே)

ஓங்கிய ஒதிமரமா நாளொன்றுக்
குதவுமே யான் செய்சதியோ இன்று
பாங்கலா பாவியெனவும் புவியோர்
பகரும்படி வினை டெடுத்தேன் (சே)

சீர்முறை தனக்கு தங்கிய நாத
கரியனூர் வாழ்க் கரிவ ரத
பரிதி என்குலம் தழைக்கக் கண் பார
பாலனென என்னுவலே தீர (சே)

(சுமிந்திரன்-தசரதனக்கு சொல்-விருத்தம்)

வான்மீன் களில்லா சந்திரன், வைசிய நில்லா ஊரு
மீசனூராதி நிவோர்வார்த்தை. தீரநில்லா தமங்கை
கோனிலாதுலகுபெற்றகுழவியில்லாத வீடு
மானிலம்தனிலேமன்ன மகிழ்விலாசெல்வம்தாமே

(வ-ம்) நக்ஷத்திறங்களில்லாசந்திரன். வியாபாரி

இல்லாவூரு. இன்பமில்லாவார்த்தை. பதியில்லாசதி. புத்திரநில்லா
மனை. இவ்வைந்தும்வீணல்லவோமன்ன

தசரதன். மந்திரிக்குசொல். விருத்தம்.

புத்திரநில்லாசெல்வம்பூவயரில்லா வீடு
சத்தியமில்லாசெங்கோல்சைனியமில்லா தீரன்
சுத்தமில்லாதனிஷ்டை சுகுணமில்லாத அன்பு
எத்திசைதனிலேவோங்கி இருப்பதால்பலன் தானுமோ.

(வ-ம்) மந்திரி சேயில்லா செல்வம் மாதரில்லா வீடு
நீதியில்லா செங்கோல் படையிலாவீரன் உள்ள ன்புயிலாதனிஷ்
டை. குணமிலாதன்பு-இவையாவும் வீண்தானேமந்திரி.

(பொதுவிருத்தம்)

மன்னனும்தசரதேந்தரன்நதரில்லாத வேஷ்டை
தன்னருகனிலேசூழும்சாலவரோடுரைத்துநெக் து
வள்ளியின்முன்னிர்வெண்ணிள்கைஎனஉருகும்போது
உன்னிதகுரு வசிஷ்டர்உலகுள்ளோர்மகிழவா ர்

(வ-ம்) இவ்விதம், மன்னன் தன்னகரில் சூழ்ந்திருக்கும் அமைச்சருடன் தனக்கு புத்திரனில்லா மனோ வேதனையை உரைத்திருக்கும் சமயம், தன்குல குருவாகிய வசிஷ்டமா முனியானவர் மன்னன் மனோவேதனையை நிவிர்த்தி செய்யும் படியாக வருகின்ற விதம் காண்க.

தருவு-தாளம்-ஆதி-ராகம்-தன்யாசி.

பல்லவி

நலம் தரும் வசிஷ்டர் வந்தார் — இந்த
நாட்டில் யாவர்க்கும் சிறந்த

அனுபல்லவி

தலத்தில் யாவர்ப் புகழ தண்டுகவண்டலம் கொண்டு
உளமகிழ்ந்திட பாதகுறடும் தானேறி பண்   டு — நலம்

சரணங்கள்

களிக்க புலிதோலாடை கனமா யிடையிற்கட்டி
இளைத்த மன்னனுக் கருளிசைய ஆவலாய் கிட்டி — நலம்
சிறந்த நெத்தியிலன்பாய் செழிக்கதிலர் தம்தானே
துறந்தவரெனமகிழ் தொல்லுலகன்   போனே — நலம்
இரவி குலத் தோற்குகிவழி சந்தனற்றவ   கு
பரவசமா அயோத்தி-பதி மகிழுமே   தரு — நலம்
தநி என கணியனூர் தாரக நாமந் தரம்
சதிருடனே கைக்கொண்ட சாந்த சீலனும் அந்தரன் — நலம்
(வசிஷ்டர் வ-ம்) துவாரகா நான் வந்தேனென
உன் மன்னவன் தவக்குரைப் பாயட

கட்டியன் வ-ம் நல்லதப்படியே,
(ஷை வ-ம்) அநேக மணி மகுடபாக்கு
(தசரதன்-வ-ம்) என்னடா சங்க   தி
(கட்டியன் வ-ம்) நமது கொலு முற்ப்பிர் வசிஷ்டமா முனிவர் வந்திருக்கின்றார் மானுபாவா.
(தசரதன் வ-ம்) மந்திரி நமது குருவை வந்திப்போம்
(சுமிந்திரன் வ-ம்) நல்லது பிரபு,

(தசரதன் வசிஷ்டருக்கு போற்றி செய் விருத்தம்)

சரண மென்குருவே அன்பாய் சாற்றுமோர் வார்த்தை கேளா
தருண மிவ்வடியேன் மீதே தயவு செய்தினி யீடேற்றும்
பிரண வளர்சுவயே, அண்டர் புகழும் முக்கனியே தேனே,
தரண முகமிழ்ந்தினி கண்பாரென் ஐயா கன்றினி தான்வோட



(வ-ம்) வந்தனம் குருவே இவ்வடியேன் மீது தயவது செய்து இவ்விடம் தேவரீர் வந்ததாலே சிலாக்கிய வானேனே இந்த தர்ப்பாசனத்தின் மீது எழுந்தருள்வா சுவாமி.

(தசரதன் சொல்-தருவு-தாளம்-ஆதி-ராகம்-சுருட்டி.)

பல்லவி

குருநாதா அருள்   தாதா
சர்ஞர் விந்த பரிபூரண னந்தம் — குரு

அனுபல்லவி

கருணாகர சுபகரகுண உன்னிரு கழல் தனக் கிணங்கினேனையா என்
கவலையை தீர்த்தருள் செய்ய காசினி துய்ய கண்பாரைய — குரு

சரணங்கள்

கதிதரும் பதிவுனை எதிளென மனமகிழந்
தநிவிதமாய் அதிபரத்திரா   வின
னமரர்கள் மனமகிழ காத்திரா
அன்பர்கள் சூசனு அரியினை நேத்திரா — குரு
மணிமகுட கனக பணியுரமணி   திரு
மருதேவனருள் உல்   லா   ச   சுன
மாதவம் செய்த பிர   கா   ச
மாசில வாசமான் மழுநே   ச — குரு
மனமகிழ்ந்துனை தடிதனெதன வணங்கினேன்
மாசிலா தமலர்   ளா   என்
மனக்கவலை   தீனே கே   ளா
மாதவ யாளா மாமகிழ் தோளா — குரு
பரமனருள் சிறந்த தரணிபுகழ் பரம
பாகவ நாசிகா   மணியே   கண்
பார்ந் தெனையாள் உன திணையே
பாலன் துணையே யாளெந்தனையே — குரு
(வசிஷ்டர்-தசரதனுக்கு-சொல்-விருத்தம்)
சீர்தருமுனது திவ்விய செங்கோல் தனக்கு கந்த
பார்ப் புகழ்மனு நன்னீதி பரிபால மினி சிறந்த
எழ்குடிகளு முனது இரவியின் குலாம அன்பாய்
பேர்ப் புகழ்ந்திடவே மன்னு பெருல கென்று வாழி

(வ-ம்) மன்னா இவ்வுலகம் யாவும் உன்திரு செங்கோல் உன்குல மும் யிந்த புல்லும் பூரியிருக்கும் பரியந்தம் நீடூழியாக வாழ்க்கடவா தசரத.

(தசரதன்-வசிஷ்டருக்குசொல்-தருவு-தாளம் ரூபகம்-ராகம்-எது குல காம்போதி)

பல்லவி

ஏனிந்த ஜன்மம் குருநாத ஏனிந்த ஜன்மம்

அனுபல்லவி

வானவர்ப் புகழ வையகத்திலோ ங்குத்
தானே மகிழுயிந் தாரணியை தாங்கி ஏனி

சரணங்கள்

கவலை மீறுதே சுதனென காதல் கோருதே என்
தவம தென்றீடேறும் சொல்லென் குருவே
கதியென அருள் விதியோ அருவே ஏனி
முப்பிறப்பிழையோ அல்லா திந்த
இப்பிறப்பழியோ தேவா
எப்பிறப்பி லெந்தன் னற்ற வம்மைகூடும்
உற்ற துயிந்திட சித்தம் தானுறிடும்
தஞ்ச மென்றேனே பொன்னடிக்கு
அஞ்சலி கோனே
சஞ்சலம் தீர்த்தாள் கொள்கஞ்சமலர்ருள
அஞ்சலி கணிய அரியருள் மேல ஏனி

(வசிஷ்டர் தசரதனுக்குச் சொல்-விருத்தம்)

அயனமைத்ததை விலக்க யாராலுமாகா முன் செய்
பயனபடியே நடக்கும் பாரத்தின் மீதுள்ளோர்க்கே
நயந்த மன்னவனே நீ தான் நலிந்தழுதினி தான் சோர்ந்து
தயங்கிடலாகா தின்றே தசரதபதி தம்பிரா.

(வ-ம்) நான் முகன் அமைத்த விதியின்படியே வரவர னுபவிக்க வேண்டும் நமதெண்ணத்தின்படி யாதொன்றும் நடவாதேயன்று.

(தசரதன் வசிஷ்டருக்குச் சொல்-விருத்தம்)

எக்காலம் இனி அய்யா இரவி என்குலத்திற்கித
தற்காலம் தனிலே அன்பாய் தாரணி தாங்க எந்தன்
பிற்காலம் தனிமே பிள்ளை பெறாத ஓர்மடனென்ன
முற்காலப் பழியோ யிந்த முச்சகம் பழிக் காளானேனே.

(வ-ம்) குருவே இந்த கதிரவன் குலமோங்கும் படியாக விளங்குவதென்றே சொல்லும் என் அய்யனே.

தசரதன் வசிஷ்டருக்குச் சொல்-தருவு தாளம்-ஆதி ராகம்பிலாரி

பல்லவி

இருப்பதால் என்ன சுகமே பெரியோரை நான்



வெறுப்பதால் என்ன பலமே

அனுபல்லவி

பெருங்கடல் புனல்வாரி குடித்தால் விடா தீரும்
பிள்ளை பிறந்த ஜன்மம் பேசின்பதிற் கேரும இ

சரணங்கள்

வண்மைமா மாவேனே அழகு கந்த
வளர்ந்தாலதி தாமேன் என்
எண்ணம தென்றீடேறும் என்குரு நாதனே
இக்குலத்திற் கோர் புதா நில்லாததேன் போதனே இ
மன்ன னெனப் பேர்ப்படைத்தேன் மாநிலத்திலென்
மலடு நீக்குவா யடுத்தேன் இனி
சின்னம் செப்பா தேனையே செய்வ தன்பாரமைய இ
சேவடிக்கு அடியேன் சேவித்திடவும் மெய்ய
வேதநாத பராவை அன்பாகள் தொழும்
வேண்டு மன்பர்கள் காரண மிக
காதலுடனே றுனை கதியென்றண்டினேன் கேளி
கணியா னகாரி தன்கருணை இல்லையோ பாரில் இ

(வசிஷ்டர் தசரதனுக்கு சொல்-விருத்தம்)

அலைகடல் சூழுமிந்த அகிலமே புகழும் மன்னா
இலவன்பஞ்சதிலும் லேசா யன்வீணே யலைபுகின்ற
நலமுடனுன்ற எண்ணம் நயந்துகை வசந்தாறுகும்
உலயினூ வாமழுவாதேய்வா தொவ்வாதின்றினி பொறுப்பா

(வ-ம்) கடல் சூழுமிந்த புவியிற் புகழாளின்ற எமன்னே நீ வீணவியாகூலம் கொள்ள வேண்டாம். உன் எண்ணமினி கைக்கூடும் தசரத.

(தசரதன் வசிஷ்டருக்குச் சொல்-விருத்தம்)

சேய்தனை பெறாத ஜன்மம் செழும் புகழில்லை க்ஷேத்ரம்
தாய் உரைக் கிணங்கா பாலன் தந்தை சொற்படியா வீரன்
பேய்தனமிக மேற்கொண்டு பெரியோரை வைவோனந்த
நாயினும் கடையாமென்ன நவில வீணுடலெடுத்தேன்

(வ-ம்) குருவே மந்தரில்லா மலடன் புகழில்லா க்ஷேத்ரம், தாயின் வார்த்தைக் கிணங்கா சுதன் தந்தை தன் எண்ணம் முடியாத புத்திரன் பெரியோரை இகழ்பவனும் இவை யாவும் நாயினும் கடைஜன்ன மல்லவோ சுவாமி.

பொதுவிருத்தம்.

குலகுரு அறிந்து கலைகோடு மாமுனிவரானேல
உலகுலோர் மகிழ்யாக மோங்கிடயத நிற்பிண்ட

புலனைதை மன்னன் பெற்ற பாவையக் களிக்கானதேற
தலத்துளோர் மகிழ மூவர் தானுமே கெர்ப்பமானாள்

(பிரசவேதை படலம்)

பொதுவிருத்தம்.

மாமகிழ கௌசலையாம் மாதுதானே மாகித்திற் பிரசவேதை மதிகமாகி
சோமனு தவதனமதே சோரநெஞ்சம் சோகமே மிகபெருக சகுணியாற்கு
ஏமனதாயிது வென்ன புதுமை என்றே
எண்ணுது மெண்ணி பலவாராய் நொந்து
காமவதனழகுடைய மாதரோடே
காத்தருள் எனைதா னென்ன கதறுவாளே

(கௌசலை சொல்-தருவு தாளம்-ஆதி ராகம்-நாத நாமக்கிரிகை)

பல்லவி

என்னமா சகிப்பேனடி என் தோழிமாரே என்

அனுபல்லவி

என்னமா சகிப்பேனடி என்னுள்ளம் வாடுதே
அன்னமே என்னமோ அடிவயிறுநோகுதே என்

சரணங்கள்

கால்கள் தடப்படுதே கன்னியரே இதென்ன
காண்கிலேனடி எந்தன் கருவிது மாழவதென்ன என்
இடையடி எனக்கினி இருந்திருந்து நோகுதே
இப்படிவருவா என்சொற்படி ஆடமாதே என்
அகமகிழ் கனியினென் காரியமாடுவீர்
அம்மா இனியான் தாளேன் ஆபத்தை கூறுவீர் என்

கௌசலை தாதிகளுக்குச் சொல் எண்சீர் விருத்தம்

சீர்பெறுமெனது தாதி செப்புவேனினிகே ளன்பாய்
மார்ப்புகழ்ந்திட கல்யாணம் பண்ணின மன்னனென்னை
சேர்ந்தணைந்திட வோர்தன சிம்மாசனத்தி லென்னை
சார்ந்திரு வெனவே மாதர் சைகையாய் நடந்தார் வேந்தன்
நேர்ந்தவரெனது நித்திரை நீங்கிட அங்கமெங்கும்
வேர்வை முத்திணையாய் சிந்தும்வேளை எந்தனை புணர்ந்து
தார்ப்பதி முகம் களிக்க தனதெண்ணப்படி நடத்த
மேற்கொண்டு முதலாய் கர்ப்பமேயது யானேனம்மா



கௌசலை தருவு தாளம்-ஆதி ராகம்-மோகனம்

பல்லவி

போதும் புத்ர சுகமே போதும் இனி

அனுபல்லவி

மீதுபதி சுகமெப்போது நான்வேண்டேனடி சகியே!

சரணங்கள்

ஓடி உலாவுதங்க மெங்கும் என்ன
நாடி சொல்லடி இனிமோடி செய்யாதே சகி!
தங்க ரத்தனருளின் முத்தாரம் அன்பாய்
தாரேன் கம்மலும் காகங்கண்முடன் சகி போ
தாங்கா என்னலாகா இவ்வேளை மிக
தஞ்சம் தஞ்சமநேக அஞ்சலி செய்தேன் சகி!
பாரோர்ப் புகழ் கணியனூர் தேவன் தனை
பிரார்த்திடுவீரவர் காத்தருள் வாரே சகி!

தோழி கௌசலைக்குச் சொல் விருத்தம்

தலைசுமை தானோ நீங்கள் தாங்கவு மெனது தாயே
பலவித வாரா எண்ணி பதறிட என்ன செய்வோம்
நலமது மிகமேலுண்டாம் நாயகி இனி அஞ்சாதே
தலத்துளோர் மகிழ்வதாக தனையனை பெறுவாயம்மா
(வ-ம்) தாயே நாங்கள் சுமக்கவும் தலையின் சுமை அல்ல இன்னும் சற்று நேரத்திற் மனம் மகிழும்படியாக ஓர் புத்திரனை பெருவாயம்மணி.

கௌசலை தாதிகளுக்கு சொல் அகவல்

பெருமை சேர்ப்புவியிற் கர்ப்பபிண்டமாம் முதல் மாதத்திற்
கருவது தரிக்க அன்றே களிப்புடன் இருந்தே னம்மா
மறுமாதத்திலே மயக்க மோடி நீ அன்பாய்
மண்ணதின் மேல் விருப்பமான ம்மா
மூன்றுவது மாதம் முகம் சிறித்தது தாடை
முல்லையின் மலர் நிகர்வெளுத்த தம்மா
நான்காவது மாதம் நயந்த என்னிரு கொங்கை
நாடி அன்றே கருப்பான தம்மா
பஞ்சமா மாதத்திற் பாங்கி என்னடி வயர்ப்
பாரிலே வருங்கானை புசித்த தம்மா
வஞ்சி ஆறுமாதம் வனிதை என் பிடி இடை
வயறுட னொன்றுக வளர்ந்த தம்மா

ஏழாவது மாதமேந்திழை கேளுமே
ஏவரையும் மதிர்காதே இகழ்ந் தெனம்மா
அஷ்டமா மாதத்தி லங்கமிக பாரமாய்

அன்னத்தின்மேல் வெறுப்பான தம்மா

நவமாதத்திலே நாளு விதமாய்
நானென்றும் தோன்றாமல் நகிந்தெனம்மா
தசமாதத்தி லென்றிரேக மிவ்வித மெனவும்
தெரிகிலேன் என் சகி தேற்றுவீரோ

கௌசலை-சொல்-தருவு-தாளம்-சாப்பு-ராகம்-சுருட்டி

பல்லவி

மந்த்ரசாளியை அழைப்பீர் மாதரே வோடி

அனுபல்லவி

சந்தரவதனியே யான் சகிக்க வசமல்லாடி
சுந்தர மென்னும் மங்கையை சுருக்காயழைப்பாய் தேடி

சரணங்கள்

பாங்காய் நேகளாய் பக்குவமே அறிந்த
பார்வதி எனும் மாது பாலி பாளினி அந்த மந்

அகிலம் தனிலெவர்க்கும் அறிந்து பக்குவமாக
ஆவலா அம்மையை அழைப்பீர் வேகமதாக மந்

கருணாகர கணியனகாரி தனை நாடி
சரணார விந்த மென சமயம் பதமே பாடி மந்

பொது விருத்தம்

நரைத்த கூந்தலுமே தொங்க நலமான ஊன்றுகோல் தன்
கரந்தனிற் பிடித்துக் கொண்டு கரிணிகர் னடையுளார்தன்
சிரித்த பல்லதின் மேல் காவி சொட்ட பாதமே தளர்ந்த
பெருத்த மேனியும் குலுங்க மருத்துவ கிழவி வீந்தாள்

மருத்துவ கிழவி வரும் -தருவு-தாளம்-ஆதி-ராகம்-காம்போதி

பல்லவி

மருத்துவ கிழவி வந்தாளே மனமகிழ்ந்து மரு

அனுபல்லவி

பெருத்த தனங்கள் ரெண்டும் பிரளம்ப வரைக்கும்



பெண்கள் கருத்தின்படி மனமகிழ் மகிழ்ந்துரைக்கும்

சரணங்கள்

தலைச்சன் பிள்ளைக்காரப்பணம் தானுண்டெனவும் பேசி
தாய் கட்டிய சேலையும் தனக்குண்டென கைவீசி மரு

கிண்ணி கன் சொம்புடன் கொடுக்கும் பழக்க முண்டு
கேழ்ப்பீர் பெரியோர்களை கிழவி சொல்தனை யண்டு மரு

நிறை நாழி நெல் நால் சேரு நல்லெண்ணை அரசேரு
அறை நாழி அரிசுடன் அளிப்பீரென் இவ்வாறு மரு

தொப்புள் பணம் ஒன்னரை துகை உண்டெனவும் கூறி
முப்பழ மமுதுடன் முனைந்திவிரென தேறி மரு
கவலை யணிகிடாதே கார்மேவாய் கணியனாரா
கரிவரதனை யருள் புரிவா எனவும் சீரா மரு

மருத்துவ கிழவி சொல் விருத்தம்

அப்படிபோவீர் சும்மா அலட்டி விட்டீர்கள் தாமே
இப்படி சூழந்திருப்ப தென்ன இங்கதி சயந்தான்
நற்படியாமே கண்ட நாயகி தனக்கே எந்தன்
சொற்படி அரைநாழிக்குள் சுதன தனை பெருவாளம்மா

(வ-ம்) அடியாரடி பெண்களா என்னடி கும்பல் கும்ப
லாக காக்கைகள் போல் கத்தி சூழ்ந்திருப்ப தென்னடி அதிசயம்
அப்புறத்திற் போங்கடி இன்னம் சற்று நேரத்திற்மோர் ஆண்
குழந்தை பெருவாளடி பெண்களா.

பொது விருத்தம்

தேன் மாரி பொழிய அன்றே தேவதுந்துமி முழங்க
வான்னாரியர் நடிக்க வாசவன்ரிஷிகள் தேவர்
தான் நேரிமலரிறைக்க தசரத னனேக நாளாய்
தான் கோரிய துகைக்கு தனையனும் பிறந்ததான் மாயன்

பொது-தருவு-தாளம்-ஆதி-ராகம்-காம்போதி

பல்லவி

சேயன் பிறந்தானம்மா சேல்விழியாள் தனக்கே

அனுபல்லவி

தாய் கௌசலையாள் மனம் தரணிதனிற் பூரிக்க

சரணங்கள்

கவுமிதி தியதனில் காரணனும் சிறந்த
சவுதிய தனில் ஜன்மம் சார்ந்தனரே பொருந்த (சேய)

சகல ஜன வைபவ சம்ரக்ஷ சண கரு ணா
சகலர்களும் புகழ சார்ந்தனரே பூர ண (சேய)

கருணையுடன் கடக கனத்த ருகியிற் தானே
கனிய னகர்வளரும் கரிவரதனென் போனே (சேய)

மருத்துவ கிழவி சொல் சிஸபத்தியம்

சுக்கு திப்பிலி மோடி செறித்த கோரோசனம்
சிறந்த லவுங்கமும் பூண்டு சாய மஞ்சள்
அக்கார கார மோடா சன்னுஷ்டக ம்
அருமையாம் வோமிளகினி வசம் பு

தற்காலம் வால்மிளகு தாளிச பத்திரி
ஞான பரிக்யும் வெப்பாலை அரிசி
லற்காலம் கடுகு ரோகணி அதிம்துரமும்
நலமான காயம் னேர்தும்ருஷ்டம்

நயமா இவ்வகை லரத்தறைத்து ஒன்றாய்
நாடிபனையுட திதனையும் உருண்டை சேர்த்து
உயர்த்த திருகணை நாதராடியிற் போற்றி
உண்டிட இவ்வவிழ்த மாதர்க் குத்தமமம்மா

(பொது-வ-ம்) இவ்விதம் காயம் கூட்டிய பின்னிற் கௌசலை சாப்பிட்ட பிறகு சிசுவை பார்த்து சொல்

தருவ-தாளம்-ரூபகம்-ராகம்-பைரவி

பல்லவி

அழவேண்டாம் பாலா அண்டர்க்கு மேலா அழவேண்டாம்

அநுபல்லவி

பழுதொன்றிலா தென்னையனே
பகரும் மாமலர்க் கையனே என்
பாலகா தேரா பரந்தாம னென்னும் கம்பீர (அழ)

சரணங்கள்

நாவினி புகழ்தியாகனே தருவும் மானுபாவனே
தான்யேனே நெருந்து தனபனே மனம் கவிந்து (அழ)

செண்பக மெனஸ்தயனே சிறந்த மாமலர்க் கையனே என்
சேயா தேம்பிட சிந்தைதான் தாளேனே அட (அழ)
கஞ்சமலர் ருளனேகவிதீர்த்த குணசீலா



சத்ருமே: அய்யா கணியனூர் வரத்தய்ய (அழ)

இதுவும் கௌசலை சொல் லாலிபாட்டு

சதுர்மறை தானுணர்ந்த அயன் மகிழும் சாந்தனே அழு
திடாதே சாமளாங் கென்னையனே ஜகம்புகழும் சாமி உன் கண்
வளரி-கதிர்குல மினிதழைக்க வந்த என் கண்மணி அழுதிடாதே-
கலிதீர்த்த என்னருமையாகிய கருங்குயிலே கண்வளரி
பலநாரு முனதாசையால் மனம் தளர்ந்தோம் பாலகா அழுதிடா [தே
பார்ப் புகழ் என சென்மீடேற்றிய பரந்தாம கண்வளரி
நலமான வேழ்வி செய்து நாங்களுனை நாடினோ மழுதிடாதே
நாரணனை னருள் மிகுந்த எனதைய நான் தாளேன் கண்வளரி
தேம்பி தேம்பினி மிகுந்த் தெள்ளமுதே தேகம் சோர்ந்தழுதிடா [தே
திகட்டாதே அமுதே எந்தன் கண்மணியே நெவுன் கண்வளரி
ஆம்பல்பூத் தடவி தன்னிற் பள்ளிக்கொள் ஆதியே அழுதிடாதே
அகிலமதை போராடியா யளந்த என் அப்பனே கண்வளரி
கருணைமென்னுளே கோர கண்மணி தயாபரா அழுதிடாதே.
சரந்த மென ளவர்க்கும் முந்தி தந்திடும் தனையனே கண்வளரி
கருணை பொழிய கணியனூர் வாழ் கரிவரத கனகமே அழுதிடாதே
காசினி உண்ட நாத அன்பர்துதி கர்த்தனே கண்வளரி

பொதுவிருத்தம்.

கலமான கௌசலை கைகேசி சுமித்திரை நாயகியாம் மூவர்
புலநாளும் பாலநிலா பதிவிரதைகள், செய் பாக்கியத்தால்
அலை துயன்றோன் சங்கு சக்ர புவி தாங்கும் சேடன்
கலைமாதர்க் கிவர் கருவாய் தான் பிறந்திட தசரதன் சொல்வானே

தசரதன் சுமித்திரனுக்கு சொல் விருத்தம்.

மதிமுக அமச்சமாரே மானிலத்தோர் களிக்க
சதிர்பெற சேயர் தாமே சன்மித்தாரென எல்லோர்க்கும்
வதிசயம் பெறவே சக்கரை வழங்கி பின் பாலர்க்கன்பாய்
கதிதரும் குருவால் நாமகரணமே சேயச் சொல்வீர்

(வ.ம்.) என்னருகில் சூழ்ந்த எனதாமந்திரி மார்களே எனக்கு நான்கு சேயர்பிறந்தாரென யாவரும் அறியும் படியாக சக்கரை வழங்கிபின் நமது குலகுருவால் பிச்சேயர்தனுக்கு நாமகரம் செய்யச் சொல்வீர் அமைச்சர் களே

இதுவுமது

சொற்படி யமைச்சர் தாமே சொன்னவார் நடத்தி அன்றே
நற்பெறும் குருவால் நாமகரணமே யமைத்தார் பின்னே
அற்புதமாக வித்தை யாவையும் குருவால் தேரி

தற்பரன் மகிழ்ந்திருக்க தருணம் கௌசிகனும் வாரான்
கௌசிகன் ஸ்ரீராமனை அனுப்பு மென்னும் படலம்.

பொது விருத்தம்

எத்திசை ராமன் தன்னை எவருமே புகழ விஸ்வா
மித்திரன் கேள்விப்பட்டு மேதினி தனிலே உந்தன்
புத்திரன் எனக்களித்தால் பொருந்துமென் வேள்வி என்றே
சத்திய குலத்தோன் தன்னை ஜல்தியாய்க் கேழ்க்க வாரான்

(வ-ம்) பூதலம் பாதலம் மேதலம் யாவும் தசரத சக்ரவர்த்தி தனக்கு புத்திரர் பிறந்தாரென புகழ அச்சமயம் விஸ்வாமித்திரன் கேள்விப் பட்டு அயோத்தியை நாடி வருகின்ற விதம் காண்க

தருவு-தாளம்-ஆதி-ராகம்-நாட்டை

பல்லவி

மாமுனி விஸ்வாமித்திர னென்பவனுமே இந்த
மகிதலத்துள்ளோர் புகழ் சுகருமனென மகிழ (மாமு)

அநுபல்லவி

சுவாமி என்றவரும் தினம் சரண மென யாவரும்
தாமதம் செய்யாதே வனம் தனிற் தவம் புரியும் தீரன்

சரணங்கள்

கருணையுடனே புவி களிக்கச் செய்திடும் சிலன்
அநுமான் குலத்தோர் தீரமரிந்து மகிழ் விலாசன்

தவமழிக்கின்றாள் பொல்ல தாடகி பாவி வந்து
அவமதியாகினதே அய்யோவென்வே னொந்து

களிக்கும் கனியங்கர் தசரதனை சேர்
அளித்தால் வி பிழைக்கும் அரசே தாவென கூற

(கௌசிகன்-வசனம்) அடா அடா அலங்கர்த ஆச்சரிய சிகாமணி (சேவகன் - வ-ம்) அய்யா

(கௌசிகன் - வ-ச) அடா காலநேமி அய்யர் நாமினி சாகேத நாட்டுக்கு மன்னனை நாடி சில வார்த்தை யாடி வருவோம் வாருங்களடா

சேவகர் வ-ம் நல்லதப்படியே போகலாம் முனிநாதா

கௌசிகன் கட்டியனுக்கு சொல்-வ-ம்

ஆரடா துவாரகா நான் வந்தே னென உனது அரசனிடம் உரைப்பாயடா (கட்டியன் வ-ம்) நல்லது

அநேக மணி மகுட அலங்கிர்த ப்ராக்கு வந்தனம்

(தசரதன் வ-ம்) என்னடா சங்கதி கட்டியம்



(கட்டியன்-வ-ம்) யாரோவொரு முனிவந்த துபிரபு
(தசரதன்-வ-ம்) ஆனால் தாரத்திவிடும் நல்லது
(கௌசிகன்-வ-ம்) என்னடா சங்கதி
(கட்டியன்-வ-ம்) முனிவரதென்றேன் தாரத்திவி டென்றார். போம் போம் வந்தவழிபிடித்து
(கௌசிகன்-வ-ம்) அல்லடா விஸ்வாமித்திர மகாமுனி என உரையடா. நல்லதப்படியே
(கட்டியன்-வ-) கதிர் குல பதிகன மணிமகுட வந்தனம்)
(தசரதன்-வ-ம்) என்னடா சங்கதி கட்டியம்
(கட்டியன்-வ-ம்) அம்மா நமது சிங்கத் துவாரத்திற்கு முன்னேயாரோ ஒரு விசுவாசமில்லாத முனிவந்தது
(தசரதன்-வ-ம்) விஸ்வாத்திரரோ.
(கட்டியன்-வ-ம்) ஆம் ஆம் அதுமெய் அரைதட் செய்
(தசரதன்-வ-ம்) மந்திரி முனிவரை வந்திப்போம் வாரும்
(சுமித்திரன்-வ-) நல்லதுபிரபு

(தசரதன். போற்றி விருத்தம்)

உலகெலாம்புகழும் கீர்த்திஒப்குனற்றவமே போற்றி
பலகியான மனுனன்னீதிபாலிக்குஇ வமுமே போற்றி
நலமான தேவாயிங்கே காடிவந்தது ஞலென்னும்
திலையாதவினைகள் றேன்தய்யமா முனியே போற்றி

(வ-ம் திருலோகங்கள் யாவும் புகழா நின்ற தேவா அடியேன் மீது தயவது செய்து தேவரீர்வந்தது எளியேன் செய்பாக்கியம் இதார்த்த ஞானேன் இந்த தர்ப்பாசனத்தின் மீது எழுந்தருள்வாய் சுவாமி

கௌசிகன் -வ-ம் நல்லதப்படியே மன்னா

வாது-தருவு-தாளம்-ஆதி-ராகம்-கமாஸ்

தசரதன் வினா

வந்தனம் மகிபாவளரும் பிரதாபா
சிந்தை மகிழ்ந்தேன் பூபா சேவடி தாச ரூப தீப (வந்)

கௌசிகன் விடை

சிரஞ்சீவி மன்ன சீர்ப்பெற வாழ்வாய் துன்ன
கரங்கு வித்தே சொர்ண கழலிர் போற்றி என்ன பன்ன

தசரதன் வினா

என் பாக்கியம் மாமுனியே எங்கே வந்தீர் தனியே
அன்பா எனக்குரையே அருமை சர்க்கரையே ஆயே (வுன்)

கௌசிகன் விடை

அருமை நம்கை வாள அவனயிற் ஸ்ரீராம
தருணம் நானே மீள தநி என்கீ கேள் ஆன

தசரதன் வினா

மீளா பழிய தென்ன மேன்மை கொலுவின் முன்ன
கேளாயான் செய்கவன் தன்ன கௌசிகரே சம்பன்ன

கௌசிகன் விடை (இன்ன (மீளா)

பன்னுமாமறை சாரம் பாலிப்ப தந்தன் பாரம்
நன்மை வளர் வில்தாரும் நான் கேட்ப அருள் தாரும் கூறும்

தசரதன் வினா

அருளென்ன என்னாலே ஆகும் வேலை சொல் ஆமே
இருள் கொண்டுரைத்தாலே ஏழையறியேன் காலே சாலே

கௌசிகன் விடை

களிப்பா நீ யீன்றேனே கன்னியனார்க் கன்போனே
அளிப்பா ராமன் தானே அரக்கியை வெல்வானே தானே

தசரதன் கௌசிகனுக்குச் சொல் விருத்தம்

அரக்கியை வெல்வதற்கே அறியாத பாலன் றன்னை
பெருக்கவே யனுப்பு மென்றே புகலுமா முனியே கேளா
செருகளம் தனிலே சண்டை செய்யுமாற்றி ரண்மகா றேள்
கரித்தகை விடுவாய் நானே கண்டிப்பே னெழுந்து வாராய்

வசனம்

தேவரீர் செய்யா நின்ற வேழ்வியை அதம் செய்ய வரும் பாதகியை சம்மரிக்க சிசுவால் முடியாது யான் வந்து தம்து வேழ்வியை நிறைவேற்றி தருகின்றேன் தயவு செய்து எழுந்தருள்வாய் மாதவ முனியே

கௌசிகள் தசரதனுக்கு சொல் விருத்தம்

கண்டிப்பேன் வாரு மென்றே கடினமா யுரைக்கு மன்ன
தண்டிக்க அவுணர் தம்மை தேவ மாமுனிவராலும்
எண்டிசையதி பராலும் யாகாது ராமன் வில்லால்
துண்டு செய்திடுவேன் நீயே துரிதமா யனுப்புவாயே

வ-ம் யேமன்னு அந்த அரக்கியை வெல்வதற்கு உன்னாலும் தேவராலும் முனிவராலும் மற்ற யாவராலும் முடியாது உன் சேயனால் முடியும் ஆகையால் நீ வீண் வார்த்தையாடாமல் ராமனை அனுப்பும் மன்ன

தசரதன்-தனி-தருவு-தாளம்-சாப்பு-ராகம்-காம்போதி

லாவணி

ஐயா என் சேயன்தனை அனுப்பு மென்றுரைத்தீரே
அறியா பாலகன் சுவாமி
பொய்யா என் உரை யின்று புகலுவதினால் கோபம்
பொருத்தாள் கொள்ளுவீர் சுவாமி அவன்



கையில் வில் பிடித்தறியோ பாலன்தானே
கருணைபுரிவாய் சுவாமி மனம்
நொய்ய செய்யத்தகா தெனின்னடிபணிந்தேனே
நீவருகுவாய் சுவாமி அவன்
அன்னைமடியில் விளையாடும் சிறுவன்தன்னால்
ஆகாததுவே சுவாமி தேவ
பிள்ளை பல்லிருந்தின்னம் நன்றாய் முளைத்தறியேன்
பெருமாள் சிறுவன் சுவாமி நாளில்
நன்மையுடனே யாகம் நான் முடித்திடுவேன் பார்
நாட்டிற மகிழ சுவாமி அங்கே
துன்மை செய்யாக்கரை துண்டம் படவே செய்வேன்
தூய்யா முனியே சுவாமி இன்னும்
ஐயமே னுனக்குப்போ அடிக்கின்றேன் படை கொண்டு
அகிலம் களிக்க சுவாமி இனி
வையும் செய்யத் தகாதே அய்யா கௌசிகரே நீர்
வாரீரும் வாரும் சுவாமி அந்த
விண்ணரசனுடைய எண்ண மீடேற்றி என்
வீரமிலையோ சுவாமி என்
கண்ணன் களிய நகர் வண்ணன் போர் செய்தறியான்
களிக்க வருவாய் சுவாமி

கௌசிகன் தசரதனிக்கு சொல் விருத்தம்

வந்தரு ளென்றுரைத்த வல்லமை யுடனே மன்ன
உந்த னாலாமோ அந்த உரம் கொண்டவளை வெல்ல
எந்த னாலான மட்டும் எத்து எத்தனையோ செய்தேன்
மந்தனால் முடிப்பேன் வேழ்வி மகிழ்ந்து ராகவனை தாரா

(வ-ம்) என்னை வருவா என்னும் வேழ்வியை நீ முடித்து தருவே னென்னும் யேமன்ன அந்த பாக்கியை வெல்லலாமென்றெநான் எத்தனையோ தந்தர இந்தர மயேந்தர ஜால வித்தைகள் செய்தும் என்னால் அவளை வெல்வதற்கு முடியவும் இல்லை நீயேன் வீண் கோலம் கொள்ளுகின்றாய் பேசாமல் ராமனை வரவழைத்து என் பின் கூட்டி அனுப்புவாயே மன்ன

கௌசிகன் பிசரதனுக்கு சொல்-தருவு-தாளம்-ஆதி-ராகம்-அடாண

பல்லவி

நீ யோசத்திய குலத்தோன் தசரதனே நீயோ

அனுபல்லவி

பேயோட்டும் பாவனை பேசும்விதம் மெவ்வாது
வாய்முட்ட என் கோபம் வந்தால் மிகபொல்லாது நீயோ

சரணங்கள்

பித்தபிடித்தவராய் பினத்தும் விதம்விட்ட
புத்திரன் எனக்களித்தால் பொருந்துவேள்வியட்ட நீயோ

அரக்கரை வெல்வேனென்ன அடம்செய்கின்றுவில் தாங்கி
பொருக்கமாகாதட்ட பேதமதியால் யோங்கு நீயோ

அண்டர் முனிவர்கையாலாகா தவரை வெல்ல
எண்டிசையதிபரால் ஆமோ அவரைகொல்ல நீயோ.

கன்னல் வளர் கனிபனன்னகரிதனையே
உன்னிதமுடன் அனுப்பவோங்கும் வேள்விதநீயே நீயோ

(தசரதன் கௌசிகனுக்கு சொல்-விருத்தம்)

தாய்முலைசுவையே மைந்தன் தான்மாறவில்லையே எந்தன்
சேய்தனை அனுப்புமென்றே சிக்கவேண்டாம் பொல்ல
பேய்தனை கொல்லும்தந்தரம் பிள்ளை தானறியானந்த
தீவினை அரக்கர் ஒட்டாநிலை செய்வேன் கூறுயே

(வ-ம்) அய்யாமாதவமா முனிவரே என் சேயனுகினவன் கரத்திற் வில்பிடித்து போர்ப் புரிவதற்கும் தெரியான் மேலும் தன் தாயார் அருள்கூர்ந்து தந்த முலைப்பால் மணமும்இன்னமும் மாறவுமில்லை ஆதலால் தேவரீர் கோபம்செய்யாமல் வாரும் நான் தமதுவேள்விதனக்கு வோர் விக்கினம் நேரிடாமல் பாதுகாக்கின்றேன் சுவாமி.

(வாது. தருவுதாளம் சாப்பு-ராகம் கமாஸ்)

கௌசிகன் வினு

இனியேனோவீனின் கோலம்யேன் செய்கின்றனீயேமேலும்
மன்னு இனி பண்ணுதிலி துன்னவருவாதா லென்ன (இனி)

(தசரதன்-விடை)

வந்துன் வேள்வியைமுடிப்பேன் வரும்பாவியை ஒழிப்பேன்
சிந்தைதேறவந்தேபாரஎந்தன் வீரமுந்தேகோர (வந்)

(கௌசிகன்வினு)

முக்திதரும் ராமனையேநத்தி நானழைக்க நீயே
கத்துவதுசத்தாகாது எத்தாபிரமை பித்தாயி து (முக்தி)

(தசரதன்-விடை)

இனியென்ன செய்வேனு னெவன்னிமுன் வெண்ணாதி னே னே
தனையனைதாவென் றெனை முனி நின முகழ்ந்தா னே (இனி)

(கௌசிகன் தசரதனுக்குச்சொல்.விருத்தம்)

அறிவேனுன் திறமைதானே அங் கனம்செல்லாதின் றே
வருவேனென்றது வொவ்வா தென் வெண்மை நற்றவமீட்டிற்றி



தருவேனென்பது தானேது தனையனுல் முடிப்பேன்வேள்வி
யருவேன்றா தனையாட மன்னவா எனக்கொப்பாரே.

(வ-ம்) மன்னு உன்திறமை யானறியேனு நன்றாய் அறிவேன் நீவீண் கோலம் கொள்ளாமல ராமனையனுப்பும் மன்னவா.

(கௌசிகன் சொல்-தருவு தாளம் ஆதி-ராகம் பிலாரி)

பல்லவி

ஆஹா இன்ன மௌனட்டமாயே மன்ன
அனுப்பாதிருப்ப தி னி ஆ

அனுபல்லவி

ஓஹோ உன் இந்திரஜாலம் வோங்குமெனவு மென்முன்
ஓதவீண்வாதசொல் குதவப்பொப் பாத ஆ

சரணங்கள்

வீரனோர்களனவரும் தானோர்களால் நடுங்க
வெத்தவீண பித்தா நிகத்தாதினிதா ஏத்த ஆ

மோடிசெய்வதேது நான் நாடும் பொருளதுவே
மோனமென்ஞான சுக்யான மென அறிய ஆ

எத்திசைகளதிர கத்தும் பாதகரையே
சித்திரவதை செய்குவான் புத்ரன், வந்தாலிங்கியே ஆ

(கௌசிகன் வ-ம்) அடாகாலநேமி மன்னன் தனது சேயனை அனுப்புகின்றான் இல்லையா அறிந்துவருவ

(காலனேமி சொல்-தருவு தாளம் வீதி-ராகம் பைரவி)

பல்லவி.

அடமா மன்னு அனுப்பாதிருப்பதடமா மன்னு

அனுபல்லவி

தடைசெய்தால் கோபம் தான் வருமினி சாபம் அட

சரணங்கள்

நிஷ்டூரமாய் வீண்காலம்
கெட்டு செய்கின்றாய் மேலுங் அட

ஜாலம் செய்யவீ ணே
பாலனென்றாய் தா னே அட

பார்வோர்ப் புகழக் கனிய
னார்க்கரி அரி எனவே அட

இதுவும் காலாக்கினி சொல்-தருவு ஆதிதாளம் ராகம்-காம்போதி

பல்லவி

மன்னு அனுப்புவதற் கென்ன யே மன்
நீ பன்னு வீண் சொன்ன யே மன்

அனுபல்லவி

நன்மை எங்களாண்டவன் நாடும் உரைக்கே நீயும்
சின்னம் சிறுவனென்னும் பின்னும் முன்னும் பார்க்கும்யே

சரணங்கள்

கோபங் கொண்டு முனிவன் சாபமுனக்கிட்டோமுன்
பயனாச்சனெ பிரகாச முடன் யிக்திட மன்

வானம் புவியோர் புகழ்தானும் கணிய நகர்
தீனதயாளனை சுக்கியானி பின்னிற் கூட்டியே மன்

(தசரதன் வ-ம்) மந்திரி நமது குல்குருவும் காணோமே என்ன செய்யலாம், (ம. வ-ம்) நம்மாலென்ன வாகும் ராஜ பரமேஸ்வரா (போது வ-ம்) மன்னவன் எண்ணம் கொள்ளும் சமயம் வசிஷ்டர் வருகின்றவிதம் காண்க.

(தருவு தாளம்-ரூபகம் ராகம் தோடி)

பல்லவி

வந்தாரிதோ குலகுரு வசிஷ்டர் தானுமெ வந்

அநுபல்லவி

சிந்தாகுலம் தனேயே போக்க
சிறுவனை தவமுனிபின்னுக்க வந்

சரணங்கள்

அரிகமோ நாராயண வென்றகமதிர் நாடி
ஆதிமூல பிரணவமென அக்ஷரம் பாடி வந்
பார்ப்புகழும் தசரதனர் பாதை நீங்கிட வந்
பரமபாகவதனென்னவு பலரும் நோக்கிட வந்
கணிய நகர்தனிர் வளரும் கர்த்தன் பாதமெ
கனவிலும் மாறாத சிலகியானபோதமெ வந்

(வசிஷ்டர்வ-ம்) சேவகா நான் வந்த சங்கதியைமன்னனுக்கு உரைப்பாயடா (நல்லது அனேக மணிமகுட அலங்கிரத பராக்கு)

தசரதன்வ-ம் என்னடா சங்கதி
சேவகன்வ-ம் நமது குருவாகிய வசிஷ்டர் வந்தார்

(அரசன் தருவு தாளம்-ஆதி ராகம்-ஆரபி)

பல்லவி

குருவே நற்குருவே என்குருவே நற்றவ

அநுபல்லவி

மருவ சுகம்தரும் மன்னுருவே திருவே என் குரு

சரணங்கள்

மாமுனிகௌசிகள் மலரடிபோற்றி
மாசிலாத திருமா மலர் சாற்றி
சோமவதன வந்தவரிளப்பாற்றி
சொல் வீரென் றடியேன்றுதித் தேற்றி என் குரு



போற்றி செய்தருளென புரவல உந்தன்
புத்திரனெனக் களித்திடுமென பந்தம்
சாற்றி ஞானி விடேனெனக் கவன்சொந்தம்
சுவாமி முனிவற் கென்சொல்வே னனுபந்தமென் குரு

பந்தம் செய்யா தென் பாலனை நாடி
பணிந்தே னவரடியிர் பலவிதம் பாடி
உந்தன் பின் நான் வருவேனென மோடி
வோங்கு நாரெவ்விதம் வோதுவேன் தேடி என் குரு

சிறுவன் சமர் முகத்தின் சைகையும் தெரியான்
சிந்தை கலங்கு தெந்தனையவன் பிரியான்
திருகாத்தினிர் சரம் பிடித்துமே அறியான்
தேவகணியனன் நகரிசிரியா னென் குரு

(வசிஷ்டர் வ-ம்) மன்னா நீ வியாகூலம் கொள்ளவேண்டாம் நான் விஸ்வாமித்திரனை வினவி வருகின்றேன்.

தசரதன் வ-ம் தமதருளின்படி செய்வீர்குருவே

வாது-தருவு-தாளம்-ஆதி-ராகம்-அடாணா

(வசிஷ்டர் வினா)

சற்றேபொறும் விஸ்வாமித்திரா வெகு
சமர்த்தனென்கா தீபன் தனக்கெபிறந்தபுத்திர சற்

எத்தேசக் காலமுன் உத்தேசப்படியாமென்
றிடும் புத்தனத்தாலடட வுன்மடத்தனம் தான்விடட
ராமனை பெத்தோன்தனக்கெ நல்லபிரியமுரை கூராமல்
கத்துவதென்ன நீ வந்த காரியமதை தேருமல் சற்

கௌசிகள் விடை

தேருவதென்னட வசிஷ்ட அந்த
தேரும் களிக்கும்.வேசிதனக்கெ பிறந்த பிரஷ்ட தே
பேருலகில் சக்கிலி தன்பெண்ணை மணம் புணர்ந்தவ
பினத்தாதுன் வாய்தான்மூடட உன்பவிஷி அறிவேனுனட
இந்த தாரணியில் திருச்சங்குதனக்கே பதவியீந்தேன்
தானரியாஉன் மந்தனா தடையன்றிநீராய்கெய்தேன் தே

வசிஷ்டர் வினா

மடயத்தனமாய் பேசினாய் திருச்சங்கு தன்
மந்தனோர் பொய் சொல்லாததால் சிந்தை தளர்ந்தே கூறின
திடந்தரும் வேழ்வியிர்முன் அடைந்த மேனகையாலுன்
தடம் விட்டணைவிலேயா சகுந்தலையச்சமயம் பிறக்கவிலைய
படையோடு வந்த கானில் பசியாரும்படி அன்னம்
படைத்தோற்கினி ரெண்டோகம் பண்ணவிலையடட பின்னம்

கௌசிகர் விடை.

மதம் கொண்ட மாபாதக வேழமாதிகளை
மதிக்கா தழிக்கின்றுளே பகைக்கும்படி தோதகி [illegible] மத
பதம் தரும் பூமிபாரம் தீர்க்கவந்த ஆண்டவனை
பாலனென்றரச னென்னுறான் மிககோலம் கொண்டுளமே
[illegible] குன்னுறான்
அந்த சுதம் பவனமே நியாயம் கணிய ஹரில் வாழ்கிரு
[illegible] கர்த்தன் வலதுங்க தந்த துற்று பார்த்திடுமே தரு [illegible] மத

(வசிஷ்டர் வ-ம்) கௌசிகா உன் எண்ணத்தின் படியே
மன்னனுக்கு உரைத்து ராமனை அனுப்புகிறேன்
(கௌசிகன் வ-ம்) நல்லதப்படியே செய்யும்

வசிஷ்டர் தசரதனுக்கு சொல் விருத்தம்

மன்னு உன் தனையனுக்கே மாபாக்கிய வசமேலாகும் மன்னு
மாமுனிவன் புறனே மைந்தனை அனுப்புவாயே

(வாறு தருவு தாளம்-ரூபகம் ராகம்-கமாஸ்)

வசிஷ்டர் வினா.

அனுப்புமினி யோர்த்தடை செப்பாதுன் அருமை பால் நால்
அருமுனிவன் பேர்க மீட்டிரும் தியாக குணன் வைபோகனே கேள

தசரதன் விடை. [illegible] ராய

குழந்தை சிறுவனு தலால் உளம் கொதிக்குதே அய்யா
கூறுமே தயைபாரும் மைந்தனை சேரிவர் பின்னே சஞ்சலம் தீர்த்தா
(ருணமை

வசிஷ்டர் வினா.

உந்தனால் சம்பூரியவும் ஒன்றேவாக்காதே மன்னா
ஓதினேன் உனக்கியாதும் அறிந்துள்ள தீதென்ன உளம் தளர்ந்து
[illegible] (நீ சொன்ன

[illegible] தசரதன் விடை [illegible]

சொல்லு முறையில்லல்லப்படுத்தி குணனே கேளாய்
சேருமே நெஞ்சமார்வமில்லை சுத்தனமேருளா சுகம்தர ஆள
இதுவும் வாறு தருவு தாளம்-ஆதி ராகம்-நாதநாமக்கிரியை

வசிஷ்டர் வினா.

[illegible] ஏன் சொல்தரனே பூதலத்தினினி தானே
அரிய சொல்லுவன் கேள்கோனே அனுப்புமுந்தன் மைந்தனை
[illegible] தசரதன் விடை [illegible]
அனுப்ப மனம் வல்லையே அறியேனிந்த கொல்லையே
எனக்கு கந்து சொல்லேனையே மேயிந்த சள்ளையே



வசிஷ்டர் வினா.

சள்ளையல்லா நீயன்ன சஞ்சலமிதொண்டே நீ சொன்ன
[illegible] வள்ளலே ராமன் மன்ன வைகுந்த வந்தனென்ன

தசரதன் விடை.

சொன்ன உரை தப்பாதே [illegible] தனை [illegible] போதே
பின்ன னுப்புவேன் வேதெபொருந்தே னென்குல் சீர்தே
[illegible]

(௰) தசரதன் வசிஷ்டருக்கு சொல் விருத்தம் [illegible]

வையகம் புகழ் பெற்றோங்கும் வசிஷ்டமா முனிவரே நான்
செய்தவபலனே அய்யா செப்பியப்படி தானென்ன
மேமவண்ண ராமன் றன்னை மாமுனி பின்னே கென்றேன்
[illegible] அய்யா மொன்றணுகாதன்பாய் அனுப்புவேன் நின்கோனே

[illegible]

(வ-ம்) வந்தனம் குருவே ஸ்ரீராமனை தமதருள்படியே
இந்த விஸ்வாமித்திரர் பின்னனுப்புகின்றேன் சுவாமி

(௰) (வசிஷ்டர் வ-ம்) தடை செய்யாமல் அனுப்பும்

(தசரதன் வ-ம்) தடையிராது குருவே

[illegible]

[illegible] (தசரதன் மந்திரிக்கு சொல்கவி) [illegible]
[illegible]
என்னரியணிமேல் சூழும் இசைந்த மந்திரியே கேள்
என்னகர்ப் புகழும் ராமநாதனை வரவழைப்பாய்

மந்திரி சொல்-கவி. [illegible] (வ-ம)

[illegible] தன்னிகரில்லா தெங்கள் தசரதபதியே கேளாய் [illegible]
[illegible] என்னகர் புகழ ராமநாதனை வரவழைப்பேன் [illegible]
[illegible]

பொது விருத்தம்.

ஐயன் தசரத பூபதி அழைக்காரேன் [illegible]
மறைக்கு மவ்வார்த்தை கேட்டு [illegible]
மேகம் வண்ண நிறம் போன்ற மாயனன் [illegible]
[illegible] எழுந்திருந்தார் மாதவர் முன் [illegible]
செய்தவங்க ளீடேற சுரிதியே ரெதிர்க்க [illegible]
கொண்டோடி சுபமேன்றேக
வையகத்தி லுள்ளோர்க் களிக்க ராமன் [illegible] (வ-ம)
[illegible] வந்தானவர்க்கும் சேவை தந்தானே [illegible]
[illegible]

தருவு-தாளம்-ஆதி-ராகம்-காம்போதி

[illegible]

பல்லவி.

ஐயன் சகுடி இதோ வந்தார் [illegible]
அருமறை புகழ் தரை இனி சிறந்த

அனுபல்லவி

வையகம் படைத்தருளி மிகுந்த
வானவர் துயருற்றிட சிறந்த (ஐய)

சரணங்கள்

பணிசயன மதனைதனை நீக்கு
பாரினில் தசரதன் குறை போக்கி
இணைவிடா தம்பி தன் குணமாக்கி
இருவருள மகிழ்ந்து தனதாகி (ஐய)

வருந்து மாமுனிவர் தன் குறை யோட்ட
வல்லரக்கரைதன் சரம் பாட்ட
சிறந்த கௌசிகன் வேழ்வியை மூட்ட
சீர் தரும் கர்ப்பத்மது காட்ட (ஐய)

மன்னவனுள மகிழ்ந்தினி தழைக்க
மானிலம் தனிலெவரும் செழிக்க
நன்மை வளர் கணியனூர் தழைக்க
நாடும்யிலகு காதனை ஒழிக்க (ஐய)

(ஸ்ரீ ராமர் பிதாவுக்கு போற்றிய விருத்தம்)

தாரணி புகழ் பெற்றோங்கும் தந்தையே வந்தனம் காண்
வாரணம் சூழுகின்ற வையகம் தனிலே அன்பாய்
நீரணிக் கடவுள் றன்னை நினைவிலும் மறவா கோவே
காரண மெனவோ தங்கள் கருத்தி சந்துறை திடமே

(வ-ம்) நெடிய கடல் சூழு மிந்த உலகிற் புகழ் பெற்றோங்கும் எனதையனே தமது பாதார விந்தம் தனக்கு அநேக வந்தனம் தேவரீர் இச்சபைக்கு எளியோனை அழைத்த காரணம் அருள் புரிவீர் பிதாவே.

இளையோன் போற்றி விருத்தம்.

தண்மை நற் செங்கோலேந்தும் தந்தையே நின்
வண்மை நற் கொலுமி லின்றே வரவழைத்திட்ட சேதி
உண்மையாயிசைந்துரைத்தால் உத்திரப்படியே செய்வோம்
விண்மணி முக மலர்ந்து விபரமென்றருள் கூருயே

(வ-ம்) தன்மை பெருகும் செங்கோல் கை கொண்ட எனதையனே இக் கொலுவில் எங்கள் தனை அழைத்த காரணம் யாது சொல்வீர் தந்தையே.

தசரதன்-சொல்-தருவு-தாளம்-ரூபகம்-ராகம்-பைரவி

பல்லவி

துரையே யினி வருவாயடா துரையே யினி வருவாயடா



அனுபல்லவி

பெருவாரி சூழப் புவியோர் மகிழ்
மருவே திரு தருவே அருவே (துரை)

சரணங்கள்

கலிதீர்த்த என் கனனெ தேனே
கதிரோன் குலத் தோனே
நலமேதரும் இனி அன் போனே
கானே மகழ்கோனே தானே (துரை)

புகழும் கோவளமே நிர
பூர்ண சந்தரா பிம்பா தர
நிகரில்லாத குண கர
நீலாவர்ண தயா பர (துரை)

கணியனன்னகரா வாச
கருணை செய்குவா நீ யீசா
பணி செயன அன்பர் பிரகாச
பாலா சீலா சர்வேச (துரை)

(ஸ்ரீராமன் பிதாவுக்கு சொல் கவி)

அறிந்திட உரைதிட உரைப்பர் எங்களப்பனே தமது எண்ணம்
பொருந்திடயினி தான் செய்வோம் போற்றினே யடிக்கே யோற்றி

(தசரதன் ஸ்ரீராமருக்குச் சொல் விருத்தம்)

ஜெயம் பெரும் வேழ்வி தன்னை செய்திட விஸ்வா மித்திரன்
நயந்திடும் வேளை அங்கே நாடி தாடகியும் வந்து
பயந்தருற் குணங்கள் காட்டி பாழாக்கு கின்றாளிங்கே
தயங்குமா முனிவர் பின போய் தான் முடித்தினிவாரீரே

(வ-ம்) திருலோகங்கள் யாவும் புகழா நின்ற யெனது சேயர்களே இந்த கௌசிக மகா முனிவர் பின் தொடர்ந்து போய் அவருடைய வேழ்வியை முடித்து வருவீர்

ஸ்ரீ ராமர் பிதாவுக்குச் சொல் கவி

அண்ணலே தமது வார்த்தைக் கட்டி யொன்றுண்டோ யிந்த
வண்மை மாமுனிவன் பின் போய் வருகின்றோம் அருள் கூருயே

தசரதன்-சொல்-தருவு-தாளம்-சாப்பு-ராகம்-சுருட்டி

பல்லவி

நீ போய் வருகுவாயே தம்பி தன்னுடன்
இரிடி என் வேழ்வி முடிப்பாயே

அனுபல்லவி

தீபோல் முகம் சிவந்து திகழச் செய்கின்றாரென்னை
திங்களொளி வதன மங்களகார பின்னே (நீ)

சரணங்கள்

யாகம் தனை அழிக்க குரூர பொல்ல
அவுணர் வருகுவார் சுமபீர முனிவன்
போக மழிந்திடாமல் இனி செய்குவாய் நீதிர
சோக மெனக்கனுக ராகசயன தேர (நீ)

அட்டகாசமே செய்வாள் தாவி விண்
அண்டமொடுக்க பேய்போல் கூவி வரும்
துஷ்டர் தனையே அங்கெ நண்டு செய்வா அம்மேவி
துலங்கும் கதிரோன் குலம் விளங்கும் முனிபின் மேவி நீ

பதட்பாதானவர் செய்வார் சூது தனை
பார்த்து திகைத்திட ஒவ்வாது நீங்கள்
பிதப்பாகவே பின் போக அது தகாது
பெருமானே கணியனார் கிராகவ இப்போது (நீ)

ஸ்ரீ ராமர் (வ-ம்) தமதருள் படியே போய் வருகின்றோம் பிதாவே

தசரதன் கௌசிகனுக்குச் சொல் விருத்தம்.

சரணம் கௌசிகரே ஞானே சாற்றுமோர் வார்த்தைக் கேள
சரண மாமதிலே இந்த அரியாத பாலர் தன்மேல் (ரய்
கருணை செய்தினி னீமைய கார்த்தருள் செய்வீர் இந்த
தருணம் உன் கையிற் தந்த தனையரை கார்த்திடீரே

(வ-ம்) வந்தனம் சுவாமி இச்சேரியருவர்கள் தம்து சேயபென பாவித்து யாக பரிபாலனம் செய்து எப்போதும்போல் என்னிடம் சேர்ப்பாய் முனிநாதரே

கௌசிகன் வ-ம் மன்னா உன் சேயருக்கு யாதொரு இடையூறுநேரிடாது நீ வியாகூலம் படவேண்டாம் மன்னா

ஸ்ரீராமர் கௌசிகனுக்குச் சொல் கந்தார்த்தம்

திடம் பெரு முனிவரே உன் திருவடி போற்றி பொல்லா
அடம் செய்யும் அவுணரே நாம்ந்தக னுலக மேற்றி
தடம்பெற வேழ்வி தன்னை தான் முடித்திடவு மந்தி
இடம் தனக்கேகுவோம் இனி வருவாயே மன மகிழ்ந்து
இன்பமா நீயே பொல்ல வதிதையவளால் மனம்
வாடா இனி தானைய பணிகுலம் இரவி முன் முணைந்த வாரது
பகலோனுல உலகினிலே சுகம் தர (செய்ய
புகந்து மாதவம் மகிழ்வா செய்திட (இனி)

கௌசிகன் ஸ்ரீராமருக்குச் சொல் கந்தார்த்தம்

வந்தருளென் றுறைத்த வல்லமை யுடைய பாலர்
அந்திர முனிவர் தேவரகிலத்திலுள்ளோர் பாரும்



சிந்தையிற் கவலையேதும் செய்யுதன்றோமே அப்பா
ஏர்ந்தனம் தவமீடேற்ற
யருவே நீ வாரா விண்ணவர் புகழுமேதே கம்பீரனை
குருமொழி எனவே என்னருமை யுரையால் பண்டு
நிருபனே வேழ்விக்கோர் குறைவார எதிர் கொண்டு
நேரும் வாரிதி தீர அவுணரும்
பீரி வரும் வழிபாரும் வுணும் தவிர் அரு

இதுவும் கௌசிகன் சொல் விருத்தம்

இந்த மேருவின் சமீப மிசைந்து நாம் யாகம் செய்ய
அந்தமா யிருப்பதாலே அருமை மந்ரர்களே கேளீர்
சொந்தமாசிவாய மென்னும் செட்டெணர்ப்பத மழிக்க
பந்தமாவருவோர் தம்மை பாரினில்மாய்த்திடீரே

(வ-ம்) ராமா-இந்தமகம்மேரு அரிகில்யாகம் செய்யஎத்தனித்தால் யாகத்தை க்கினம்செய்யும்படியாக தானவர்வருவார்கள். அவர்களோ நமதருகில் அண்ட ஒட்டாமல் செய்குவாய்- ராமா

(ஸ்ரீ ராமர் கௌசிகருக்கு சொல்லும் விருத்தம்)

ஒம்பறனை வசவாயமென்றே ஒங்குணற்றவமழிக்க தாம்வரும் அவுணர்தம்
மை தவிடாகச்செய்வோம் நீரே போய்மிகிதடைபடாமல் பொருந்தியவேழ்வி
செய்ய திம்பனுகாதுஅய்யா தீவிரம்நடத்துவீரே

(வ-ம்) தேவரீர் செய்யாநின்ற யாகத்திற்கு யாதொரு யிடையூருநேராது இனியாகம் நடத்துவீர் முனிநாதா

(கௌசிகன் ஸ்ரீராமருக்கு சொல்லும் விருத்தம்)

பதனுமே பதனமின்று பாலரேபதனம்தானே
பதனமிவ்வேழ்வி தன்னைபாதுகார்த்தருள்வீர்தாமே
பதனமேஅவுணர் ஒட்டா புலசரங்களையே தூவி
யதனமே பதனம் செய்வீர் பகரும் யிவ்வேழ்விக்கின்றே.

வசனம்

அப்பா ரகுனந்தனா நான் யாகம் செய்ய போகிறேன் நீயும் இளையவனும் இந்த வேழ்வி தனக்கு பாதமொரு யிடையூரு வராமல் பாதுகாப்பீர் ஸ்ரீராமா

(ஸ்ரீ ராமர் வசனம்) மாதவர்த்திற் மிகுந்த முனிவரே தமது யாகத்திற்கு யிடையூறுவராது யாகத்தை நடத்துவீர் சுவாமி.

(பொது வ-ம்) இவ்விதம் ஸ்ரீராமன் உரைக்க முனிவன் யாக நிலையிர் தன் அன்புலங்களும் வொன்றுக செலுத்தி வேழ்வி செய்யும் சமயம் ஸ்ரீராமன் இளைவனோடு செல்லாநின்ற விதம் காண்க.

ஸ்ரீ ராமன் இளைவனோடு சொல்விருத்தம்

தம்பி லக்ஷ்மனனே அய்யன் தான் யாகம் செய்யலுற்றார்
வம்பு செய் யரக்கர்தாமே வாராமுன் வில்வளைத்து
அம்பு தன்னிடமா பூட்டி அதோகதியாகச் செய்ய
இன்பமா வேழ்விக் காப்போம் இனியுன் கைவில்வளைப்பாய்

(வசனம்) இளையவா முனிவன் யாகம் செய்யும்படிபோக நிலையிர் நின்ருர், நாம் சும்மாயிருப்பது நன்றல்ல நமது வில்லெடுத்து அஸ்திரங்களை பூட்டி தானவரை அரிகில் அண்ட ஒட்டாமல் செய்யலாம் இனி உன்வில்தனை வளைப்பாயடா.

இளையவர் ஸ்ரீ ராமருக்கு சொல் கவி

தமயனே சரணமிந்த சமயம் நான்வில்வளைத்தேன்
இமை கொட்டாதினி முன் அம்பை அமைத்தே நின்றிதைபாரண்ணு

(பொது வ-ம்) இவ்விதம் ஸ்ரீ ராமலக்ஷ்மணர் இருக்கும் சமயம்முனிவன் யாகம் செய்கின்ற விதம் காண்க.

(தருவு தாளம்-சுரசை ராகம்-கமாஸ்)

பல்லவி

சிவசாம்பவ சிவசாம்பவ சிவசாம்பவசிவமே
சிவசாம்பவ சிவசாம்பவ சிவசாம்பவசிவமே

அனுபல்லவி

பாவநாசன கனபூஷண எனையாட் கொள்ளும் நேச
தவமீடேற்றிட செய்குவாய் ததியே அருள்பதியே — சிவ

சரணங்கள்

அயன் தேடிடும் அரிநாடிடும் ஆனே கெங்காதரனே
நயமோடென் முன்வாவா நீயே நாடினேனென் கோனே — சிவ

கருணைகர குணசேகரா கணிஞாணி கோப
சரணாரவிந்த மினிகண்பார் சம்போசிவ சம்போ — சிவ

தாடகிவதைப்படலம்

ககன மிப்புவியிலுள்ளோர் களித்திட விஸ்வாமித்திரன்
இகம் தனைநாடி அன்பாய் இசைந்து நற்றவம் தான்செய்ய
அகம் தனிற் கோபங் கொண்டு அகிலமற்றெவரோடுங்க
பகைவென்றதை மரிக்க பாரில் தாடகியும் வாரான்

தருவு-தாளம்-ஆதி-ராகம்-தோடி

(பல்லவி)

அரக்கி வந்தாளே இதோ அரக்கி வந்தாளே

அனுபல்லவி

பெருத்த பல்களும் விரித்த சடையுடன்
கருத்த மேனியாள் துரிதமுடன் இதோ — அர



சரணங்கள்

அண்ட முனிவரெவர் கண்டு நடுங்கிட
எண்டிசை பாலரடங்கி யொடுங்கிட — அர

அஷ்ட கெஜங்களும் பட்டிவர்த் தனர்திட
கெட்டிய கிரிகள் எட்டும் அதிர்ந்திட — அர

மாவலியவான் சுவாகு மாரீசனும்
நீவிதாடகி முன் வோடிவரவே தினம் — அர

கரும் கணியனகர் கரி அரிமுன்னே
பரிதிமுன் பனிவகை யாகிடபின்னே — அர

தாடகி சுவாகுக்கு சொல்-விருத்தம்

அகிலமே இடுகிடென்றதிர்ந்திட செய்யுகின்ற
மகிபனெ வனத்திற்தானே மாமுனியோர்கள் வேழ்வி
இகழ் பெர செய்வதுண்டோ தேவர் நாவலர் களிக்க
புதப்புடன் உரைப்பீ ரைந்தன் உள்ளமும் களிக்கத்தானே

(வ-ம்) தனையா இவ்வனத்திற் யாராவது முனிவர்கள் யாகம் தவம் காயத்ரி அனுஷ்டானம் இவைகளை செய்யக் கண்டதுண்டா சுவாகுவென்னும் என் குமாரகா.

(சுவாகு-வ-ம்) தாயே அதோ நமது முன்னிற் தோன்றுகின்ற பர்வதத்தினருகில் யாரோ ஒருவன் யாகம் செய்கின்றனம்மணி.

தாடகி தருவு தாளம்-ஆதி ராகம்-நாட்டை

பல்லவி

இத்தனை கர்வ மெனுக்கேனெ முனிவன் றனக் — இத

அனுபல்லவி

எத்திசைகளிலும் நமக்கிணையில்லை என யாரும்
கத்திக் கொண்டோடி பரகக் கவுசிகன் வேழ்வி சிறக்க

சரணங்கள்

வாரி சூழ்ப்புவி போ றெந்தன் பேரதனை கேட்டொடுங்க
மீர்நோல் பட்டவரை மாருவோம் கொழுப்படங்க — இ

சீடி நாமனைவிருமே கூடியவன்முன்னே வோடி
வாடிடச் செய்குவோம் ஒருகோடிபடையோடு சாடி! — இ

குந்தமே வேல்வாள் வில்சூலம் அந்த மடவண்டை நாளும்
சொந்தமா கைகொண்டவனை கொந்திட செய்குவோமினி! — இ

(பொது வ-ம்) இவ்விதம் தாடகியாகினவள் சுபிர சிம்தனையா வருதை முனிவன் கண்டு பயம் கொண்டு தான் செய்யா நின்ற வேழ்வியை விட்டு வோடுகின்ற சமயம்.

தருவு தாளம்-ஆதி ராகம்-அசாவேரி

பல்லவி

ஆயினி என் செய்வேன் யார்க்கட்ங்கா திவளிட வடவாக்கினி இனி — ஆ

அனுபல்லவி

ஒஹோ எனது வேள்வி ஓங்குமிவ்வேளை
ஆகாமலழிப்பதற் காக்கிவாராளே ஆ

சரணங்கள்

சுரர் முனிவ ரிவள் முன்புர முதுகிடவே
தரணி தனிர் கடூர பொரிகள் பறந்திடவே ஆ
தவமழித்திடல் வெகுபவ மெனபாராள்
புவன முழுதும் அதிர்ந்திட இதோவாராள் ஆ
தளிர் பெரும் கணியனூர் வள ரணி கொப
எளியேன் முறையிடை வந்தருளும் பிரதாப ஆ

கௌசிகன் ஸ்ரீராமனுக்கு சொல் விருத்தம்

செல்வனே எனது வேள்வி செழிக்கு மென்றிருந்தேன் பொல்ல
வல்வினை செய்கின்றோர் முன்வளம் பெற காட்டி என்னை
கொல்லெனவும் நின்றுயே கோதை தானுண்டோ மீது
சொல்லுமவ்வகை எனக்கு சோகை மின்றணிகிடாதே

(வ-ம்) ராமா என்னை யிந்த கொடுமை செய்யும் பாவி முன் காட்டிக் கொடுத்து பாராமுகமாக யிருப்பது உனக்கு தர்ம்மமாகுமா தசரததனைய.

ஸ்ரீராமன் கௌசிகனுக்குச் சொல் விருத்தம்

அணுவதுமேரு வல்லஅதிவீரமுனியே யிந்த
குணுங்கறை வெல்ல என்கை கோதண்டம் வளைத்தேன் நெஞ்
ஜம் இணங்கவுமில்லையே பெண்மீதிசைந்து என் கணை தான் சாட
பிணிவருமெனவு முன்னோர் புகலுணர்ப் பதத்தால் நின்றேன்

முனிநாத அணுவானது மேருவல்லா என்னும் பாவனையாய் யிந்த பெண்ணெனவள் எந்தனுக் கீடல்லா மேலும் பாவையர்கள்மீது சரம்எய்யலா காதென முன்னோர் பழைய மொழியின்படி எனக்கு யாதொன்றும் தோன்றவுமில்லை மாதவமுனியே

கௌசிகன் சொல் தருவு தாளம்-சாப்பு ராகம்-காம்போதி

பல்லவி

ராமா இவள் பெண்தானல்லா தாடகி ரகு ராமா

அனுபல்லவி

சாமான்ய மிவளெண தான் நினைத்திடாதே
மாமோசம் வருதமே மாலிக்கடங்காள் மீது ராமா

சரணங்கள்

அண்டமளவும் கையை நீட்டுவாள் தேவ
ரவ் நடுங்க குரூரம் காட்டுவாவள் படை
கொண்டு புவி நடுங்க யாட்டுவாள் மாதர்
பாலிக்கும் வேள்வி விட்டோட்டுவாள் வாட்டுவாள் ராமா
எட்டு திசையும் தாவி கிட்டுவாள் எதி
ரேகும் தீரரே மாய தட்டுவாள் வாளம்
முட்டும் கிரிகளை நெட்டுவாள் வாயால்
மூர்க்கியாவரையும் மிரட்டுவாள் வாட்டுவாள் ராமா



தந்தை சொற்படி முன்னாள் குலையே தபசி
தானரிந்தெரிந்தான் தாய்தலையே அந்த
செந்திரு வல்லா யிவள் அலையே கணியனூர்
செழிக்கும் ராகவ வேரொன் றெண்ணுதெரிசிலையே ராமா

ஸ்ரீராமர் கௌசிகருக்கு சொல் கவி.

சிலைதனை யெய்யு மென்றே செப்புமப்படியான் செய்வேன்
நிலைபெரு மிவள் தானோ நீரெனக்குரைப்பாய் போற்றி

கௌசிகன் ஸ்ரீராமனுக்கு சொல் தருவு தாளம்-ஆதி ராகம்-எதுகுலகாம்போதி

லாவணி

அச்சுதாகந்தர்வகுல சச்சரன் சுதன்
ஆதியில் சுகேதயனை நாடிநின்றனன்
பச்சவண்ணயவன் செய்தவமே பாலிக்க அந்த
பார்மிசை நடந்தோனவன் முன்னே ஜொலிக்க

சேயது ஒன்றுமே நாடிசெய்தேன் தவமே அவன்
செப்பிட அயன் ஆயிர ஆனை மதமே
நேயமாக கொண்டவள் ரதியிந்திராணிக்கும் மேல
நாடினான் அபனு மன்றே கயமாசில

பாரளந்த மாயா இந்த பாவை பிறந்தாள் தன்
பந்துவில் சுந்திரனை மாலை பாங்காயணிந்தாள்
வாரணம் சூழயிப்புவியி லாரும் நடுங்க சு
வாகு மாரீசன் பிறந்தார் அண்டமு ஒடுங்க

புத்திரர் பலத்தால் சுந்திரன் பின்ன கஸ்தியன் முன்
போர்ப்புரிந்தவனை முனிபின் நெரித்தனன்
அத்திசை சுதருடனே ஆர்ப்பரித்தனள் தன்னுள்
ஆகாமல்வளுமே வனமுரித்தனள்

மான் மழு கடம்பை யிறைச்சி மாபாவி தின்றே தன்
மத்தால் திரிய அன்று மாமுனி கண்டு
தானவர்களாவீரென தந்தார் சாபமே
தரணி புகழ் கணியனூரா தரித்தாள்வேடமே

இதுவும் கௌசிகன் சொல்-விருத்தம்

பலவித மதம் தான் செய்யிப் பாவி பின் பாதலத்துள்
சிலநாள் சுமாலியோடு சுதருடன் இருந்தாள் பின்னே
அலகை லங்கையுளே னுக்கே அருந்தமாதல ரென்றேதி
உலகினியதம் தான் செய்வதுண்மை யீதறிவாய் ராமா

(வ-ம்) ராமயானுனக் குறைத்த வார்த்தை யாதும் பொய்யல்ல இனி இவளை பெண் என எண்ணாமல் ஜெயம் செய்து என் வேள்வியை முடித்து தருவாய் ரகுனந்தன.

(ஸ்ரீராமர் வ-ம்) இனி தேவரீர் யாதொன்றுக்கும் அஞ்சாமல் தமது கோரிக்கையின் படி யாகத்தை செய்வாய் மாதவமா முனியே

ஸ்ரீராமர் தாடகியுடன் போர்ப்புரியும்படலம்

(பொது வ-ம்) இவ்விதம் உரைத்து கௌசிக முனிவன் யாகம் செய்கின்றவிதம் காண்க.

கௌசிகன் சொல்கட்டளை கலிப்பா

ஆதியே யருஞ்சோதிப் பிரகாசமே
ஆனந்தமே யமுதே நற்போதமே
நீதியே சிவமென்னும் மெய்ஞானமே
நீ துணை செய்தருள்வாய் என் மோனமே

வேதனும் மாமறைத் தேடும் ஜோதியே
விண்ணவருள்ளும் பரனும் நன்நிதியே
மாதவர் மகிழும் நவநீதமே
மஹாதேவனின் குருவருள் வியாதமே

(பொது வ-ம்) இவ்விதம் விஸ்வாமித்திரன் யாகம் செய்ய தாடகியானவள் கண்டு கோபங் கொண்டு சொல்லுகின்ற விதம் காண்க.

தாடகி சொல் விருத்தம்

படபடென்றினி தான்யாகம் பண்ணுமாற்றிமை என்ன
அடட இங்கடதாரேனும் அனுமதி தான் கண்ட
விடட யான் வந்தேன் வந்தேன் வேள்வியை யழித்துபின்னே
தடதடென்றுதிரட்டியுன்னை தாக்குவேன் போக்குவேனே

(வ-ம்) அடா மதம்கொண்ட முனியே உந்தனிட யாகம் நிறைவேறுமென யோகநிலையிற் நின்றாயே உன்னையும் உன் யாகத்தையும் நிர்மூலம் செய்துவிடுகிறன் பராட்

தாடகை தருவு தாளம் ஆதி ராகம்-நாட்டை

பல்லவி

இனிபாரடா உன் தவத்தை அழித்திடுவேன் — இ

அனுபல்லவி

பனிகுலம் இரவி முன்பகமாகுமோ அட
சனியனுனையனுசமைத்தாய் வேள்வி அட — இ

சரணங்கள்

எத்து வித்தையாலே நீயும் எத்தனித்து சத்துகின்றாய்
செத்தபிணமே அடட சுத்தி சுத்தி முழிக்கின்றாய் — இ

எட்டுதிசை தன்னிலோங்க இட்ட தீயுடனே உன்னை
நெட்டி தள்ளி ஆவிவாங்கும் கெட்டிதனம் பாரா பிள்ளை — இ

எட்டிப்பறக்கில் குருவி திட்டமாகருடனாமோ
கெட்ட கேட்டுக்கேனோ ரெண்டுபட்டமும் கட்டத்தகுமோ — இ

ஸ்ரீ ராமன் இளவருக்குச் சொல்-விருத்தம்

சட்டமாய் பேசி பொல்லா சதிசெய்வோர் தம்பி இன்றை
நெட்டியே வருகின்றாள்பார் ஙிரிடியே பதன மிந்த
துஷ்டனை சரத்தால் தாக்கு துண்டு துண்டமதாய் செய்து
இஷ்டமா முனிவன் வேள்வி இனி தழைத்திட செய்வோமே



(வ-ம்) இளையவ முன்வந்த முனிவனை தூக்கிவிட்ட பாதகியாகினவள் சட்டம் பேசிவருபவளை நாம் சம்மாவிடலாகாது இனி நீ முனிவனை பாது காப்பாய் யான் அந்த பாதகியே சம்மரித்து வருகின்றேன் தம்பி

இளையோன் ஸ்ரீ ராமருக்கு சொல் கவி

தழைத்திடும் வேள்வி தன்னை சமயமே நானே காப்பேன்
கொழுத்த அவ்வரக்கி தன்னை கொல்லுவாய் வெல்லுவாயே

(பொது - வ-ம்) இவ்விதம் இருவர்களும் பாது காத்திருக்கும் சமயம் தாடகியானவள் ஸ்ரீ ராமனைக் கண்டு கோபம் கொண்டு சொல்லுகின்ற விதம் காண்க.

தாடகி ஸ்ரீ ராமருக்குச் சொல் விருத்தம்

வில்தனை கரத்தி லேந்தி வீரனோ எவனடா உன்
பல்தனை நொக்க னுனே பங்காடி விடுவே னுந்தன்
இல்தனக் கேகுவாயே இளம் வயத்தி நால்பால்
கல்தன மிசந்தேனென் முன் நாடாதின் றோடிப்போட

(வ-ம்) மலர்போன்ற கரத்திற் வோர்சொத்தவில் பிடித்துநிற்கும் பயலே நீ அறியாதவனாதலால் உன் பிழை பொருத்தேன் இனி என் எதிரில் நில்லாமல் ஓடிப்போவாயட

ஸ்ரீ ராமன் தாடகைக்குச் சொல்-விருத்தம்

வோடிப்போகவோ நான் வந்தேன் உங்கள் தன் திறமைதன்னை
நாடிபார்த்திடவே வந்தேன் நயந்த ராபோர்க் களத்திற்
கூடிபோர்த்திடவே வந்தேன் கொடுமை செய்யாக்கவே
வீண் பாடியேன் மாய்ந்துப் போராய பலபடையுடனே கானில்

(வ-ம்) நான் உன்றனைக் கண்டு வோடிப்போக வந்தவனல்ல உன் திறமை சூர தீர வல்லமையை பார்க்க வந்தேன் நீ வீண் வார்த்தை யாடாமல் என்னுடன் எதிர்த்து போர் புரிவாயடி சண்டாளி

விருத்து-தருவு-தாளம்-ஆதி-ராகம்-சுருட்டி

தாடகி வினா

படையுடன் மாய்ப்பே னன்றாய் கிரிய எங்கள்
பலமறியா யோ வீணின் வெரியா இனி
தடை செய்யோம் பாரா முன் பின் தெரிய உன்னை
தாக்குவோம் உந்தனுயர் போக்குவோம் பார் சிறிய

ஸ்ரீ ராமர் விடை

போக்க உன்னாலாமோ நிர்மூடி கானின்
புலியை பூனை வெல்லுமோ கேடி இனி

எக்கம் கொள்ள என் கணை சாடி
இதோ வருகன்ற துந்தன் சிரம் பிளந்திட கேடி

தாடகி வினா

ஓடும் இரிடிக் காளாய் நியே வெகு
வொட்டாரம் பேசு முந்தன் வாயே இனி
மூடும் பல் நிறக்க தே பேயே
முரிப்போம் சரந்தனைக் கெண்டருப்போம் சிறந்தனையே

ஸ்ரீ ராமன் விடை

கொண்டல் நிகர்க்கு மர் கோரம் வினை
கொண்ட அரக்கர்க ளெல்லாரும் இனி
துண்டம் படுவீரென் முன் வாரும்
துலங்கும் கணிய னகர் தலம் தனிவின்றே பாரும்

தாடகி ஸ்ரீராமருக்குச் சொல் விருத்தம்

பார்ப்பதாவது தானென்ன பரியாச முடனே பேசி
போர் புரிந்திடவே வந்த புத்தி கெட்டவனே போட
தார்ப்பதி சேயா என் கை தன்னுடன் உனது ஆவி
தீர்ப்பதே நிஜம் தா னெந்தன் திறமை பாற்றிடு வாசற்றே

(வ-ம்) என்னடா பார்க்கின்றது புக்தி கெட்டவன் பாலா உன்னை என் கை தண்டத்தினால் உன் தலை மீது மோதி உன் ஆவியை வாங்குவேன் பாரடா மடையா

ஸ்ரீராமர் தாடகைக்கு சொல் விருத்தம்

சற்றே பார் திறமையோடு சாதிப்பே னென் றுரைத்த
எத்தே யானறிவேன் வீணாய் என் வாயால் உளருகின்றாய்
பித்தே உந்தனுக்கு மேலா பொரிந்தினபடி யாலின்றே
தத்ததலைக் கீழ் விழுந்துதா நாடி மாய் வதேனோ

(வ-ம்) என்னடி உன்னிட சௌரிய வீர தீரத தனமும் என் முன் செல்லாது உந்தனுக்கு பயித்தியம் கொண்டு பலவாராக பேசி வீணாக மாய்ந்துப்போரா சண்டாளி

(பொது-வ-ம்)

இவ்விதம் ஸ்ரீ ராமரும் தாடகியும் வாதாடும் சமயம் விஸ்வாமித்திரன் தோத்திரம் செய்கின்ற விதம் காண்க

கௌசிகன் கருவு-தாளம்- ஆதி-ராகம்-புண்ணாக

பல்லவி

அரா அரா அரா அரா அரா சம்போ (அர)



அநுபல்லவி

சரா சரா புவன நிராமய பிரணவ (அர)

சரணங்கள்

கரி உரி தேவ கால மூன் வாவ
சுரிதியின் மூவ சுகுண சத் பாவ
புர அரிகாவ புகழும் நற் சேவ (அர)

புலித்தோலிடைய புகழும் செஞ்சடைய
கலிதீர் வெண்விடைய கதலியின் துடைய
சலித்திடனடைய சார்ந்த வென்றுடைய (அரா)

தாமரைத்தாள் - தழைக்கும் னற்றோளா
சோமணியாளா - சுருந்த குழலா
வாம பங்காளா - வந்தெனையாளா

கருணை னன் நிறைபே கணியனூர் துரையே
சரணம் சர்க்கரையே சாற்றினேன் குறையே
வரமருள் புரியே வாபர அரியே (அரா)

தாடகை சுவாகுக்கு சொல் விருத்தம்.

புர அரி என வெயிந்து புகலுகின்றவனை நாமே
பர.கரித்திடவே செய்புபாய மின்றுறைக்கக் கேளீர்
திறமை சேர்த்திகிரி ஒன்றை தூக்கி விட்டெறிந்து பாலன்
சிரம் பிளந்திடவும் தாக்கி செய்தவ மழிப்போம் வாரீர்

(வ-ம்) சுதா முனிவன் செய்யா னின்ற யாகத்தை அதம் செய்ய ஓர் உபாய மிருக்கின்றது அது யாதெனில் பெருத்த மலை ஒன்றெடுத்து வந்து சிறுவன் தலைமீது சாடி பின் முனிவனை அதம் செய்து விடலாம் சேய

சுவாகு தாடகைக்குச் சொல் விருத்தம்

அழிப்பதற்கு கொரு குன்றிப்போ அன்னையே எடுத்து வந்
தேன்-கொழுப் படங்காமலே முன் கொக்கரித்திடுவோ நாவி
கழித்திடு படியான் செய்வேன் காலனும் திடுகிட்டோட
சுழற்றி நான் எரிந்தேன் கைவாள் குலமும் குன்றோடம்ம

(வ-ம்) தாயே முனிவன் செய்யா நின்ற யாகத்தையும் இச்சிறுவனையும் போக்கும் படி தம தெண்ணத்தின் படியே வொரு பெருத்த மலையை கொண்டு வந்து அவர்கள் மீது இதோ எரிந்தேன் பாரும்மம்மா தாயே

(பொது-வ-ம்) இவ்விதம் எரிந்த மலையாகினது ஆண்டவன் கைசிலை யதினால் கின்னு பின்னம் செய்ததை தாடகியானவள் கண்டு கோபம் கொண்டு சொல்லுகின்ற விதம் காண்க

தாடகி ஸ்ரீ ராமனுக்கு சொல்-விருத்தம்

கத்தரிக் காய்க்கே கால்கள் கரங்களும் அமைத்தவாரப் போல்
பித்தனே இனிதான் கேளாய் பெரும் படைக்கு தானுந்தன்
சொத்த வில் திறமை தானே செல்லாதுன் வாயில் மண்ணை
கத்தியே கௌவிக் கொள்ள காலமே நேர்ந்ததோடா

(வ-ம்) அடா பயலே உன்னை பார்த்தால் கத்தரிக்காய் தனக்கு கை கால் முளைத்து பர பரென்றோடின பாவனையாக தோன்றுகின்றது உன் வில் திறமை எங்கள் முன்னில் செல்லாது மேலும் உன்னிட வாயில் மண் கௌவிக் கொண்டு சாகும்படியாகச் செய்வேன் பாரடா சிறுவா

ஸ்ரீ ராமன் - தாடகைக்குச்சொல் - விருத்தம்

சமைத்திடுவாயடி பின் சட்டியுள் புனலும் வார்த்து
அமைத்திடுவீருமாக்கு அரிசியும் உப்பும் சேர்த்து
நிமித்திடும் திறமையோடு நீ தான் உண்டிடுவாய் மண்ணின்
சுமைக் கடமான மாதே செய்குவாய் சண்டை பார்ப்போம்

(வ-ம்) அடி உன் திறமை எனக்கு நன்றாக தெரியவரும் வோர் பாண்டத்தில் அரிசி உப்பு சலத்துடன் வேக வைத்து சாப்பிடும் திறமை தெரியும் நீ வீண் வார்த்தை யாடாமல் மல்லு செய்வாயடி யாதகி

[illegible] தருவு-தாளம்-ஆதி-ராகம்-கருட்டி

தாடகி விறு

போடா நீர் மூட போர் செய்யும் திறமை அறியாமல் வாயட்
ஏடா கூடம் எதிர்த்து பேசும் வாயின் மேல்
இடிப்போம் கதையதி நால் நோக்கி கையால்
அடிப்போம் தவிடு பொடியாக்கி உனை
புடைப்போம் காற்றின் முன்னிலே தூக்கி விளையாக்கி

ஸ்ரீராமன் விடை

தாக்குவோ மென்றெவரும் நோக்க மூடனே உங்கள்
திராணியதனை எதிர்பேசி வீண்
நோக்க மூடமே எனை யேசி உலகு
ஜாக்கிரதை யுடனே கைவீசி அடி தோஷி (போடி)

தாடகி விறு

தொல்லுலகில் எவரும் அல்லல் படவே சரம்
தொடுப்பேன் கரும் சலிக்க வாரி உன்



வல்லமை போக்குவோம் கோரி இதோ
வருகின்றதே சரம் தேறி உறம் மீறி போடா

ஸ்ரீ ராமன் விடை

மீறிவரும் சரங்கள் நீரு நீராவிசையிர்த்
தாறுமாறுபட செய்வேன் மனம்
தேறியுங்கள் சிரமே கொய்வேன் இனி
பாரிற்பல சரங்களெய்வேன் தயைசெய்யேன்

தாடகை விறு

இணைவிடாத சுவாகு இளைத்த மனிதனையும்
கனையதி காலவன் மாய பொல்ல
பிணிவணுகினதே நான் தேயபடை
பிணமலையாய் முடிசாய அப்பேய போடா

ஸ்ரீராமன் விடை

வம்புயுரையால் நாடிவந்த அரக்கரே என்
அம்புக்கிரையாகுவீர் வாரும் மனம்
பொங்கிமடிந்த படைபாரும் பின்
தொங்கும் கவலை யேனோ தேரும் இனி கூரும் போடா

பொது விருத்தம்

தாடகி சுவாகு வந்த தளங்கள் மாய்ந்திட மாரீசன்
வோட்டமா மலிவானொ டொளித்த நற்கடலிலன்றே
நாட்டமா முனிவன் வேழ்வி நடத்தி ராகவனும் தம்பி
யாட்டமா அரக்கர் நாடிவரும் வழிப் பார்த்திருந்தார்

கௌசிகன் சொல் தருவு தாளம்—ஆதி ராகம்-மோகம்

பல்லவி

சம்போ சதாசிவா அரா சந்திரசேகரா கெங்காதரா

அநுபல்லவி

அம்புலித்தோ லிடையணிந்த செஞ்சடைய
இன்பமா காளிமுன் இசைந்தனுன் நடைய

சரணங்கள்

திருபுர தகன திகழும் முக்கண்ண
கரியுரிவிண்ண கருணை செய்வண்ண சம்
மான்மழுகைய மலையில் வாழ்துய்ய
நான் துதிசெய்ய நாடினேன் மெய்ய சம்
அம்பிகை நாத அருமறை வேத
நம்பினேன் தாத நளின பொற்பாத சம்
புனலணிந்தலைய பொருந்தும் கன்னிலைய
இனி குறைநிலைய யேன் தயை விலைய சம்

காமனை எரித்த மான்மழு ரித்த
சோமனை தரித்த யேமனை யுரைத்த — சம்

கருணை நன்னிறையே கனியனார் நரையே
தருணம் சர்க்கரையே ததிபுர அரியே — சம்

(பொதுவ-ம்) இவ்விதம் தாடகியாகினவளை ஸ்ரீ ராமன் சம்மரித்து, கௌசிகன் வேழ்வியையும் நிரை வேற்றியபின் ஸ்ரீ ராமன் முனிவனுக்குச் சொல்லும் விதம் காண்க

(ஸ்ரீ ராமன் கௌசிகனுக்குச் சொல்-விருத்தம்)

தவநிலைதான் முடித்த தபசியே சொல்ல கேளாய்
அவனியிற் தமது வேழ்வி அழிக்கவந்தாக்கர் தம்மை
நவ நிதமணி அம்பெய்ய நாவிதான்மாய்ந்தாள் தங்கள்
கவனம் தானினி வேருண்டோ கருணை செய்தருளுவாயே

(வ-ம்) முனிநாத தமது வேழ்வியை விக்கினம்செய்ய வந்தபாதகரை நாசதம் செய்து விட்டேன் இனிதமது எண்ணம் யாது சொல்லும் சுவாமி

(கௌசிகன் ஸ்ரீராமனுக்குச் சொல்-விருத்தம்)

இரைதனில்லையைப் போலும் திலனுள்ள என்னைப்போலும்
கருவினுள் ளுயிரைப் போலும் கஞ்சமுள்ள சுவையைப் போலும்
இரவி விண் மண்ணெங் கெங்கும் இருக்கும் பாவனையாய் தோன்ற
பெருமைனர்க் கோதண்ட நாம் போகலாம் மிதிலைக் கின்றே

(வ-ம்) கடலிற் நிறைந்த அலைப்போல எள்ளின் நிறைந்த எண்ணெயைப் போல மலர்களின்மணம் போல கருவதில் மந்த உயிர்போல உலகில் நிறைந்த சூரிய சந்திரர் போல மற்ற யாவர் களிடமும் சிறந்த ரகுனந்தனா இனி நாம் மிதிலைமா னகருக்கு போகலாம் வருவாய் அய்யனே

(ஸ்ரீ ராமன் கௌசிகனுக்குச் சொல் விருத்தம்)

குன்றுனர்க் குகை களிங்கே கூடி வாழ்ந்திடும் துர்பேய்கள்
பன்றியும் புலியோடானை பராக்கரம யாளி சிங்கம்
அன்றி சேர்ப்பரவை சூழ்ந்த அடவியை கடைந்து நாமே
நன்றியாம் மிதிலைக் கிப்போ நாம் களித்திடவே போவோம்

(வ-ம்) அண்டமளாவிய பர்வதங்கள் பூதபிரேத பிசாசுகளும் சிங்கசார்த் தூலம் வாசம் செய்யும் இந்தவனம் தனைவிட்டு தமது எண்ணத்தின் படியே மிதிலைக்கு போகலாம் சுவாமி

(கௌசிகன்-சொல்-தருவு-தாளம்-சாப்பு-ராகம்-பைரவி)

பல்லவி

ராமாபோய்வருவோம் வாரா மிதிலைக்கின்றே — ராமா

அனுபல்லவி

காமவதனழக தாமதம் செய்யா தே
சாமனவரும் கூடிசாடி மகிழவ ஆடி — ராமா



சரணங்கள்

கலந்தரும் தீர்த்தமாடி நமசிவாஎனபோம்
துலங்க நாம் மூவர்க்கூடி நரைமே மிதிலைநாடி — ராமா

கருணைபுரிவாய் மாலே கௌதமன் யாகசாலே
தருணம் பாரீா உன்றாலே தழைத்தோங்குதே மென்மேலே

கன்னல் வளர்க்கணிய நன்னகர்த் தனக்குரிய
சொன்னேனினி தெரிய நன்மையுடன் அறிய — ராமா

அகலிசாபவி மோசன படலம்

பொது விருத்தம்

பாலக ரிருவரோடபார்ப்புகழ் விஸ்வாமித்தரன்
சிலனும் நடக்க முன்னாள் சபித்த கல்லுருவின் மீது
மாலிணைதாள் தான்சிந்த மாதவளகலி நிற் க
சாலவே முனிவன் றன்னை சாமியும் கேழ்க்க லுற்றான்

(ஸ்ரீ ராமன் கௌசிகனுக்குச் சொல் விருத்தம்)

விண்ணவர் புகழும் விஸ்வாமித்திர நாதா இந்த
பெண்ணெவர் மனைவி யாரால் பெற்றனள் சாபமிந்த
மண்ணதின் மீது கல்லா மாஇவளான தென்ன
வண்ண மாமயில் போலான வளமை தானுரைத் திடாயே

(வ-ம்) தேவர் மாமுனிவர்கள் புகழும் மாதவ முனியே இங்கே கல்லாயி ருந்து பெண்பாலான தென்ன இவள் யார் யாருடைய மனைவி இவள் கல்லாகி ன விதமென்ன யாருடைய சாபம் எனக்கு தெரியச் சொல்லும் சுவாமி

(கௌசிகன்-சொல்-தருவு-தாளம்சாப்பு-ராகம் சங்கராபரணம்)

பல்லவி

தேவியிவள் ராம கௌதமன் ஆவியிவள் ராமா

(அனுபல்லவி)

ஆவலினால் பண்டு யேவல் மனம் கொண் டு
அந்தரம் நாடிய இந்திரன் கூடிய — தேவி

(சரணங்கள்)

மாபத்தினால் கெங்கை ஆடதடை — பெற்ற
மாமுனி கண்டு வெகுண்டு பயம் — சற்ற
கோபத்தினால் இடும் சாபமொழி — மெத்த
கூரையிலே கரும் பாரை வடி — உற்ற — தேவி

வெம்பியே மாமுனி கண்ணி லெதிர்ப்பட்ட
வேளையில் கண்டு போராமல் முனி இட்ட
அம்பொன் முடிதொட்டடி வளவும் முட்ட
ஆயிரம் கண்ணனாந்த வாசவனுக் கிட்ட — தேவி

ஞானத்திரு வும்மை யோதினம் பெர்க்கெந்த
நன்மை உண்டாமோ அடியேனிப்போ இந்த
கானகம் தனிலுந் தன்பாததூளி கள் இந்த
கல்லுருமாரி அகலி கையாய் வந்த தேவி

(ஸ்ரீ ராமன் கௌசிகனுக்குச் சொல்-விருத்தம்)

அயன மத்ததை விலக்க யாருமோ முன்னால் செய்த
பயன்படி யாகுமிந்த பாரதின் மீதுள்ளோர்க் கே
நயந்தரும் முனிவரே நீர் நாடியப்படியே இந்த
பயந்தரும் வனம் கடந்து பகரமா இனி நடப்போம்

௦ (வ-ப) நான் முகன் விதியின்படி யாவும் பலிக்க வேண்டும்மேன்றும் நடவாது தமதருள் படியே இக்கானகம் விட்டு மிதிலை என்னும்னகர்த்தனுக்கு போகலாம் சுவாமி

கௌசிகன் ஸ்ரீ ராமருக்குச் சொல் விருத்தம்

கௌசிகன் ஸ்ரீ ராமனை ஆலிங்கனம் செய் எனப் படல்

ஆசையோடுனை யான்கட்டியணைந்து என்முக மலர்ந்து
பாசமா யினியோர் முத்தம் பரந்தாம யருளளிக்க
நேசமே லாகுதின்றே நீ எனக்கருள் தான் கூர்ந்து
ஈசனே எனக்களிக்க இனி தடை செப்பாதையா

வ-ம ரகுனந்தனா உன் மீது எனக்கு வோர் ஆவலானது யிருப்பது யாதெனில் யானுன்னை ஆவலோடு என் இருகரத்தால் தழுவி என் முகமலர்ந்து வோர் முத்தம் தரலாமென எனதெண்ணத்தை தடை செய்யாமல் என் ஆவல்தனை தீர்ப்பாய் ராமா

ஸ்ரீ ராமன் கௌசிகனுக்குச் சொல் விருத்தம்

ஐயனே கேளும் தங்களாவலை தீர்ப்பா என்றே
வையகம்தனி லொவ்வாத வார்த்தை யின்றெனக்குரைத்தீர்
துய்யனே தமது எண்ணம் நலந்தருமே சில நாள் சென்று
மெய்யிது எனவே நம்பும் மேதினியில் யினிதப்பாதே

வ-ம் மாதவத்திற் மிகுந்த சுவாமி தமது எண்ணமானது இது காலம் நடவாது யின்னம் சில நாளில் பிறகு தமது உசிதமின் படியே ஆகும் மாமுனியே

வாது தருவு-தாளம்-ஆதி-ராகம் சுருட்டி

கௌசிகன் வினா

எப்போதனை யுரைப்பீர் என்னாவல் தீர்ப்ப
இப்போ துரைத்த வார்த்தை தப்பாமலெனக்குள
மொப்பாகவே உரைப்பீர் பொற்பாதனே நற்போதனே

ஸ்ரீ ராமன் விடை

சொல்வேன் தனைக்கேளுமே கௌசிகரே நான் ... சொ
பொல்லோ னென உலகோர் பிறக்கும் "க்ருஷ்ணன்" கெதி
நல்லோ பிறந்துனது அல்லல் தீர்ப்பேனே நன்றே



கௌசிகன் வினா

தானே எவ்விதம் தருவா தமது சேவை ... தானே
தேனே சுகம் தருமென கோனே சொல்தனை யின்றே
மோனேசி பிரணவ மயவானே அருள் கூறின்றே

(ஸ்ரீ ராமர் விடை)

நீயே சத்ராஜித்து வயற்றில் புதல் வியாக (நீயே)
நேயமுடனே சத்திய பாமா வென்றிருப்பாய் நானே
ஆயர்பாடி கிஷ்டனாய் வந்தவ்வை தீர்ப்பேன் நான் தானே

(கௌசிகன் ஸ்ரீ ராமனுக்குச் சொல் கவி)

சொன்னது உண்மைதானே ஸ்ரீதராயது பொய்யல்ல
உன்னித மிதிலைக் கின்றே உகந்து நாமினி நடப்போம்.

(தாரா காவனப் படலம்)

(ஸ்ரீராமர் கௌசிகனுக்குச் சொல் கவி)

அருந்தவ முனிவரே இவ்வட வியின் பெருமை யன்றி
சிறந்த மாதவர்த் தன்யோக க்ஷேமமின்றெனக் குரைப்பாய்

(கௌசிகன் சொல் தருவு தாளம் ஆதி ராகம் கல்யாணி)

(பல்லவி)

தாரக வனமீதே தான் கேளுமே இப்போதே

(அனுபல்லவி)

காரண எந்தன் கோதே கலிக்கோடச் செய்யாதே (தா)

(சரணங்கள்)

பன்னி ராயிரம் பேர்கள் பரவும் முனியோர்கள்
வன்னி தத்தால் யவர்கள் வனத்திறப் பாம்பானார்கள் (தா)
தந்த சாபமின்றுட தாரகணியே நாட
வந்தன மென கூடவருவாரே கொண்டாட (தா)

பூரணனந்த யோக பூவுலகில் வை போக
கார் வண்ண நிரையேக கனிய நகர் நீயாக

(பொது விருத்தம்)

முனிவனிம் மொழியதனை சொன்னான் நன்றே
முகமலர்ந்து அய்யனும்மெ முன்னடந் தான்
இனியதோ ரவ்வனத்துள் இரிடி யோர்க்கே
இசந்ததோ சாபம் நீங்கியாவர் தா மே

தமிழ்நாடு ... 600 008 ... 22537

தனியாயோர் கோதண்டன் தனையே கண்டு
தாமென வரும் ஆவலோடு தழுவலா மெ ன்
கனியிதழோன் முனைவர்கள் கூடிக்கூடி
கண்டாரே அவர்க ளென்னை மிக விண்டாரே

(தாரகாவன முனிவர் ஸ்ரீராமனுக்குச் சொல்)

(தருவு-தாளம்-ஆதி-ராகம்-கன்னியாசி)

(பல்லவி)

ஆலிங்கனம் செய்தாட் கொள்ளுமே அனைவரையும் (ஆ)

(அனுபல்லவி)

பாவில் விழுவோம் பரந்தாம பன்னிருநும
பூவுலகினில் யாரும் போற்றி செய்திடும் சோம (ஆ)

(சரணங்கள்)

கௌசலை மகிழ் சுத கார்வண்ணனே அற்புத
காமினியோர்க் கெபித கடை கண்பாருமே சத (ஆ)
அம்புஜ திருபாத அருமறையின் விநோத
நம்பினோம் அற்புத நயந்தரும் நவநீத (ஆ)
மணி மகுட வுல்லாச மங்கள குண யீ ச
கனியனகரு்ர் வாச கடைக்கண் பாரா சர்வேச (ஆ)

ஸ்ரீ ராமர் தாரகாவனமுனிவர்களுக்கு சொல் விருத்தம்.

இது காலமல்லா உங்க ளெண்ணத்தின் படியாம் பின்னே
எது குலம் தனிலே மாதராகவே பிறந்திருப்பீர்
வாசுதேவன் தேவகி தன் வயற்றினிற் பிறந்தே சோதை
சிசுவென யான் வளர்ந்து சேடியரான உங்கள்
குசபர மிக குலுங்கக்கூடி அன்றனைவேகின்ற
வசமிது அல்ல எந்தன் வார்த்தை இன்றதனை கேளீர்
தசகண்டன் தன் தனக்கன்றல்லோ தரணியிலவதரித்தேன்
விசை கொண்டு யினிதான் யாவர் வேறெண்ணுதினி பிறப்பீர்

(பொது-வ்-ழ்) இவ்விதம் ஸ்ரீ ராமன் தாரகா முனிவர்களுக்குரைத்து மிதிலைக்கு நடக்கும் சமயம் பாலவனத்தைக் கண்டு ஸ்ரீராமன் யாதென்றுக் கேழ்க்க அவ்வனத்தின் பெருமையை முனிவன் சொல்லத் துடங்கினன்

(ஸ்ரீ ராமன்-வ-ம்) மாதவ முனிவரே இதோ நமது எதிரில் ஜகத்சோதியாக இருப்பது என்ன வற்புதம் சொல்லும் சுவாமி

கௌசிகன் ஸ்ரீ ராமருக்கு சொல் தருவு-தாளம்-ஆதிராகம் சுருட்டி



பல்லவி

ஐயா ராகவா கேளா பாலவன ருதரிவா அன்பர் சுனை

அனுபல்லவி

வையம் முழுதும் புகழ் செய்யும் கால காலனன்
துய்யும் யோக நிலையால் ளெய்யும்படியாகின (வை)

சரணங்கள்

வீரனவர் வெகு நீரினி அசா
சூராதி களுமே கம்பீர மனம் வேசார
விண்ணுலகிற் தன்னிலேலங்கினர் யாவர்களுமே
பண்ணும் நேம னிஷ்டை நீங்கினர் நீங்கியாவர் பின்
தீரா சோக மேலாகி திகில்கொண் டிந்திரன் முன்னே
காரா எங்கனை எனனேர உரைத்தாரென (ஐயா)

அன்றே வாசவனுரையால் சென்றே மாரன் சிவன் தன்முன்
நின்றே பஞ்ச சரம் தொடுத்தான் தொடுக்க தாரும்
பென்றே சிவன் நகைத் தெரித்தான் யெரித்தமுதல்
ஒன்றுமே வொழிவில்லாமல் இந்த வனம் தனலாக
எந்தனையாட் கொள்ளும்படி வந்தவகே ளின்பமாக

யாளியும் கரடி புலி கூலியும் சிங்கமு மிங்கே
அண்டிட எதிர்ந்து விடுமே ஆரதிதன் சோமன்
கண்டிட மனம் வேசாருமே இவ்வன பத்திர
காளியவளுமே அரணழிகை நிற்பதரிது
வைப வகாரியிக் கானக யிக பெரிது (அம்)

(ஸ்ரீ ராமன் வ-ம்) மாதவ முனிவரே இனி நாம் மிதிலைக்கு போகலாம் வாரும் சுவாமி

விசை கொண்டு யினிதான் யாவர் வேறெண்ணு இனி பிறப்பீர்

வாது-தருவு-தாளம்-சாப்பு-ராகம்-காம்போதி

கௌசிகன் வினா

வெகு
நீ வருகுவா ரகுராமா (நீவ)
ருடியோர் தவ மீடேற்றிய பந்தாம

(ஸ்ரீராமர் விடை)

மிதிலை
யாவர்ப் புகழும் மாமுனியே (யாவ)
எத்தனை தூரமோ யினி யுரைத்தனையே

(கௌசிகன் வினா)

தன்மை பொருந்து மென தைய வனம் (தன்)
தாண்டினும் மிதிலை முன் காணுமே துய்ய

(ஸ்ரீராமன் விடை)

துலங்கும் வனத்திற் கால்கள் நோக நெடு
தூரம் நடந்து வந்தோம் வேகமாதாக (துல)

(கௌசிகன் விடை)

அதோ தோணுகின்ற தெதிர்ப்பாரு மெந்தன்
ஆதி மூல பிரணவாதனே நீரும் (அதோ)

(ஸ்ரீராமன் விடை)

பார்க்கப் பார்க்க வூரின் பெருமை அந்த
பன்னகன்றனாலும் உரைப்பதே அருமை (பார்)

(கௌசிகன் விடை)

அருமனைப் புகழும் கம்பீர இந்த
அவனியோர்க் களிக்கும் அதி வீர தீர (அரு)

(ஸ்ரீ ராமன் விடை)

களித்தேன் னன்ன கர்த்தனைக் கண்டு அந்த
கணியனூர் அணிகோபுரருள் மிகக் கொண்டு (களி)

மிதிலைப் படலம்

ஸ்ரீ ராமன் கௌசிகனுக்குச் சொல் விருத்தம்

ரத்தின மிழைத்த கூடம் ரவ்வையாலமைத்த வீடும்
முத்தமைத்தது வோர்ப்பீடம் சுத்தமாம் பளிங்கு மாடம்
எத்திசையோர்க் களிக்க யின்னகர் பெருமையோர்ட
மத்தனர்த் திறமை கண்டு மனமது களித்தேனைய

(வ-ம்) ஆயின்னகரின் வற்புதமென்ன சொல்வேன் முனிநாத

கௌசிகன் ஸ்ரீ ராமருக்குச் சொல் தருவு-தாளம் ஆதி-ராகம்-தன்னியாசி

பல்லவி

இன்னகர் பெருமையை இன்னதெனவும் நான்
எடுத்துரைக்க என் தாம

அனுபல்லவி

கன்னல் வளரும் மிக்காகினி லென்றே
கவலை யினி யகலும் கண்டபோர்க் கென்றே (இன்)

சரணங்கள்

பிள்ளை பாதரி வில்வமும் கொன்றை
பிலா கடம்பை தேக்கு வெகு
பெரிய தாகிய வேங்கை யுடனே ஆத்தி
பாலை கதலி பாக்கு
நன்மை யுள்ள சந்தன மரங்க ளனேக
நாவல் மாமர மெதிர் காண்பீர் முன்பாக

வீதிக ளுன்னித மோத அதி சேடனால்
சொல்வுமோ யவன் பன்ன வெகு
உன்னிதமுடன் எதிர் துன்னிய மேடைகள்
வோங்கி தள தளவென்னி
பாதி பிரயாணியும் பரமன் வாழ் நாட
பாரினிலினி இதற் கெதுதான் யீடே (இன்)



மாசிலாத மன்னவனெதிராக
மதிய மச்சர்கள் சூழ வெகு
மங்கையர்களும் தினம் சங்கையிலா யிரவன்
மலர் மிசை யினித்தாழ
நேசன் சணிய நகர் வாசன் ஜெகப் பிரகாசன்
ஈசனுள மகிழ தாசர்க்கடியார் பூஷன் (இன்)

பொது விருத்தம்

மாசிலாதினி அயோத்தி மன்னவன் சேயர்த்தாமே
கௌசிக முனிவன் பின்னே கூடியே மிதிலை தன்னிற்
தேசிகன் வந்தா ரென்ன தேவர் நாவலர்க் களிக்க
காசினிர் புகழும் சீதாம் கனிஎனும் தாய் வந்தாளே

தரு-தாளம்-ரூபகம்-ராகம்-காம்போதி

பல்லவி

அன்னை ஜானகி வந்தாள் அன்பாய் பாரீரோ
அன்பாய் பாரீரோ

அனுபல்லவி

அன்னனடை எனவும் புவியோர் பின்னும்
பன்னவே பின்னும் பன்னவே (அன்)

சரணங்கள்

பாலசந்திர முகவதனமும் பளபளென்னவே பளபளென்னவே
காலினிற் தண்டை சதங்கை கொலுசு கலகலென்னவே (அன்)

தங்கத்தோட்டில் வங்கி ரத்தின முளிதுன்ன கவருளி துன்னவே
நங்கைமா ரினபுரம் தனிலென்னயமே பன்ன வெனயமே பன்னவே (அன்)

மல்லி முல்லை மந்தாரே மனமகிழ் வாடை வீசவே வாடை வீசவே
மெல்லி இவளிகரில்லை என விண்ணோர் மேன்மை பேசவே மேன்
(மை பேசவே (அன்)

சீதை தாதிகளுக்கு சொல் வ-ம்
அடி சகிகளே நாமனைவரும் நமது பளிங்குமாடனி மேடை
யின் மீது சற்று நேரம் பந்து விளையாடலாம் வாருங்களடி

(சகி வ-ம்) நல்லது அம்மணி
சீதை பந்து விளையாடும் தருவு தாளம் ஆதி ராகம் சங்கராபரணம்

பல்லவி

ஆடுவோம் பந்து ஆடி அடி சகியே வாடி (ஆடு)

அநுபல்லவி

கூடுவோம் விளையாடி கோங்கு மாமலர் சூடி நாடி (ஆடு)

சரணங்கள்

செண்பக மலர்ச் செண்டு சேர் நாம் கையிற் கொண்டு
மண் புகழவே பண்டு மல்லி முல்லை செண்டு ரெண்டு (ஆடு)

வஞ்சியரே முன்வாரும் வண்மை பந்தை தாரும்
நெஞ்சம் களிக்கப் பாரும் நானெய்திடுவேன் சேரும் கோரும் ஆடு

எறிந்த பந்தைத் தேடி எடுத்தோடி நீ வாடி
சிறந்த தோழி போடி சீர முன்பாக வோடி வாடி ஆடு

பாரடி என்னருமை பந்தெறிந்த திறமை
தேரடினம் பெருமை திகழொளித் தரமை ஆடு

முத்தாபரணமாட முல்லை மனமே சாட
சுத்தி மளினம் கூட சகுனி விளையாட நாட ஆடு

அஞ்சிட நினி மீடே அரிவேவர் இப்போதே
நெஞ்சம் களிப்பாய் கோதே மாமணி மேடை மீதேதோதே ஆடு

கனியனூர் முராரி கருணை குருமே கோரி
மணிமேடை மீதேறி மகிழ்வா மனயாறி மீறி ஆடு

சீதை ஸ்ரீராமனைக் கண்டு சொல் கொச்சகம்

பூரணச் சந்திரனே புர மூன்றெறித்தவனோ
ஆரணனோ நாரணனோ அங்கஜனோ மாமகிழ
காரணனோ கார் முகிலோ கந்தனிவனோ இனியித்
தாரணியோர்தான்களிக்க தான் வருபவனெவரோ

சீதை சொல் தருவு-தாளம்-ரூபகம்-ராகம்-அடாணா

பல்லவி

வருகின்றவராரோ இந்த வரோ வன்னபேரோ சகியே (வரு)

அநுபல்லவி

திரையக் குழ இப்புவிதனி லிவர்
அருமைப் பதமளித்திட களித்திட (வரு)

சரணங்கள்

அயனோ சந்திரனோ மிவரலை மீதுயன்யவனோ அல்லால்
நயன் மூன்றுடையவனோ அம்ம

நன்மையுள என்னிட சகியே இவ்வரென்றன்றுவீர் பன்னுவீர்
சகி காந்தனோதி காந்தனே சகியே மீதோ இறைக்கதனோ



வகமை மீதேவருகின்றோர் இன்
வண்மையவர்த் தன்மையும் காணிட புண்ணியமே பண்ணினேனடி சகி
மனம் சோருதே யினி யாராதே மணமேவி அர்க்கிணை யார்மாதே
கணமே தருமினி இப்போதே
காசிகரே கரிய னன்னகர் ஆரினில் வனரரியோ இவர் சகி (வரு)

ஸ்ரீ ராமன் சீதையை கண்டு சொல் விருத்தம்

பளிங்கு மேடையின் மீதென்ன பசுமைநற்பதுமையோ பின்
களினன் மலரின் தன்றுணி நயந்தரும் கூவையை தாவி
அளினமநேகம் சூழ்ந்து அச்சுவை கிரகிக்கின்றுப் போல்
தளிர் பெரும் மாதரோடு தானின்பவள் தான் யாரோ

(வ-ம்) இந்த பளிங்குமாமணி மேடை தன்மீது அற்புதம் பொருந்திய பொற் பதுமை போல் அநேக மாதருடன் நிற்கும் சுவராத்தின பதுமை யாரோ நானறியேனே

ஸ்ரீராமன் சொல் தருவு-தாளம்-ஆதி-ராகம்-கமாஸ்

பல்லவி

ஆரோ அறியேனே தெரியேன் இவளாரோ அறியேனே தெரியேன்

அநுபல்லவி

பாரோர்ப் புகழ என் முன் சீர மேடையி லுன்னத
சீர உவகை மீயில் வாரா கின்பவளிவ (ஆரோ)

சரணங்கள்

கூந்தலொளி வண்டினம் போலும் நெற்றி
குரிப்பேயலை யின்னகர் மேலும் நாசி
சார்ந்ததில் கமலர்க்காலம் தானட
தளதளென கண்ணாடி தானோ என் முன்னின்பவ (ஆரோ)

செல்விழிகளோ மிகன் னேத்தரம் அன்பாய்
செழித்தனுதலது விவகாத்தரம் வய
ராவிலை னவே சொல் ருஸ்திரம் இடை
ஆனந்தே பிடி நடை அன்ன பாத்திரம் (ஆரோ)

பொற்கிண்ண மிவளிரு கொங்கை அன்பாய்
பொருந்தும் கதலி தொடை நங்கை இவ
ளற்புத மென்ன சொல்வேனிங்கே அந்த
அயன் மகிழ்ந் தமைந்தானோ அறியே னானிங்கே (ஆ)

பொருந்தும் பூர்ண பிம்ப முகமே இந்த
பூவுலகினிற் மகிழ க்கமே வெகு
சிறந்த நற்குணமுள்ள விகமே தன்
சேவை தருக்கவே யான் செய்யாக இய ...மே



ஜனகன் கொலு படலம்

பொது விருத்தம்

மை வண்ண னிந்த விதமெண்ணி அங்கோர்
மாமணிமேடை மீதன்றிரவு தங்கி
தூய்யமுனி தம்பியுடன் புனலன்றுடி
திருமணி தன்னுதலி லுட்டு துலங்க அன்பாய்
அய்யனன்யெழுந்தான் அங்கனமே வாழும்
அடவர்களகமகிழ்ந்து சுகியின் முன்னே
நெய் யினையாய் கரையுமந்த வழியைத் தாண்ட
நிலே கொண்டான் மிதிலை மன்னன் கொலு கொண்டானே
வோரடி.

(தருவு தாளம் ஆதி ராகம் கல்யாணி)

மன்ன மன்னனாகிய மகிபன் ஜனக மஹா
ராஜன் கொலுவி லிருந்தான் எதிர்ப்
பன்னுமறை யோர் தினம் பாங்கா ஆசியை கூற
பாவாணரும் கவிகள் பாடி நயமாய் தேற
துன்னும் பொன்னின் மகுடம் சென்னியிலே சிராய்
துலங்க புஜ கீர் திரு தோளிர் நயங்கொண்டேற
வர்ண மயில் போல் உலாவி பெண்களும் கோர
வல்லமையுடன் கொலு வந்து அமச்சர் சேர
இன்னிலத்தினிற் மன்ன ரிருபாதம் போற்றி நேர
இருபுறமும் கவரி இசந்து வீசகம் பீர

இத்தலத்தினி லெவர் சித்தமும் களிக்க
இசந்து புனுகு பன்னீருடன் தெளிக்க
எத்திசையோர் தினமின்பம் படிக்க
எதிரினில் பூரிதத் தாரியும் பிடிக்க
சித்த மகிழ பலர் சைதவிலடிக்க
சீருடன் வனிதையிற் சேர்ந்துமே நடிக்க

ஜெய மிகுந்திடும் நேசன் மிதிலை ஜனகர மஹா ராஜன் இவ்வா
மளர் முக உல்ராசன் எவரும் மகிழும் ஜக பிரகாசன் நல்ல



கனக நவமணி தன் உரமதிற் துன்ன
தினகர னொளிமுக விலாச மென்ன
தனதுடன் வெண்குடை தழைத்துமேல் துன்ன
சனிதப பரத சாஸ்திரமே மன்ன (மன்ன)

ஜனகன் போற்றி விருத்தம்

சுரா சுரர முனிவர் திவ்விய சுர்தி மாதவத்தோரிந்த
தராதலத் திரச ரெண்பத்நான்கு ஜீவத்திலுள்ளே
நிராமய மாகி எங்கும் நிறைந்தனர் பொருளே அன்பர்
புராரிவோம் முராரியே உன் பொற்றினை யடிக்கே போற்றி

(பொது-வ-ம்) இவ்விதம் ஜனகன் கொலுவிலிருக்கும் சமயம் கௌசிகன் ஸ்ரீ ராமனுக்குச் சொல்லுகின்ற விதம் காண்க

கௌசிகன் ஸ்ரீ ராமனுக்கு சொல் விருத்தம்

செந்திரு வதனனே நான் செப்புவதினி நீ கேளாய்
அந்திரனுலகில் வாழும் அமரர் யாவரும் களிக்க
சுந்திர முகமலர்ந்து செங்கோல் நடத்து மிந்த
மந்திர மதனுள் வாழும் மன்னனை காண்போம் வாரீர்

(வ-ம்) எராமா தேவர் முனிவர்களும் புகழ செங்கோல் செலுத்திய இந்த மன்னவனை கண்டுவருவோம் வாரும் தசரத நந்தனா.

(ஸ்ரீ ராமன்-வ-ம்) நல்லதப்படியே சுவாமி.

(கௌசிகன் வ-ம்) ஆரடா துவாரக நான் வந்தேனென உன் மன்னனவனிடம் உரைப்பாயடா

(துவாரகா வ-ம்) ஆனால் நீர் இங்கனமே யிரும்.

(கௌசிகன் வ-ம்) நல்ல தப்படியே.

(கட்டியன் வ-ம்) அநேக மணி மகுட கனக சிம்மாசன பராக்கு வந்தனம். பராக்கு

(ஜனகன் வ-ம்) என்னடா கட்டியம்.

(கட்டியன் வ-ம்) யாதோ ஒரு முனி வந்தது.

(ஜனகன் வ-ம்) முனியா நல்லது தூரத்தி விடும்.

(கட்டியன் வ-ம்) நல்லதப்படியே.

(கௌசிகன் வ-ம்) என்னடா கட்டியம் சங்கதி.

(கட்டியன் வ-ம்) முனி வந்ததென்றேன் உன்னை அடித்து துரத்திவிட எவும் உரைத்து விட்டார் நீர் போம் போம் போம்

(கௌசிகன் வ-ம்) அப்படி யல்லடா காதிபன் சுதனாகிய விஸ்வாமித்திரன் வந்தாரெனடா

(கட்டியன் வ-ம்) நல்லது நல்லது.

(கட்டியன் வ-ம்) வந்தனம் பிரபு வந்தனம்

(ஜனகன் வ-ம்) என்னட போராட்டம்.

(கட்டியன் வ-ம்) போராட்ட மல்ல சோராட்ட மில்லாமல் மாராட்டம் பிரபு.

(ஜனகன் வ-ம்) என்னடா விகடகம் பேசுகிறாய்.

(கட்டியன் வ-ம்) இல்லே யாரோ காதிபன்றம் யவர்குமாரன் கௌசிகபடித்தவ ராம் வந்தனர் பிரபு

(ஜனகன் வ-ம்) கௌசிகரா என்னடா

(கட்டியன் வ-ம்) ஆம் ஆம் அது மெய் அரனுட்டு செய்

ஜனகன்-சொல்-தருவு-தாளம்-ரூபகம்-ராகம்-காம்போதி

பல்லவி

வந்தனம் துரையே பொன்னடிக்கு வந்தனம் துரையே

அனுபல்லவி

எந்தன்னற்குறை யீடேற்ற வந்தா இன்றே
முன் செய்த பாக்கியம் தான் வந்ததென்றே (வந்)

சரணங்கள்

கனிவா மார்முகமே மலர்ந் தெனின் ஞட்டினிற் இகமே
கனிதரு மெந்தன் கற்பகத் தருவே
காணக்கிடையாத காரண குருவே (வந்)

அண்டர், முனிவரும் மகிழவே அகிலம் வாழ்பலரும்
கண்டு மகிழ்ந் திடும் கருணை நிறையே
கதி யென அருள்புரி சக்கரை யே (வந்)

நற்றவ த்துதியே உன்னை நானே நம்பினேன் சதியே
பெற்ற தாயும் பிதா வெனவே உம்மை
பேதை துதித்திட கோதை தீர்த்தா ஞண்மை (வந்)

(கௌசிகன்-ஜனகனுக்கு-சொல்-விருத்தம்)

ஆசீர்வாத முந்தனருமை மன்னர் செங்கோலுக்கே
ஆசீர்வாத முந்தன் அழகிய முடி தனக்கே
ஆசீர் வாதமிந்த அகிலமே புகழ்பெற்றோங்க
ஆசீர் வாதமே விண்ண மாரும் மகிழ்ந்தா ரேனே.

(வ-ம்) சுபிபவ அகீபவ உன் செங்கோல் மனுநன்நீதி யாவு ம் சீமேயாக விழங்கடவா மன்னா

(ஜனகன்-கௌசிகனுக்கு-சொல்-கவி)

திரு உலகினிலே சொர்ண தீபத்தை போல் விளங்கும்
அருவே இச்சிருவர் யாரோ அறிந்திட எனக்குரைப்பீர்

கௌசிகன்-ஜனகனுக்கு-சொல்-தருவு-தாளம்-ஆதி-ராகம் (அடாணா)



(பல்லவி)

ஆரென்று நீ எண்ணினு ஜனகனே நீ ஆரென்று நீ எண்ணினு.

(அனுபல்லவி)

பாரோர்ப் புகழுமயோத்தி பதியாம் தசரதன் செய்
பாக்கியந்தா னுதித்த பாலரென எண்ணு மல் (ஆ)

(சரணங்கள்)

அருபதாயிர காலம் ஆண்டும் புத்திர ரில்லாமல்
அவனியில் அவன் மனம்நொந்து தாயே வசிஷ்டன்
கரிதியப்படி அல்லோ கலை கொடுவால் புத்திர
காமேஷ்டியா கமும் செய் தானே அதிர்
சிரந்த பூதமே பிண்டம் சிரா அளிக்க பொன்னின்
செம்பில் இரண்டாகவே பகிழ்ந்தாரே மகிழ்ந்து (ஆ)

மூத்த நாயகிக் கொன்றும் கைகேசி தனக் கொன்றும்
முகமலர்ந் தரசன் னளித்தானே தந்த
சூத்திர மதையறிந்து சுமித்திரை யிருவருக்கே
சேவிக்க அதிர் கொஞ்சம் யீந்தாரே மன்னனுக்கு
கேத்த நாயிடம் ராமன் பிறந்தான் எங்கன்
இடர் தீர்த்த இவன் தன்னை அவனியோர்ப் புகழ்வாரே (ஆ)

பரதன் லக்குவன் சத்துருக்கன் மற்றிருவர் தன்
ப்பலரா மென மூவர்ப் பிறந்தாரே என்
விரதமழிக்க வந்த வெள்ளாட்டி சுவாகையும்
வீரராமனம் பெய்ய மாந்தரே கௌதமன்
கரிதியப்படி கருங்கல்லா கிடைத்தாள் மீது
கர்த்தன் பாததூள் சிந்த சித்தம் தெளிந் தெழுந்தாளே

(இதுவும் கௌசிகன் ஜனகனுக்கு சொல் விருத்தம்)

வரத்தினுல் வந்துதித்த வண்மை மாமலரை போன்றேன்
கரத்தினிற் திறமை தன்னை காணவென் றெனக்கோராசை
பெருத்த வில்தனையே தாராய் பெருமானும் வளைப்பானேனும்
கருத்தி சந்திளி பார்ப்போமே காசினி தனிலே மன்ன.

(வ-ம்) யேமன்னா இவ்விதம் பிறந்தயிச்சிறுவன் வலுமையை யான் பார்க்கவேண்டு மென்றெண தெண்ணம் யிருப்பதால் உன்னி டத்தில் யிருக்கும் வில்தனை வளைப்பானென்றென தெண்ண மிரு ப்பதால் வில்லினை வரவழைப்பா ஜனக

(ஜனகன் கௌசிகனுக்கு சொல் விருத்தம்)

அன்னமே சேர் முனிவரே யான் கடைதானென்றுரையேனைய
உண்மைதான் வரத்திர் யிப்போ வோங்குவில் தனை வளைத்தால்
கன்னமன்றி மகளை அன்பாய் கல்யாணம் செய்தளிப்பேன்
மன்றறு விண்ணளிவதாக மருத்துவே ருரையேனை ய

(வ-ம்) மாதவ முனிவரே யிச்சிறுவன் அந்தவில் தனை வளைப்பானேயாகில் யான் அருமையுடன் தவம்செய்து பெற்ற மகளாகி சீதையை விவாகம் செய்து தருவதற்கு வோர்தடையிராது சுவாமி

(கௌசிகன்-வ-ம்) ஆனால் வில்தனை வரவழைப்பாய்.
(ஜனகன் வ-ம்) நல்லது வரவழைக்கிறேன் சுவாமி.

(இதுவும் ஜனகன் கட்டியனுக்கு சொல் கவி)

கல்வியில் மிகுந்த யேவல் கட்டியாயுரைக்கக் கேளாய்
வில்தனை எடுக்க தீரமல் லவரை வரவழைப்பாய்
(கட்டியன்-வ-ம்) நல்லது வரவழைக்கிறேன் சுவாமி

(பொது விருத்தம்)

ஜெயம் பெறமிதிலை மன்னன் சொற்படி வாருமென்ன
நயந்தரும் வாசல்காரன் நாடி வந்தழைத்தானன்றே
பயந்தரும் மல்லர் தாமே பராக்கிரமோ டெழிம்பிதங்கள்
புயம்தனை தட்டிவீரர் புறப்பட்டார் ஸ்திரப்பட்டாரே

(தருவு தாளம் ஆதி ராகம் அசாவேரி)

(பல்லவி)

மல்லர் நாங்களே பெரியமலைகளை தலையின்மேல்
கிளையுடன் தூக்கிடும் (மல்லர்)

(அனுபல்லவி)

எல்லையிலினை யொருவரு மில்லையென வே
வல்லமையுடையோர்கள் வணங்கி நடுங்கிடவே (மல்லர்)

(சரணங்கள்)

சகல முரட்டுமெங்கள் கரம்தனை நீட்டுவோம்
தகிணதிமிதோமென தாண்டவமாட்டுவோம் (மல்)

63



சீறுகிற வரையும் திமிக்கிட்டாட்டுவோம்
நாம் பேசுவோர்வாயை உடைத்துப்பந்தாட்டுவோம் (மல்)
பருகும் கனிபகர் பாயனைப் டுவோம்
சுடர்தரும் தீகம் தளக்கு வந்து பேலாடுவோம் (மல்)

(மல்லர்-ஜனகனுக்கு சொல்-விருத்தம்)

பார்புகழ் அரசே யிந்த பகருமிக்கொலுவி லன்பாய்
சீட்டெழுதி தனை எழுத்தசேதி உள்ளமகிழ்ந் து
எப்பொருளைப்பாய் தங்களெண்ணத்தின்படி நடப்போம்
கார்ப்பொழில் உலகிலேதன் கழுத்தனக்கிணங்கிறேனே

(வ-ம்) சொர்க்க மத்திய பாதாளமென்னும் உலகிற்புகழும் மன்னவா எங்களைத்தேவரீர் அழைத்த காரணம்யாது தெரியச்சொல்வீர் மாநுபாவா

(ஜனகன்-மல்லருக்கு சொல்-கவி)

அழகுதனிற்பணிந்து நிற்கும் கடினவீரர்களே கேளீர்
எழில் பெரும்வில்லதனை கொண்டிங்கனைம் வருகுவீரே
(மல்லர்-வ-ம்) தமதருள் படியே எடுத்து வருகின்றோம் ஆண்டவா

(பெரியமல்லன்-சொல்-விருத்தம்)

சிங்கத்தின் பல்லாவட்டா சொட்டை மூக்கா நீவாடா
தொங்கிய காதாவட்டா தொந்தியின்வயிறா பீளை
பொங்கிய கண்ணாவாடா போதிப்பனேவாடா மன்னன்
இங்கனம் வுரைத்தவாரே இனியதோர் வில்லெடுப்போம்

(வ-ம்) சிங்க பல்லா சொட்டை மூக்கா யானைகாதா சால்வயிறா பீளைகண்ணா மன்னவன் எண்ணத்தின்படியே வில்லை எடுத்து வருவோம் வாருங்களடா

(மற்றொருவன்-சொல்-கவி)

எந்தனுலாகாதப்பா உந்தனப்பாவை சொன்னேன்
சிந்தைதான் கலங்குதின்றே செத்தாலும் தொடேனே

(வில்லை-வ-ம்) அடே அண்ணே இந்த வில்லைப்பார்த்தால் மிகவும் பயமாகவே யிருப்பதால் உன் அப்பாவைப்படி நான் இந்த வில்லை என்கையால் தொடேனடா

(பெரியமல்லன்-வ-ம்) மன்னவன் நம்மை தண்டிப்பான் பேசாமல் வாடா
(சிங்கப்பல்லன்-வ-ம்) ஆனால் பார்ப்போம் வருவீர்

(மல்லர்-வில்லெடுக்கும்-தருவு-தாளம்-ஆதி-ராகம்-நாதநாமகிரிகை)

(பல்லவி)

மெள்ளமெள்ளென தூக்கடாசப்பாணிகளே (மெள்)

(அநுபல்லவி)

எள்ளள வசைந்துமே யினி துவையாதே வில்லு
உள்ள முருகுதடா வோ ஹோ யிதென்ன சொல்லு (மெள்)

(சரணங்கள்)

குட்டங்காணம் போட்டும் ஒளம்பா இந்த வில்தானே
ஒட்டிவாடா நீதான் ஒதுங்குவது யே னே (மெள்
எத்தனையோ மலைகளை எடுத்து சென்றாடினோமே
இத்தனை பளுவதுதான் ஒத்த காலினை கண்டோமே

அப்பா அப்பா யிந்த வில்தானசையவில்லையே தூக்க
தொப்பையானே நீ தானின்றாயோ பார் க்க
தாரணிபுகழ் கணியனூரக் கரி அரியை நாடி
வீரர் நாயனைவரும் விகடம் பேசாமல் கூடி மெள்ள

(அதிகாரி மல்லன் வ-ம்) மெள்ள நடப்பீர் தள்ளாடி விழப்போறீர்
(மற்றொருவன் வ-ம்) குள்ளப்பயலே கூவாமல் நடடா
(யானைக்காதன் வ-ம்) வேர்வை தாடையடா வெள்ளாட்டிமகனே
(பீலிக்கண்ணன் வ-ம்) தெரியும் தெரியும் தேவடியாள் மகனே
அதிகாரிமல்லன் வ-ம்: மகமேருவில்தனை மன்னவன் முன் வையுங்களடா
சிங்கமல்லன் வ-ம். அதிபதிமல்லனே அரசன் முன் வைத்தோம் வைத்தோம்
அதிகாரிமல்லன் வ-ம். மன்னவா தம் தெண்ணத்தின்படியே வில்தனை எடு
த்து வந்து தமது முன்னிற வைத்தோம் பிரபு.

ஜனகன் வ-ம. நல்லது அப்படியே யிருக்கட்டும்.

ஜனகன் கௌசிகனுக்குச் சொல் விருத்தம்

எத்திசை புகழ்ப் பெற்றோங்கும் இந்த வில்தனையே விஸ்வாமித்திர முனி
யே அன்பாய் மேன்மைசேர் கொலுவில் வந்த புத்திரனி தனைமுனி பூட்டிடு
வானேயாகில் சத்தியமுட னென்பெற்ற ஜானகிதனை முனிவேன்
வசனம் திருலோகம் யாவும் புகழும் மாதவமா முனிவரே இந்தவில்லை
இச்சிறுவன் வளைதநிவானேயாகில் நான் அருமையுடன் பெற்ற மகளாகிய
சீதையை இவனுக்கு விவாகம் செய்களிப்பேன் முனிவரே.

(கௌசிகன்-ஜனகனுக்கு-சொல்-விருத்தம்)

இந்தசரிசரிதான் மன்ன யிசைந்த சொற்படியே யிந்த
வதிசயமான வில்லை வானவர்மகிழ ராம ன்
சதிர்பெரும் கரத்தில்ந்தி சபாகேஷன் எவருமெச்ச
எதிரிலாது தனை முனி எடுத்திவன் வளைப்பான் பாராய்

(வ-ம்) ஜனகா உன் எண்ணத்தின்படி யிச்சிறுவன் இந்தவில்லை உன்
உள்ளம் மகிழ வளைப்பான் பார் மன்னவா
(கௌசிகன்-வ-ம்) இராமா இந்தவில்தனை வளைப்பாய்

(ஸ்ரீ ராமன்-கௌசிகனுக்கு-சொல்-விருத்தம்)

வளம்தரும் முனிவரே உன் வார்த்தையின்படியே யிந்த
அந்தவில் தன்னையே முனி அமத்திடேன் றென்னெஞ்சம்
தளர்ந்திடேனி நிதானுங்கள் தயாதிருவில் களிக்க
இன்மை என்கரத்தில் தானே எடுப்பேன் வில்வளைப்பேன் பாராய்

(வ-ம்) தமதருள்படி யானிந்த வில்தனை எடுத்து வளைப்பேன் பாரும் மா
தவ முனியே

(ஸ்ரீ ராமன்-சொல்-தருவு-அடதாளம்-ராகம்-கருட்டி)

(பல்லவி)

இந்தவில் என்கைசரியா முனிநாத நீ
இதோ வளைப்பேனே குரியா

(அநுபல்லவி)

பந்தமுடன் ஜனகன் பகரும்படியே ஐயா
பகவன குலத்தேவர் புகழும்படியே தய்ய

(இந்)



(சரணங்கள்)

உலகில்மிதிலை மன்னவன் ஓங்கும் வில்தனை கொண்டு
சவம்செய்திடவே யிந்த சமயந்தனை நான்பண்டு
ஆதியில் ருத்திரனுக் கன்றமந்த திந்த வில்தானே
தீதுசெய் முப்புரம்தனை தடைத்த வில்லிதுதானே
விண்ணவர்க் கதிபனையிர சன்னும் மகிழ்வாதேர
மண்மைக் கணிபனென்நகர் வாழ் வண்மைபணி கோபர்தேர

ஸ்ரீ ராமன்-கௌசிகனுக்கு-சொல்-விருத்தம்

சத்துவில் யிதுதானேன்ன சதிர்பெர வளையுமென்றே
சொத்தவில் என்கைதந்து சோதிக்கலாமோ யிந்த
எத்தவித்தைகளு மன்னனேங்களும் கற்றார்விஸ்வா
மித்திர முனியே இரண்டமுறிந்த வில்லிதனை பாராய்

(வ-ச)மாமுனிவரே இவ்வுலகில் யாவர்களுக்கும் யிணங்கா வில்லென
சொற்கொத்தவில் தனை என்கையில்தந்து என்னை தேவரீர் இப்படிக்கு சோதி
க்கலாமா சுவாமி

(பொது-வ-ம்)இவ்விதம் ஜனகன் தந்தவில்லை ஸ்ரீ ராமன் வளைக்க வில்லா
னது இரண்டாக முறிந்ததை முனிகன் கண்டு-ஜனகனுக்கு சொல்லுகின்ற
விதம் காண்க. கௌசிகன் வ-ம் மன்னா வுன் எண்ணத்தின்படி ராமன் வில்
வளைக்க வில்லானது இரண்டு துண்டமாகியது இனி உன் எண்ணம் யாது
சொல். (ஜனகன் வ-ம்) வேறொரு எண்ணமாவது யில்லை ஆண்டவா

கௌசிகன் வ-ம் ஆனால் விவாகம் நடத்துவதற் கென்ன
ஜனகன் வ-ம் வேறொரு எண்ணமும் யில்லை நடத்துவோம்
கௌசிகன் வ-ம் ஆனால் நல்ல நாள் கொண்டு தசரதனுக்கு திருமுகமெழுதி
ம் மன்னவா இதே நல்ல நாள் ஆனால் சரி

பொது-விருத்தம்

பாப்புகழ் அரசர்க்கெல்லாம் பதியருள் படிவா வென்ன
ஊர்முழுதும் சிறந்த உனனித பர்தவிட்டு
வார்த்து குழ உலகினர் நான்கு வகையோர்க்கு மரிக்கை செய்து
சீர்பெற அயோத்திக் கன்பாய் சேதியன் றெழுதலுற்றான்

ஜனகன் வ-ம் மந்திரி அயோத்திக்கு திருமுகமெழுதும்
மந்திரி வ-ம் சொல்வீர் பிரபு

(ஜனகன் திருமுக மெழுதும் எண்சீர்விருத்தம்)

மகா ராஜ ராஜமானி யாயர்ணிக்கா மகுடாபோற்றிசக்ராஜனெனும் பிர
சன்ட் சொர்ணஉன்னதனே விண்ணோர்ப் புகழ் ராஜர் வொரு விண்ணப்
பம் புகல்வேன் அதுயாதெனில் வெகு ராஜர்க் கிணங்காவில்லை வளைத்த
உன் தனையனுக் கென் மகள் சீதாம்கனியை தந்து மாமணம் முடிப்பதற்கே
உகந்த நாளிதுசானைய உந்தனுக் கெளியேன் நானே மகிழ்ச் துணைக்கனுப்பும்
மாமனைவோலை ஆய்ந்து புகழ்ந்து நீர் மிதிலைக் கன்பாய் பூரித்துவருவாய் போ
ற்றி.

ஜனகன் வ-ம் சேவகா இந்த திருமுகம் அயோத்திக்கு கொண்டுபோய்
மன்னனுக் களிப்பாயடா

(சேவகன் வ-ம்) நல்லதப்படியே போய் வாரேன் பிரபு
(பொது வ-ம்) இவ்விதம் சேவகன் விடைபெற்று அயோத்திக்கு வர
அச்சமயம் தசரதன் கொலுவுக்கு வரும் விதம்காண்க.

தசரதன் இரண்டாவது கொலுப்படம்

பொதுவிருத்தம்

மஹாராஜன் அசமஹாராஜ னென்ற
மஹா ராஜன் முக சூரிய வம்சிஷ்டராஜன்
சுகராஜன் கௌசிலை கைகேசி சுமித்திரையாம்
தேவியர் கைதொட்ட ராஜன்
மிகராஜர் பணிந்திட இந்திரனை சார்ந்த
விஜய தசரத ராஜன் அயோத்தி வாழும்
ஏக ராஜன் வொருவன் நீதியாலே
தேச மெல்லா மொருகுடைக் கீழ் செய்தாண்டானே

(தருவு தாளம்-ரூபகம் ராகம்-பைரவி.)

பல்லவி

மன்னன் கொலுவந்தானே மகராஜன் தசரதனே

அநுபல்லவி

இன்னிலம் புகழும் கோனே இரவிகுலத்தன் பேரனே

சரணங்கள்

சென்னியில் மகுட மின்ன சீராய் பதக்கம் துன்ன
மன்னர் இருபுரம் பன்ன மாதர் சோபன மென்ன
உரசு எக்காளபேரி மிகவீணை சின்னம் துத்தாரி
வரிசை கனசட்டு பூரி வாத்தியம் சங்குகள் மீறி
கருணை பொழியும் கிருகணிய ஹோர் வாத நதி
சரணமே மாவாதுதி சகலதேசாதிபதி

தேச-விசாரணை-தாளம்-ஆதி

தசரதன் வினா

நீதியுள்ள எனது மந்திரிமாரே சதுர்
வேதம் புரியுரா ரா ஆமந்திரி

சுமித்திரன் விடை

காதலுட னவர் வோதியே வருகிறார்
மேதினி தனிலெவரும் அரசே

தசரதன் வினா

ஆவலுடனே சுரநிலயங்களிர் முக்
கால பூஜை நடக்குதா மந்திரி

சுமித்திரன் விடை

காவலர் தொழும் குணா கேளும் முக்
கால பூஜை நடக்குதே அரசே

தசரதன் வினா

இப்புவியரசர்கள் கப்பம் கட்டியே
இன்பமுடன் வாரரா மந்திரி

சுமித்திரன் விடை

தப்பிலாமலே இப்புவியாசர்கள்
கப்பம் கட்டி வாரா ரரசே

தசரதன் வினா

கதம்புர் புலியுடனே காராம்பசுவினம்
கலந்து வாழ்கிருக்குதா மந்திரி



சுமித்திரன் விடை

வெறிப்பிடாமல் பசுவோடு புலியும் இனம்
விருப்பமுடன் இருக்குதே அரசே

(பொருள்-வசனம்) இக்விதம் அரசன் கொலுவிருக்கும் சமயம் மிதிலை மன்னன் அனுப்பிய சேவகன் சொல்லுகின்ற விதம்காண்க.

தருவு தாளம்-ஆதி ராகம்-தோடி

காவலன் வினா

செந்தாமலர் வதென சேவ — தங்கள்
சேவடிக்கு வந்தனம் காவ — செச்

தசரதன் விடை

காவலா வுன தூரது எங்கே — வந்த
காரண முரையடா யிங்கே — காவ

காவலன் வினா

சொல்வேன் மிதிலை என்னூரையா — ஆளும்
உனைக்காணுவதாயால் வந்தேன் பொய்யா — சொல்

தசரதன் விடை

வந்த காவலனோடே வோடி — இன்ன
வகை பென உரையடா நாடி — வந்த

காவலன்-விடை

நாடி சீதையாற்கே கல்யாண மென
நய்ந்தார் வோலை வுமக்கே மன்ன — நாடி

தசரதன்-விடை

நன்மை கனியனகர் ஜோதி — மந்திரி
நாடியுரை யிதனுள் சேதி — நன்

(தசரதன்-வ-ம்) சுமித்திரரே இச்சேவகன் கொண்டுவந்த திருமுக வோலையை பிரித்து வாசிப்பாய்.

சுமித்திரன்-வ-ம். நல்லது பிரபு

எண்சீர் ஆச்சிரிய விருத்தம்.

ஸ்ரீமது சத்குரு கிருபா கடாக்ஷ
சம்பன்ன சற்குரு வான
காம்பீர்ய ஜனக மஹாராஜ கல்யாண அனந்த
கோமளவஸ் துய கடாட்ச — வெச்
தர்மசத்திய வெகுவிதமான்ற கலைக
தெரிந்த ஸ்ரீட்டே
கொடுமை குறைந்த புவேன எளின் முகம் தனக் கெழுதும்
நிருபம் கேளாய்
மாமகிழ்வுனதருள் மந்ததால் எனதெண்ணம்
மகிழ வில்லை
தாமத மொன்றிலாமல் தயைசெய்தே வளர்த்த
தயைநினைத்து

ராமனுக் கெனது மகள் மாமணம் யிட யினிஎன்
மனதிலாவல் தசரத
நாம வந்தருள் புரிவாய் நயந்த மிதிலேசன் மிக
நனேக வந்தனமே பிரபு.

(தசரதன் வ-ம்) மந்திரி ராமன் லெக்ஷ்மணன் என்னை பிரிந்த நாள் முதலாக இரவும் பகலும் மனவேதனைபாகவே யிருந்தது இந்த சபவார்த்தையால் என்னுளம் களித்தேன் இனி அந்த புரதிற்கேகி எனது மனைவிகளை அழைத்து வருவாய் மிதிலைக்கு செல்லவேண்டும்.

(சுமிந்திரன் வ-ம்) நல்லதப்படியே பிரபு.

பொதுவிருத்தம்

கோசலை நகர்தானும் கோமளை ளென் றுரைத்தாரே
ன்றே வாசல் காவலரும் வோடி வாரு மென்பதை அறிந்து
மாசிலா மணிகள் பூண்டு மாதுவெள சுவே கைகேயி
பாசமாம் சுமித்திரை மூவர்பதி அருள்படி வாராரே

தருவு தாளம்-ஆதி ராகம் சுருட்டி

பல்லவி

பதியருள்படி வந்தாரே பாங்கிமார் சூழ — பதி

அநுபல்லவி

திவிதபூஷணை மேலணிந்து மனமகிழ்ந்து
அன்னத் திரென மூவரசைந்து நடையிசைந்து — பதி

சரணங்கள்

கூர்ந்த தாயரை மூனும் மூவர்க் கோரச்ச
அமைந்த தெனவே தோழும் அந்த
காமமாம் தசரதனர் நயந்த காரணம் காண
நாரியர் அரிகில் வந்தாரும் சரணமேன — பதி

சாமரங்களும் வீச சகியார் வந்து
சார்ந்து நயமாய்பேச ராம
நாமதாமமதை நாடிமகிழ்வாயாடி
நாலுவிதம் கொண்டாடி நாதன் பதமேபாடி — பதி

காம் ருவித்தேவரும் துன்ன கனியநகர்
கர்த்தன் ருன் தனையே பன்ன மன்னவன்
கருத்தரிந்திட மூவர் காதலுடனே மீறி
கண்டு மனமகிழ்வா கிருஜை செய் என கோரி — பதி

(மூவர்களும் போற்றி விருத்தம்)

மன்ன மன்னவரே போற்றி மாகிலாவமுதே போற்றி
நன்மை சேர் கொலுவி லன்பாய் நாடியென்றழைத்தசேதி
பன்னும்வகை தானெங்கள் பிராண நாயகனே தங்கள்
பொன்னடியிணையடிகளுக்கே போற்றினோ மெங்கள் கோவே

(வசனம்) வந்தனம் எங்கள் பிராணவல்லபா தமது கொலுவில் எங்களை அழைத்த காரணம் சொல்லும் சுவாமி.

(தசரதன் சொல்-விருத்தம்)

திறம் கொண்ட மிதிலை மன்னன் திகழசபைதனிலோர் வில்தான்
உரம் கொண்டதனை பாலன் வோங்கியே வளைக்க ஈசன்



வரம்கொண்டு ஜனகன் பெற்றவன்மை ஜானகி ராமர்க்கும்
சிறந்த கல்யாண மென்ன சேதியின்படிபோவோமே

(வசனம்) மாதர்களே மிதிலையில் நமது புத்திரன் வில்லொன்றதனை பாவை வளைத்தபடியால், அவன் குமாரத்தியை நமது குமாரனுக்கு விவாகம் செய்வதினால் ருமன் வரும் மிதிலைதனக்கு போகலாம் வருவீர்.

மூவர்கள் சொல் கவி.

காமினி சிறக்கொண்டது நயந்தகல்யாண ராம
ஸ்வாமிக்கு முடிக்கநன்றே சரணமன்புடனே போவோம்

(தசரதன் மந்திரிக்கு சொல்விருத்தம்)

சரியிதே சரிதான் மந்திரி சமயம் யானுரைக்கக் கேள்
கரிபரி படையனந்தம் கர்தைத்தாரி பூரி
சுரிகி வேதியரு மன்றி சுருட்டி அவுதாவும் வீணை
கரிகிநானுரைத்த தெல்லாம் சடுதென வாச்செய்வாயே

(இதுவும் மது)

சவரனார்க் குடைகளோடு தாரைமல்லாரி சின்னம்
அவனியோர்ரரிய பேரி அறைந்திட செய்வாய் மந்திரி

(வசனம்) மந்திரி நான் உரைத்தபடி சேநாம் செய்குவாய்
சுமித்திரன் வ-ம் தடையிராது பிரபு

(பொது விருத்தம்)

ஒட்டக மதுன்றர்க்கோடி வோங்குனர்ப் புரவிகோடி
அஷ்டதிக்கதனை தாங்குமக் குலமது வோர்க்கோடி
புட்டிலா படைகள் சூழ மன்னவன் முன்னனே க
கூட்டியாரார் பரிக்க கனகதேரதின்மேல் நின்றுன்

(இதுவும் மது)

கனகமூர்த்தியும் குலங்க கன்னி மூவரு மிலங்க
சனிதபவென சங்கீத சாஹித்திய மிகமேலோங்க
வனிதையர்னடிக்க இவ்யாவதிஷ்டரன் ராசி கூரா
தனிகவிவாணர் பாட தசரதன் பயணமானன்

(தசரதன் மிதிலைக்கு பிரயாண தருவு தாளம் ஆதி. ராகம் கல்யாணி)

(பல்லவி)

ராஜராஜனை யோத்திராஜன் ஜனகமஹராஜன் பதிக்கு வந்தானே தசரதனும்
யோஜனை மென்மேல் மகிழ்ந்தானே

(அநுபல்லவி)

தேஜன் மணிமகுடம் துன்ன சென்னியிலன் பாய் ரா
தேன்மாரி செரிந்திட தேவர்களுமே தென்பாய்

(சரணங்கள்)

தவனகுடைமேலாட தகிவுனவும்
தரணியோர்கள் கொண்டாட வெகு
நவமணி பூஷணமே நானுவிதம் தான் துன்ன
நாரியர்கள் பரதனடினம் செய்தெதிர் மின்ன

கொடிபடை எதிர் சிறக்க குதிரையானைக்
கூட்டம் ஒட்டகம் பறக்க வெகு

முடிமன்னர் எதிர்க்காமே முனைந்து நதிதானென்ன
முச்சகத்தோர்களிக்க பச்சைப் பதக்கம் துன்ன ரா
சவரி னயமா வீச கனகமேளம்
கர்ஞ மிரதங்கம் பேச அன்பாய்
தவறிலாமலே சுதி தாளம் தத்தித்தோமென்ன
தண்மை கனியரிதன் தந்தை என சம்பன்ன ரா

(பொது வசம்) இவ்விதம் வந்த மன்னனை ஜனகன் கண்டு எதிர்கொண்டு அழைக்கின்ற விதம் காண்க

(ஜனகன் தசரதனுக்குச் சொல் தருவு தாளம் ஆதி ராகம் கமாஸ்)

(பல்லவி)

வந்தருள் இனி அயோத்தி செந்திருவதனமென்னீ வந்

அனுபல்லவி

எந்தனுபாமே மகிழ இந்த சிம்மசனத்தின் மேல் வீ

(சரணங்கள்)

பாலகிரிரு வரோடெபார்ப் புகழ் முனிவர் தாமே
சாலவே வந்ததா லெந்தன் சஞ்சலம் தீர்ந்ததென்கோனே வந்
அண்டர் மாதவத் தோர்க்கிந்த எண்டிசைக் கிணங்காவில்லை
பண்டுவுன் பாலன் வளைக்க கண்டு மகிழ்ந்தேன் கேள் சொல்லே வந்
என்னை மீடேரினதந்த கண்ணன் ஜானகைக்கு மாலை
வண்மையாய் குட்டிட என தென்னைத்தா லழைத்தேன் காலே வந்
ஆதவன் குலத்துதித்த குருவே கனிபனன் ஞோர்
ஸ்ரீ தரனருளே எந்தன்மீது தயையோடு கண்பார் வந்

பொது விருத்தம்

வந்த மன்னவனைக் கண்டு வணங்கியே மிதிலை வேந்தன்
சிந்தையுள் களித்தானன்றே சிம்மாசனம் தானீது
முந்திவந்தவர்கள் சேதி முகமலர்ந் துரைத்தான் பின்னே
தந்தை பொற்பாதம் காண தாரகனுமன் வாருன்

(ஸ்ரீராமலக்ஷ்மணுள் போற்றி செய் தருவு தாளம் ஆதி ராகம் காம்போதி)

பல்லவி

போற்றி போற்றி பொன்னடிக்கு தந்தையே போ

அனுபல்லவி

நாற்றிசையோர்கள் புகழ்ந்தேர்ந்தும் இருவடிக்கே போ

(சரணங்கள்)

அருந்தவம் செய்து பெற்ற அன்னை ஈவரடிக்கே போ
நலம் தரும் குலகுருனனின மலரடிக் கே போ
தளிர் பெரும் கணிபனூர் தான்மகிழும் சோபர்க்கே போ

(தசரதன் ஸ்ரீ ராமனுக்கு சொல் விருத்தம்)

அளினம் சூழ்மலரைப்போன்ற அழகிய முகமலர்ந்து
நளின னற்கரம்குவித்து நயமவந்தனமே செய்த
இனினிரெனவே பேசும் குழவி என்ன முதேர்த்தின
ஒளியினிலுயர்ந்த மேல வோடி நீ வருவாய் பா



தசாதன் ஸ்ரீ ராமனுக்கு சொல் தருவு அடதாளம் ராகம் சுருட்டி

(பல்லவி)

வாரா என் துரையே மணி முத்தம் தாராய் சக்கரை யே

அனுபல்லவி

சீரா அயோத்தி குமாரா செங்கோல் கொண்டு
சித்தம் களிக்க எந்தன் உத்தமனே நீ ஆண்டு வாரா

(சரணங்கள்)

முல்லையின் மணமே மூன்றுலகினில்
இல்லையுள் குணமே இந்த
எல்லையி லென்குறை யீடேற்றுவ துன்பாரம்
அல்லல் செய்யாதின்றே அகமகிழ்ந்தின்னேரம் வாரா
சோம வதனனே கதிர்க்குல திவ்விய
சாமயுரங்கனனே
காமகோடியே யெந்தன் கண்ணின் மணியே தேனே
மாமகுடம் புனைய மனமகிழுவாய் தானே வாரா
கருணை நீ புரிவாய் கற்பகமே யித்
தருணமென் றறிவாய் இந்த
அருணன் குலசேகா அவனி தனிலே யினி
அரையணுவுனைபிரிந் தகலேனட முக்கினி வாரா

(பொது விருத்தம்) விவாக பதுமைகள் இவ்விடம்

காற்றிசை புகழ்மன் நயந்திருந் திடவசிஷ்டன்
சாற்றியப்படி னனுக்கு சாங்கமாயிட்டான் றே
போற்றிசெய் வுலகில் யாரும் புகழ கல்யாண ரா ம
மூர்த்திக்கு னடந்த அன்பாய் முனைந்தனர் தினம்தானன்றே

(கல்யாண சடங்கு படலம்)

(திபதை அடதாளம் சுருட்டி)

தேவதுந்துமி அரைந்தார் விண்ணுலகத்தோர்
தேன்மாரி மிக சொரிந்தார்
மூவருளமே மகிழ்ந்தார் அந்தர் வீதியோர்
முல்லை மல்லிகை யிறைந்தார் மிதிலை தன்னிற்
நாவலர் இனம் கூடினூர் நாற்றிசை வோங்க
நயமா பெண்களும் பாடினூர் இந்த
பூவுலகினில் யாரும் புகழனன்னயம் கொண்டு தேவ
பூசுரர் யாவரும் பொருந்தி வரவும் கண்டு
வாழை கமுகுகால்கள் நாட்டினூர் முத்து வச்சிரத்
தால பந்தலின் மேல் கட்டினூர் மகிழ்வதாக
வேழமுகனை போற்றி சூட்டினூர் அருகுதும்பை
வேண்டி கர்ப்பூர தூபம் காட்டினூர் மிக
வாழியென வேலைகளாட் டினூர் வேத
வாக்குய முடன்னயம் காட் டினூர் அந்த
ஆழி எனவே அன்பத்தாரு பந்திகள் கூட தேவ
அரிகிலா மச்சர்தானே ஆனந்த மூடனாட
பேரிட வண்ணட மேளம் அடித்தார் திவ்விய
பெண்கள் நயமுடனே னடித்தார் சிலர்
பூரி சின்னமும் தாரை பிடித்தார் அன்றே

பூசுரர் மாமறைப் படி த்தார் மனம்
தேறி மஞ்சள் குங்குவ மிடி த்தார் வந்த
தீர ரெவர்முதம் கு டி த்தார் திவ்விய
நாரியர் னந்தம் பேர்னயந்து கோலமே தீட்ட
நாகசுர மேளமனேகர் வந்தது கூட்ட — தேவ

வச்சிர மிழைத்த னர்க்கூடமும் நல்ல
வண்மை முத்துகள் தின்மாடமும் அங்கே
பச்சை பவழத்தோடு பீடமும் கன
பசுமை பொன்னணிந்தனர்த் தடமும் மன்னர்
மெச்சும்படி பளிங்கு மடமும் இந்த
மேதியோர்க் களிக்கு மிடமும் எங்கள்
அச்சு நனக மகிழ்ந்தன்னே சீதையோடன்பாய்
ஆனந்தமுடன் மாலையதனை மாற்றிட தெம்பாய் — தேவ

ஆவலாய் அரசாணிக் காலும் கொண்டு
அமைத்தார் குடவிளக்கு மேலும் அன்பாய்
பூவைபர்க்கரகமும் சாலும் முன்னிற்
பூரித்தமைத்தார் பொன்னுலும் மானு
பாவன் யிடபுரம் தற் காலம் அம்மி
புதித்த தேவர்க்கதுமே மூலம் அங்கே
யாவர் மகிழ்வசிஷ்டர் எதிரில் பிரணவம் சொல்ல
ஆவின் னெய்தனை உண்டு அக்கினி எழும்ப நல்ல — தேவ

சாமரம் தம்பிமார் வீச மேலும்
சரணென எவர் வந்து பேச வெகு
தோமரம் னயந்திட னேச இந்த
தொல்லுலகிற் புகழ் பிரகாச ராம
நாமனுள மகிழ சர் வே ச ஜகத்
திரட்சகிநயகி கூச அலர்ந்
தாமரை யிடதுகை சுவாமியும் தொட்டிட
தார் மன்னவர்கள் கண்டு ததியென கிட்டிட — தேவ

அன்னை கால்விரலையன் மிதித்தான் விண்
நம்ம தோர்க்காண மாங்கல்லம் தரித்தான் அங்கே
பின்னே முக்கால் வலம் வந்தா ன் பாதம்
பிடித்தம் மிதனில் வேத்த மகிழ்ந்தான் பின்
நன்மை அருந்ததியை நாடி முன் சீதை
நாயகியா ரென கூ றி முன் பெரியோர்ப்
பொன்னடிக் கிருவரும் போற்றி செய்திட தேறி
பூமாரி சொரிந்தனர் பொன்னுலகத் தோர்மீறி — தேவ

சிவனும் சங்கரி வந்துசேர்ந்தார் அங்கே
சதுர்முகவனும் வாணி னேர்ந்தார் கே
சவனும் லக்குமிதானே னேர்ந்தார் அந்த
கருட கந்தருவரும் சூழ்ந் தார் வச்சிர
வாசன் இந்திராணியும் தாழ்ந் தார் சேனை
வாரி னயந்தெவரும் சொரிந் தார் எங்கள்
நேசன் கணியுனகர் வாசன் வுளம் களிக்க
கோசிகன்முப் தவார்யீசன் பரிமளிக்க — தேவ



(பொது விருத்தம்)

மாமகிழ ராமனோடு தம்பிமார்க்கும்
மணம் புணர்ந்தான் அனேக மாதர்குழ
பூமகளாம் ஜானகியும் புன்னகையும் கொள்ள
பூசுரர்வந்தாசிர் கூற புகழ அன் று
வரம்புரத்திலே என்தாய் வணங்கி நிற்க
வந்த மன்னவர் மகிழ்ந் தட்சதை யிறைக்க
நேமமுடனே சோபனம் பாட அன் றே
நிலைப்பட்டார் வஞ்சியர்கள் தலைப்பட்டாரே

(சோபனம் பாட்டு தாளம் ஆதி ராகம் ஆரபி)

(பல்லவி)

சோபனே சோபனேமே னித்திய சோபனே

அனுபல்லவி

பாப விநாசனுக்கும் பன்னிரு ஞமனுக்கும்
பார்ப்புக்கழை யோத்தியாள் பதியாம் தசரதர்க்கும் — சோ

(சரணங்கள்)

விண்ணவர்ப் புகழும் மேகவண்ண மேனி யானவர்க்கும்
புண்ணியவதியாம் மெங்கள் பூவையாம் சீதையார்க்கும்
வையகம் புகழவேழ்வி செய்திடும் கௌசிக ரு க்கும்
தூய்யமா முனிவசிஷ்டர் தையலருந் ததியார்க் கும்
மிதிலை பதிதனக்கும் மேன்மை அரசரு க் கும்
கதிதரும் கணியனூர் ககன வாகன ரு க் கும்

(லாலிபாட்டு)

சீர்பெற அயோத்திவாழ தசரத சேய் அன்புடனேலா லி
சின்னம யானந்த தருவே ஆனந்த சொரூ தப்பரனே லா லி
பார்புகழ தேவர்தாமே முறையமிட பாதுகார்த்தவனே லாலி
புன்ன காசயனதிவ்யா ரக்ஷக பரந்தாமமிகவும் லாலி
தசாதன் குறைநீக்கியே தாணவர் தலைவதைத்தவனே லாலி
தயங்கு மாமுனிவன் வேழ்வியீடேற்றி தான் முடித்தவனே லாலி
அசந்திடா கல்லாகிய அகலிதானை ஆதரித்தவனே லாலி
அரன் திருகரத்திரன் வில்லைரெண்டாக ஆக்கியதேவ லாலி
மன்ன மன்னவரும் காண ஜானகியை மணம் புணர்ந்தவனே லாலி
மாசிலாமிதிலே சனுமஜநகீச மனமகிழ்ந்தவனே லாலி
என்னை யாட்கொள்ளுமையா ததிஎனவும் இரவி மன்னவனே லாலி
என்று உன்னடியிர்த் தாழயின்பமா யானந்தவமுதே லாலி
பின்னும் சிறியேன் முறைக்குவாய் பாரளந்தவனே லாலி
பத்தரிடர் தீர்த்த வமுதேயிது சமயம் பாதுகார்த்தருள்வ லாலி
கன்னல் வளர்கணியனூர் வாழ்ஜானகி காம்த அன்புடனே லாலி
கரியாதி மூலமெனவும் கார்த்தவ ககனவாகனனே லாலி

(மங்களம்-தாளம்-ஆதி-ராகம்-சாவேரி)

(பல்லவி)

சீதாசமேதனித்யா சுபமங்களம் — சீதா

அனுபல்லவி

பீதாம்பரதார் ஆடகேயூர் மணிமகுட — சீதா

(சரணங்கள்)

பிராசபுண்டரீக பிரகலாத போதஜை  சீதா
சுகலஜன அர்ச்சக சர்ஜனரக்ஷக  சீதா
கருணை கடாக்ஷதேஜ கணியநகர் வாழ்ராஜ  சீதா

(பொது-வ-ம்) இவ்விதம் திருக்கல்யாணம் முடிந்த பிறகு ஆண்டவனும் சீதாம் கனியும் பள்ளியறைக் கெசன்று பரியளம் மிகுந்து நருமலரணிந்து மிகவும் உல்லாசத்துடன் இருக்கும் சமயம் ஸ்ரீராமன் சொல்லுகின்றவிதம் காண்க

(பள்ளி அறையில்-ஸ்ரீராமன்-சொல்-தருவு-தாளம்-ரூபகம்-ராகம்-சுருட்டி)

(பல்லவி)

அன்னமே வருவா ஜனகன் பெற்ற சொர்ணமே முத்தம் தருவா

அனுபல்லவி

நன்மையுடன் எதிர்த் துன்னிய மேடை மீ  தன்

(சரணங்கள்)

கன்னலே தேனே களிக்கும் சர்க்கரை யே
காணக்கிடையாத கார்த்திகை பிறை யே  அன்
செந்தாமலர் முகம் சேர்ந்திடா தென் கண்ணே
சேனுலகினிற் செழிக்கும் ரத்ன குண்ணே  அன்
ரஞ்சிதமே நானே கொஞ்சும் மட மா னே
அஞ்சிடாதினி என் அருகில் வா தே னே  அன்
காதலுடன் நாமே களிப்பா யிப் போ தே
கணியனூர் வாழ்கரிய மல்லன் சோதே  அன்

சீதை ஸ்ரீராமனுக்குச் சொல் விருத்தம்

கோதை தானென்ற எந்தன் கோமனே வுரைக்கக் கேள்
பாதந்தான் வைத்த பாறை பாவையர்ப் ஆனதா லே ன்
மீதுகல் லனேகம் தன்னிற் மிருது காம்பட யிதல்லா ம்
மாதர்களாகுமல் தங்கள் மனமதென் மீதுண்டா மோ

(வ-ம்) வந்தனமெனது ஆத்மநாயக தமது மீதெனக்கு வோர் வியாகூலம் யாதெதன்னில் தேவரீர் காடதனை சஞ்சரித்து வரும் வழியில் தங்களுடைய பாததூள் பட்டமாத்திரத்தில் ஓர் பாறையானது பெண்ணானதால் இந்த எளியாள் மீது அநேக கல்லானதால் தமது மலர்போன்ற கரம் பட்டமாத்திரத்தில் இந்த கல்கள் யாவும் பெண்களாகுமல் என்மீது மறுமனம் நாடுமோ சுவாமி

ஸ்ரீராமன் சீதைக்குச் சொல் விருத்தம்

மன்னு விண்ணரிய கைலைமா சிவன் அபன்மால் காணு
வண்ணமபா யுனையான் மாலை வளமையாய் சூடி எந்தன்
எண்ணம் தானது வேறாமோ யேற்றிடா வார்த்தையாலே
குண்ணிடா தினிதானெந் சொல் கூறுவேனினி தப்பாதே

(வ-ம்) பூதலம், பாதலம், மேதலம், அரி, அயன், சிவன், தேவர், வசிஷ்டர், அருந்ததி முதலானோர் வர்க்கமும் அரிய உன்னை யான் மாமணம் நிறைவேற்றி வுன்னை நீங்கி யான் அன்னிய மாதரை தொடுவே னென யெண்ணம் கொள்ளாதே சீதா

(தருவு-தாளம் ஆதி ராகம் பூபாளம்)

ஸ்ரீராமன் விநா

சொர்ண மடமாதே சுகுணிவா யிப் போதே
மர்ம மின்மேன் கோதே மாமணி மேடைமீதே சீதே  சோ



சீதை விடை

சீர்த்தரும் மானுபாவ சின்மையானந்த தேவ  சீர்
தார்ப்புகழும் நற்சேவ தாரும் பிரசன்ன மூவகாவ

ஸ்ரீராமன் விநா

மூவர்ப் புகழும் பெண்ணே முத்தம் தருவாய் கண்ணே
நாவலர்ப் போற்றும் குண்ணே நயந்தரு மென் விண்ணே கண்ணே

சீதை விடை

தாருமே முத்தம் ஜாதை தாரணி புகழ் பாத  தர்
நாரணனென்னும் கியாத நான்மறையன் விநோத போத

ஸ்ரீராமன் விநா

நன்மையருள்வாய் கோரி நளினமுகம் தேறி  நன்
கன்னல் வளரும் மீறி கணியனூர் முராரி பாரி

சீதை விடை

கணியநகர் வாசகவி தீர்த்த சர் வேச  கணி
இணையடித்தாயீச யேழைதன் பாபநாச னேச

(ஸ்ரீராமன் சீதைக்குச்சொல் விருத்தம்)

எந்தன் நாயகியே கேள் இவ்விடம் நமக்கு தாமே
சொந்தமாக தெந்தன் சீதை என்னமுதே உந்தன்
தந்தை தன்னிடம் நீயேகிசடையிலா விடைதான் பெற்று
அந்தமாய் வருவாய் நாமே அயோத்திக் கினிதான் போவோம்

(வ-ம்) சீதாளும் இந்நகரில் எத்தனைநாள் இருந்தாலும் இது நமக்கு சதமல்லா உன்பிதாவிடம் நீ சென்று விடைபெற்று வருவாயாகில் நமது நகருக்கு யேகலாம் கண்ணே

(சீதை ஸ்ரீராமனுக்குச் சொல் விருத்தம்)

ஐயனே எனது பிராண ஆத்மநாயகனே இந்த
வையகம் புகழுமே தன் வார்த்தையின்படி நான் சென்று
மெய்யனே என்னை யீன்ற மிதிலை நாயகனை நா டி
தய்யமோ வருகின்றேனுது துரவதின்படி தானின் றே

(வ-ம்) வந்தனம் பிராணநாயக தமதருள்படியே என் பிதாவிடம் நான் சென்றுவிடைபெற்று வருகிறேன் சுவாமி

சீதை ஜனகனுக்கு சொல் தருவு தாளம ரூபகம் ராகம் பைரவி

(பல்லவி)

வந்தனம் தந்தையே பொன்னடிக்கு வந்தனம் தந்தையே

அனுபல்லவி

எந்தனை யீன்ற தேவனே யாவர்புகழும் பாவனே உன்  வந்
இணையடிதாரா இந்த ஏழைமீதருள் கூராகுபேர

(சரணங்கள்)

அகமகிழ்ந்தளைதயன அருமை நற்செங்கோல் கையென  வந்
ஆண்டருள் செய்ய விண்ணமாரும் மங்களமுடைய தூய்ய
மாசிலா மிதிலேசனே மன்னர் தொழும்பிரகாசனே-திவ்விய  வந்
மரகத ஆரயனமகிழ்வாய் கம்பீர திர
கணியனூர் சர்வேசனே களித்தவர் பிரகாசனே நீ  வந்
கருணைசெய்தாத உன் கடைக்கண்பார் நாதவினோத

(ஜனகன் சீதைக்கு சொல் விருத்தம்)

அருந்தவக் கதிகமாக அன்னையே என்வயற்றில்
பொருந்தி அன்புடன் பிறந்த புண்ணியவதியே வாழி
சிறந்த உன்கரம் குவித்ததேது அன்புடனே கேழ்க்கில்
வரந்தர தடையொன்றில்லை வாய்மலர்ந்துரைப்பா யம்மா

(வ-ம்) வசிஷ்டர் மனைவிக்குமேலாக என்வயற்றில் பிறந்த யென்னம்மணி உன் மலர்போன்றகரம் குவித்து நிற்கும் காரணம்யாது சொல்லும் என்னருமை பொருந்திய தாயே

(சீதை ஜனகனுக்கு சொல் விருத்தம்)

அலர்ந்த பொற்றாமரைக்கு மதிகமாமுனது திவ்ய
மலர்ந்த நின்முகம் களித்து யர்ம்மமென விளும்மென்னும்
திலர்தனன்று தலையோன்றும் தசரதராமரோடு
பவர் மகிழ்ந்திட அயோத்தி பதியவர் பின்போய் வாறேன்

(வ-ம்) தந்தையே நான் வந்தகாரணம் யாதெனில் என் நாயகனுடனே போய் வருகிறேன் விடை யருள்வீர் என்பிதாவே

(வாது தருவு தாளம் ஆதி ராகம்)

(ஜனகன் வினா)

உன்னை பெற்றமுதல் நானே உளமகிழ்ந்திருந்தேனே
என்னை பிரியவும்தானே இசந்தா என்ன செய்வேனே

(சீதை விடை)

என்ன செய்வேனென்றெந்தையே எங்கியழுது னெந்தையே
சங்கிலத்தோர்க்கும் னிந்தையே நாடியுரைப்பார் தந்தையே

(ஜனகன் வினா)

நாடினு னனேகயோக நானமே செய்துளம் னேக
வாடும் வேளையில் வையோக வந்தாயென் துயரே க நாடி

(சீதை விடை)

தன்னும் கணியனன்னோ துணையருள்படி னீரே
நன்மை யருள்புரிவீரே நான் போய்வருக கூறே துன்

ஜனகன் சீதைக்கு சொல் விருத்தம்

பெண்குழந்தைகளை பெற்ற பெருமையா லன்னை தந்தை
மண்மகிழ்ந்திட மார்பிது மடிதனிர் வளர்த்து மா லை
சுன்குளிர்ந்திட தரித்த கணவன் கைவசம் தானாகில்
எண்ணம் சொன்னார் பெற்றோர் மீதென்பது யிதுதான் மெய்யே

(வ-ம்) அருமையோடு தவம்புரிந்து பத்து திங்களாக வயற்றில் சுமந்து ஈன்றெடுத்து வளர்த்து வோர் மன்னவன் மாமணமிடசெய்த பிறகு தனது நாயகனவன் தன்வசமாகினால் தன்னை யீன்றெடுத்த தாய் தந்தையை பிரிய யாதொரு தடையிரா தென்னும் முன்னோர்சொல் பழமொழியானது வுன்னிடம் கண்டேனம்மணி.

சீதை ஜனகனுக்கு சொல் விருத்தம்

ஐயனே என்னைவேண்டி அருந்தவம் செய்து யிந்த
வையகம் மகிழ யீன்று வளர்த்தெடுத்தனை வோர் மன்னன்
கைவசமா யளித்தீர் கணவனே தெய்வ மென் ன
தூய்ய சாரத்தின்வாறே துரையவர் பின் போய்வாறேன்

(வ-ம்.) தந்தையே தேவரீர் அருந்தவம் செய்து என்னை பெற்று வளர்த்து வோர் மன்னவன் மாமணம் செய்யும்படியாக செய்தபிறகு பெண்களுக்கு தன்நாயகன் தெய்வமென்னும் முறைமையின்படி யான் போய்வருகிறேன் யெனதையனே



தருவு-அடதாளம் ராகம் அசாவேரி

(ஜனகன் வினா)

போய்வாரேனென்று சொன்ன அம்மா மனம்
பொருந்தவில்லை பிரிய அம்மா மன்னீர்ச்
சேயர்ப் யிராதபேர்க்கு சிந்தை தடுமாராதே
சீதை யென்னும் யெனது மகளே

(சீதை விடை)

மக்களை பிராதபேர்க்கு அய்யா அந்த
மஹாதேவினருள் யாது துய்யா மிக
தக்க சாரமுணர்ந்து தானிவ்விதம் சிந்தையே
தடுமாருவதேது யென தந்தையெ

(ஜனகன் வினா)

தந்தை தாய் தனைவிட்டு னீங்கி அம்மா
தான்போய் வருவேனென்றாய் வோங்கி உன்
சிந்தைமகிழ விடைசெய் என வெனவிலும்
சீதை யெனும் யெனது மகளெ

(சீதை விடை)

என்னை வொருவருக்கு தந்து மாலை
இடவெ அருள் புரிந்தீர் மகிழ்ந்து அந்த
கன்னல் வளர்க்கனிய னன்னகரி தன்பின்போய்
காட்சி பெரிதுவாரேன் தந்தையே.

ஜனகன் சீதைக்குச் சொல் விருத்தம்

நான்முகன் அகமகிழ்ந்து நயந்த என் றவத்திற்கேற்ற
தான் மகிழ்க மைந்தன் தாயே யென்மணிவிளக்கே
தேன்மொழி உனது திவ்வியத் திருவருள்படியே அம்மா
நான் மகிழ்ந்திடவே வுந்தன் நாயகன் பின்போய் வாரா

(வ-ம்.) என் குறை யீடேறும்படியாக என் வயிற்றில் பிறந்த யெனது அம்மணி உன் எண்ணத்தின்படியே நீ உன் நாயகனுடனே போய்வருவாய் எனது அம்மணி

ஜனகன்-தருவு அடதாளம் ராகம் சுருட்டி

(பல்லவி)

நல்லதம்மணி நீ போய் வாரா நாயகனுடன்
நானீயவ்வமை கைகொண்டு தேரா

அனுபல்லவி

பல்லகையுடனே பொன்படிகம் கைபிடி செம்பு
எல்லையோக் களித்திட எதுவேண் கேளுன தன்பு நல்

(சரணங்கள்)

ஆனைபரி அனந்தம் கோடி வொட்டகமுடன்
அரிவாய் ஆர்த்தி தருவேன் குடி
சேனைதளங்கள் ரத்ன சிம்மாசனம் பொர்க்கிண்ணம்
ஆனந்தமுடன் மஞ்சமளிப்பேன் வேருண்டோ எண்ணம் நல்

வச்சிரமமைத்த முக்காலி பச்சை
வைடூரியத்தால் நார்க்காலி யாரும்

மெச்சும்படி தவலே மேலான பிந்தைகள்
இச்சையுடனே வேண்டி யிநனேயுனது கைகொள் நல்

முத்துமாலிகை கம்மல் ஜிமிகை நத்து
மூக்குபேசரி வொட்டியாணம் யிடைக்கு
சுத்தமுள்ள சுருள்கொலுசு தோடா இல்வங்கி
எத்திசை புகழுநன் அளிப்பேன் உனமே பொங்கி நல்

நாடுனகரம் தந்தேன் தோர யம்மா
நயந் தாதிமாரிவேன் சீதா ராமன்
நாடும் கனியனகர் நாயகி என தம்மா
நான்மகிழ்ந்த சீதனம் நாடாதிராதே அம்மா நல்ல

பரசுராமன் படலம்

(பொதுவிருத்தம்)

தந்தை தன்விடையா லன்னே தாமெழுந்திருந்தாள் ராமச்
சந்திரன் தனக்கே சொர்ன்னபூஷனை யளித்தான் பண்டு
இந்திர முனிவர்போற்ற எழுந்தனர் மிதிலே விட்டு
விந்திட பரசுராமன் வழியதி லெதிர்கொண்டா னே

தருவு அடதாளம் ராகம் சுருட்டி

பல்லவி

எதிர்கொண்டானே பரசுராமன் மன்னவர் மன்று
எதிர்க்கொண்டிடவெ செய்யும் னேமன்

அநுபல்லவி

கதிர்க்குலத்தரசரை கண்டிப்பே னென சொல்லி
கரத்திற் கங்கண மேற கட்டிய தயனாய யி ல்லி எ

(சரணங்கள்)

தவத்திர் மிகுந்த ஈர்வேசன் இந்த
தரணியோர்க் களிக்கும் பிரகாசன் திவ்விய
நவமணிகளுடைய நான பூஷணம் துன்ன
நளின யிதார விந்தம் நயந்தெவர் துதி பன்ன எதிர்

ஜமதக்கினி மகிழும் பாலன் யிரேழு
ஜகத்தரக்ஷி தானின்ற சீலன் முன்னுள்
உமையவருடன் தானே உரைத்த வாய்மொழி தேர
சமயம் கிடைத்தானிந்த தசரதனென கீடர எதிர்

மூவேழு தலைமுறையாக சூரிய மன்னர் மேல்
முனைந்தான் வைரிவர்க்க மேலாக அவர்
மாவே றொன்றிலாமர் செப் மகிதலம் தனிர் பண்டு
மகிலா கணியனூர் மால் யருமகதை கண்டு எதிர்

(தசரதன் வசிஷ்டருக்கு சொல் விருத்தம்)

பரவை சூழ் புவியிர்த் தாமே பசருமமன் குருவே யிந்த
இரவி தன்குலத்திக் கெமன் எதிர்கொண்டு யினிதானே யா
உரக மென்பதைபோல் சீரிவொங்கு வில்தனைவளைத்து
கரந்தனிர் சிலைதாமேந்தி காலன்போ லிதோ வாரானே

(வ-ம்) குருவே நமது எதிரில் யெமன்போல் சீரி இக்குல பகைவனை
பரசுராமன் வருகின்றனே யிதற்கென்ன செய்குவேன் சுவாமி

(வசிஷ்டர் தசரதனுக்குச் சொல் விருத்தம்)

சிறந்த மன்னவனே உந்தன் சிந்தையிர்க் கவலே வேண்டாம்



உரம்கொண்டு வந்தா லென்ன வோதியது தூண்தானும ம
சரம் கொண்டு யிவனும் முன்னுள் சாதித்தோன் வலுமை தாமே
அறிந்திரு சற்றுநேரம் அய்யன் தன் முன்னிலின் றே

(வ-ம்.) மன்னு நீ யாதொன்றுக்கும் அஞ்சவேண்டாம் இவன் உனது குலத்தை இருபத்தோரு தலைமைமுறை வரையில் சாதித்த தீரன் இறமை சற்றுநேரத்தில் நாம் பார்ப்போம் நீ பயப்படாமல் யிரும் தசரதா

(தசரதன் ஸ்ரீ ராமனுக்கு சொல் விருத்தம்)

மன்ன மன்னவர்க்குமேல் மகனே ராகவனே கேளா
என்னெதிராகிவாரான் இக்குலப்பகைவன் தன்னால்
உந்நீத மினியாதாமோ ஹரிஹரி ஹரியேரம் ந மோ
இன்னிலம்தனி லவன்முன் எப்படி தப்பிப்போவோம்

(வ-ம்.) திருபுவனம்புகழும் யென்னருமை ரத்தினமே மனது குலபகைவனை பரசுராமன் இதோ வருகின்றனே நாமெவ்விதம் தப்பிப்பிழைத்துப் போகலாம் ராகவா!

(தசரதன்-தருவு அடதாளம் ராகம் அசாவேரி)

(பல்லவி)

எமன்போல் வாரானே பரசுராமன்
எங்கே போய் ஒளிப்போம் நாமே

அநுபல்லவி

யாமோசம் வருமென மனதிலெண்ணமலே யோ எமன்
மந்தருடனே வந்து சிந்தைதான் மிக நொய்ய

(சரணங்கள்)

கண்டவுடனே நாண்பூட்டுவான் மலர்க்
கரங்கொண்டு சரம்வாரி நாட்டுவான் இந்த
எண்டிசைகள் தீரமீட்டு வான் சற்றும்
எண்ணுனினி அய்யோ நான்பண்ண பலனோ நொய்ய எமன்

குழவிக ளென்மனம் தேரானே கதிர்க்
குலத்தின் பகைவனென்முன் வாரானே அவன்
கழிலிர்ப் பணிந்தபோதில் யீரானே என்ன
கதியாகுமோ அயனும் விதித்தபடி னேருமோ எமன்

அறுபதாயிரகாலம் ஆண்டேனே தலைமேல் வெள்ள
மாகுமென மாதரை தீண்டேனே இந்த
பரிதி குலம் விளங்க வேண்டேனே செல்வ
பாலர்தனை வளர்த்து பரிகொடுக்க வந்தேனே எமன்

கருணையரிவாய் கணநாதா வெர்க்
களிக்கும் கணியினார் விநோத எழைத்
தருணமென மனம் வாராத என் எமன்
தனையரைக்காத்தருள் ததி எனவும் விநோத

(பொது வ-ம்.) இவ்விதம் தசரதன் புலம்பியிருக்கும் சமயம் பரசுராமன் சொல்லுகின்ற விதம் காண்க

(பரசுராமன் தசரதனுக்கு சொல்கின்ற விருத்தம்)

அனந்த நாளாக என் முன் அகப்படாதிருந்தா யிந்த
தினம்தனி லகப்பட்டாயே தசரதபதியே எந்தன்
மனமிக பொங்குதந்த மரவிகை யுனையளி க் க
முனைந்தே னென்கையில் வில்லே மூட்டினே னினி அஞ்சாதே

(வ-ம்.) அடா தசரதா நீ என் கைக்கு அகப்படாமல் தப்பித்திருந்தவன் இன்று வுன் விதிவசத்தால் அகப்பட்டுக்கொண்டா யல்லவா இதோ வுன்னை வொரு னொடியிர் எமனுல கனுப்புகிறேன் பாரடா மன்னு

(தசரதன் பரசுராமனுக்கு சொல் விருத்தம்)

இனி தடைசெப்பவேண்டாம் ஆனந்தமுடனே சூழ்ந்த
பனியது யிரவி முன்னிற் பகரமதாமோ நீர் தா ன்
முனைந்தவாரது தான் செய்வீர் மோக்ஷமே லாகுமெந்தன்
தனையர்மேலஸ்ரம் தொடுக்கதான் வரமருள்வீர் போற்றி

(வ-ம்.) வந்தனம் என் குல பமைகயரே தமதருள்படியே செய்வீர் என் தனையர் மீது உமக்கு பகைவேண்டாம் எனக்கு தயைசெய்து தமதருள் கூர்வீர் சுவாமி

(பரசுராமன் தசரதனுக்குச் சொல் விருத்தம்)

கார்த்த வீரியனால் எந்தன் காத்திற் கங்கணமே கட்டி
நாத்திசை என்பே ரோங்க நரிக்கினோனுன் கதை தை
வத்த தோரினி மூவேழு இருபத்தோர் தலவர்க்கின்னம்
சாத்துவேனினி உன்னோடே சப்தமே முடிப்பேன் பாரா

(வ-ம்.) வ ! மன்னு உன் குலத்தி லுற்பத்தியாகிய கார்த்த வீரியனென் பவனால் உன்குலத்தோரை நான் யிருபத்தோரு தலமுறை வரையிலும் சம்மரிக்கும்படியாகினது இனி உன்னுடன் என் சபதமாகினது முடிந்து விடுகின்றது பார் மன்னு

(தசரதன் பரசுராமனுக்கு சொல் தருவு தாளம் ஆதி ராகம் அசாவேரி)

(பல்லவி)

இனி தடைசெய்யாதைய எனை கொல்லவே — இனி

அனுபல்லவி

மனிதனாகவே நான் மண்ணிற் பிறந்தேனையோ
மந்தருடன் நான் வந்து சிந்தைதான் மிக நைய்ய — இனி

(சரணங்கள்)

அறுபதாயிர் காலம் ஆண்டேனே புத்திரசோகமே
லாகியாகம் செய்திட பூதமே
தரும் பிண்டமாதர்க் கீயும் தருணம் பிரசாதமே
தனையாராய் வந்துத்தலைவன் மீ தொவ்வா தமே — இனி

என் குலத்தோர் தன் மீது எடுத்தாய் தஜமே அய்ய
எழை சொற்படித் தாமே யெய்து என் சிரம் கொய்ய
தன்பகை முடியுமே தனையர்மேல் தயைசெய்ய
தஞ்ச மெனவும் தங்கள் ருளிர்ப்பணிந்தேன் துய்ய — இனி

சிசுவை வேதியர் ஸ்ரீயை பசுவைக்கொன்றவன் குலம்
க்ஷீணித்து போமெனவும் செப்பினார் முன்னோர்கள் பலன்
விசை கொண்டென்மீது சரம் விடுவ துமக்கே நலம்
வீணிர் செய்யாதே காலம் விருதா அய்யா மென்மேலும் — இனி

(பரசுராமன் தசரதனுக்கு சொல் விருத்தம்)

மந்தரை காருமென்றெ மலர்மிசைக் கிணங்கு மன்ன
முந்தி கார்த்தியனால் நானே முனைந்தேனுன் குலமொழிக்க
பிந்தி உன்தனையன் தானே பெரும்பகைவனுமே யானுன்
சுந்திர கணைதான் எய்து சுதன்தனை மடிப்பேன் யாராய்



(வ-ம்.) வ! மன்னு உன் குலத்தோனான கார்த் வீரியனால் உன் குலத்திற்கு நான் பகைவனுகினேன் இப்போது உன் சுதனும் எனக்கு பகைவனுனான் ஆதலால் அவனை சம்மரித்து உன்னையும் மற்ற யாவரையும் விட்டு போகின்றேன் நீ அஞ்சாமல் உன் இடம் போய் சேரும் மன்னவா

(தசரதன் சொல் விருத்தம்)

எத்தனை விதித்தாலையோ எங்கினான் அழுது வாடி
உத்தமன் தனக்குரைத்தும் ஒன்றுமே கேளாதெந்தன்
புத்திரன் மீது கோபங் கொண்டுமே நடக்கின்றானே
சுத்தியை யாண்ட எந்தனப்பனே என்ன செய்வேன்

(வ-ம்) அரி அரி பரந்தாமா அனாதி ரக்ஷக சின்மையானந்தமே இந்த பரசுராமன் என் சேயனாகிய ஸ்ரீ ராமன்மீது பகையாகி நடக்கின்றானே என்ன செய்குவேன் ஜகத்ரக்ஷகா

(தசரதன் தருவு தாளம் ஆதி ராகம் காம்போதி)

(பல்லவி)

ஆ என்ன கதி ஆகினதே

(அனுபல்லவி)

ஓ ஹோ என்ன செய்வேன் உள்ள மி க வாட
வேகமாமந்தனை வெல்வேனென முன் னுட — ஆ

(சரணங்கள்)

முப்பிறப்பின் பழியோ இப்பிறப்பின் மொழியோ
எப்பிறப்பின் பிழையோ தா்பர உன் வழியோ — ஆ

தஞ்சமென நான்பாடி தயைசெய் என வோடி
அஞ்சலி செய்தும் மோடி ஆனான் மந்தனை நாடி — ஆ

தேன் ஊரும் செவ்வாயனே திகட்டா தெனையனே
நானினி என்செய்வேனே நானுவித மானேனே — ஆ

அருமை எந்தன் மைந்தா யாரை வைகுவே நந்தா
கரிமுறைக் குகந்த கணியனார் கோவிந்த — ஆ

(பொது வ-ம்.) இவ்விதம் அரசன் பலவாராக புலம்புகின்ற சமயம் பரசுராமன் ஸ்ரீ ராமனை வளைத்துகொண்டு கடூரமாக சொல்லுகின்ற விதம் காண்க

(பரசுராமன் ஸ்ரீ ராமனுக்குச் சொல் விருத்தம்)

தலந்தனிலுன் முன்னோரை தவிடாகச் செய்தே னந்த
குலந்தனி லவதரித்த கோசலைதனையா கே ளாய்
பலந்தனிற் மிகுந்தோர் தாமே பஞ்செனை பரக்கவே முன்
தலத்தின் மிகமேல் கொண்ட தசரத சேயனில்லா

(வ-ம்.) அடா ராமா உன்குலத்தில் பிறந்தவர்களை யாவும் அதம் செய்து நான் காலறு கேற்றினேன் அக்குலத்திற் நீயும் பிறந்தவனாதலால் உன்னையும் சம்மரிக்கின்றேன் ராமா

(ஸ்ரீ ராமன் பரசுராமனுக்குச் சொல் விருத்தம்)

நிலைகொண்டு என்குலத்தை நீயோ வென்றவன் தானையா
சிலைகொண்டு யெய்து மூவேழ் சிரந்துணித் துடவைராக்கிய
வலைகொண்டு வந்தவிப்பர வந்தனம் உமக்கே அந்த
அலைவுண்ட துரும்பாவீர் அப்புரமினி போமை யா

(வ-ம்.) என் குலத்தின்மீது வைரியாகினவ உமக்கு வந்தனம் இனி நீர் என் முன்னிற் வீண்வார்த்தை யாடாமல் போம் போம் பரசுராமரே

(வாது தருவு தாளம் ஆதி ராகம் எதுகுல காம்போதி)

பரசுராமன் வினு

அப்புறம் போவென எனை செப்பின தீரனைக் காணேன்
அறிவேனுன் வுன்குலத்தை ரகு ராமா உன்
மூப்பிறபேர்க்க ளெந்தன் முன்தப்பி பிழைப்பதேது
மூர்க்கத்தனமோ தசரத ராமா

ஸ்ரீ ராமன் விடை

மூர்க்கத்தனமாக என்னேக் கொண்டினி வளைத்த
மூவேழ்தலமுறை பரசுராம மிக
சீர்கொண்ட என்குலத்தை சேதம் செய்யென எவர்
செப்பினுர் உமக்கெஜமதக்கினி ராம

பரசுராமன் வினு

தேவரும் மாமுனி திரு மூவரும் களிக்கு காம
தேனுவனே அழைத்து ரகு ராம மிக
ஆவலா அன்னம்படைத்த அய்யன்தனை வைதோன் குல
மனத்தியமாமே தசரத ராம

ஸ்ரீ ராமன் விடை

அந்தநாளாகத் தவம்தனை புரிந்து பெற்ற
அன்னைதனையே நீ பரசுராம கனை
மூனைந்தவள் தலை கொய்தாய் முப்புரி னூலேனே உங்கள்
முறைமையிதோ சொல் ஜமதக்கினி ராம

பரசுராமன் வினு

முரமை அல்லாகாண் என்னை அருமையுடனே பெற்ரோன்
அருள்படி செய்தேன் குலே ரகுராமா உன்
திறமையுடைய சரம் தொடுத்தே பெண்குலே செய்தாய்
தோஷமிலேயோ தசரத ராம

ஸ்ரீ ராமன் விடை

எல்லேயிலனந்த நாளாய் அல்லல் செய்தாளென கூவி
கொல்லென்ருர் குருமொழி பரசுராமா என்
வில்தனை வளைத்தவனே கொல்ல எத்தனித்தேன் காணும்
வீண்வார்த்தை யேனோ ஜமதக்கினி ராம

பரசுராமன் வினு

வார்த்தி சூழ்ப்புவியிர் சொத்த வில்வளைத்தினி ஜனகன்
வளர்த்த மாதகை தொட்டாய் ரகுராமா இந்த
தார்த்திசை மகிழ என் வில்தந்தே னிதை வளைப்பாய்
த்ராணியதனை காண ரகுராமா

ஸ்ரீ ராமன் விடை

வலுமையுணது கை வில்வளைத்தேன் இதன்மேல் கணை
வைத்தேன் யிதைப்பார் பரசுராமா இனி
வலிதருவாய் கணியனகரியா னமத்த
பாணத்திற்குவகை சொல் பரசுராமா



(பரசுராமன் சொல் விருத்தம்)

கதிர்குலத்தரச ரென்னை கண்டபோ தொடிங்கி மேலும்
அதிர் கொண்டு ஆவி நீங்க அருமை என் சரமெய்யா முன்
எதிர்கொண்ட இவனுமின்றே எடுத்தனன் மலர்காத்திர்
கொதிகொண்ட சரத்திற்கென்ன கூருவே னினிதானையோ

(வ-ம்.) கதிரவன் குல மன்னவர்களாகினவர் என்னை காணுமுன்னமே அவர்களுடைய அங்கம் தளர்ந்தவராகிங்க யின்று என்முன்னமே நின்ற ஸ்ரீ ராமன் கையிலிருக்கும் வில் தனக்கு நான் என்ன சொல்லப்போகின்றேன் ஜகதீசா

(பரசுராமன் ஸ்ரீ ராமனுக்குச் சொல் தருவு தாளம் ஆதி ராகம் நாதனு மகிரி)

(பல்லவி)

என்ன வகைநுன் சொல்லுவேன் ராமன் என்
எடுத்து மலர் கரத்திற் பிடித்த கணையதற்கு

அனுபல்லவி

மன்ன மன்னரெவரும் மயங்க வனையே கண்டு என்
முன்னுள் செய்தீவனையோ இன்னுள் சின்னமே கொண்டு

(சரணங்கள்)

தீரனென யாவரும் திகில்கொண்டனைக் கண்டோட என்
பாரிலின்றே ராமன் தான் பகருமோழியால் வாட
அண்டமுனிவர் சர்ப்பபிண்டமெனக் கொடுங்க என்
பண்டு அமைத்தவில்லே கண்டு யானே மயங்க
கன்னல் வளர்க்கனிய னன்னகர்கர் அரிதன் என்
முன்னே யாதென முலைப்பன்னுவே னினி யான் பின்

(பரசுராமன் ஸ்ரீ ராமனுக்குச் சொல் விருத்தம்)

குரவிலா தனேகனுன் நான் கோரிய தவத்திர்ப்பாதி
அரிஅயன் சிவனும் தேவருமை மாதவத்தோர் நானங்கு
மறை திறை விண்ணு மண்ணும் மறிய உன் சரத்திர்க் கன்பாய்
ஸ்திரமுடன் அளிப்பேன் நானே தேசிக னினிதானையா

(வ-ம்) ராமா உன்கரத்திரமைத்த வில் தனக்கு நான் என்ன சொல்லுவேன். ஆனுல் நான்செய்த தவோ பலத்தில் அர்த்த பாகம் தருகின்றேன் நீ அருள் கூர்ந்து பெற்றுக்கொள்வாய் ராகவா

(பரசுராமன் தருவு அடதாளம் ராகம் சுருட்டி)

(பல்லவி)

தந்தேன் தானம் தனைகைகொள் தயைபுரிந்து
தசரதராம அருள் சிறந்து

(அனுபல்லவி)

சந்தேஹமினிவேண்டாம் சந்திர சூரியர்சா க்ஷி தந்
இந்ததிசை எட்டிலும் இருக்கும் பாலரத்தா க்ஷி

(சரணங்கள்)

குற்ற மென்றெண்ணுதே என்மீது
கோதை தீர்த்தாழ்க் கொள்ளிப்போது

சத்தியமாகவே நான் சமைத்த வேழ்வியிற்பாதி
யத்திசை புகழ்புன லெள்ளும் கொண்டிதோ வோதி தந்

இந்திரன் இந்திராணியும் அறிய அரிகில்
இருக்கும் குருவசிஷ்டர் தெரிய இந்த
அந்திரத்தினிற் வாழும் அமரர் கின்னர் சித்த
ரரிய வேறுகிலேன் உன் கைசரத்திற் குதவிமெத்த தந்

ஐயமொன் றனுகாம லின்றே என்
அன்னை தந்தை சாக்ஷியாம் வொன்றே
பொய்யுரையேன் நான் தான்வோர் பூசுரனினி அய்ய
புகழும் கணியநகர் அரிநீயே தயை செய்ய தந்

(ஸ்ரீராமன் பரசுராமனுக்கு சொல் விருத்தம்)

இருப்பிறப்பாளனே நீ யிசந்த நற் றவத்திற்பாதி
வெருப்பிலா சரத்திர்க் கீதவேதிய உன்தலைக்கு
குறிப்புடனமைத்த ஆஸ்திரம் கூடினத்தின் யினத்தோ
டிருப்பிட மினிபோய் சேருமே யினிதடை செப்பாதே

(பொது விருத்தம்)

தடையிலா விடைதான் பெற்று தவமுனி நடந்தான் பின்னே
படையுட னெழுந்தை யோத்திபதிக்குமே சோர்ந்தார் தங்க
கொடியிடைமாது தானும்கூடி ஞ்பசரம்போல் கெஞ்சி
வடிபெறும் மஞ்சமீது வைபவத்துடன் யிருந் தான்

(தருவு தாளம் ஆதி ராகம் முகாரி)

(லாவணி)

ராம ராம ராம ராம ராம ராம ராம
ராமரரவிகுல சோம தசரத ராம ராமரே
அரிபரந்தாம உன் அடியேன் உனது திரு
வடிகளை காணுவ தெப்போ
முர அரியே தமது அரிகிலேனை யாளாக
முத்தி தருவதினி எப் போ அரி

கரிமுறை யிடவே முன்காத்த பரம்சுடரே
கதியென நம்பினேன் நானே இச்
சிறியேன் முறையிட சித்தம் சற்றும் தளர
ஸ்ரீதர என்செய் தேனே அரி

ஆதியில் சோமுகன் அயன் மறைகளை நான்கும்
அவன் திருடி கடலிலொளிக்க
சோதியே மச்சமா சோமுகனை வதைத்து
சுரிதி அளித்தா அயன் களிக்க அரி

விண்ணவரும் முனிவர் கண்ணு மாமணி வண்ண
குண்ணதனையே மத்தா க்கி
வண்மையுடனே கூர்மமாகி குன்றை சுமந்து
வார்த்தா தேவர்க்கமுதம் நோக்கி அரி

பூதலத்தை பாயாக புண்ணியனே சுருட்டி
ன அரக்கனுக்கா முன்னே.



ஸ்ரீதரனே வராகமாகியவனை கொன்று
சிராய மத்தாய் புவி பின்னே அரி

சேய னொருவனுக்காக சிங்கமாகி யோர்த்தூணில்
சீக்கிரம நீ பிறந்தே ஐயா
தீய அரக்கனுயர் போக்கினதும் உமது
திருவிளையாடலன்றே செய்தாய் அரி

வாமனனவும் அவதாரம் செய்து பலியை
வருந்தயவன் மூன்றடி மண் ணை
தாமளித்திட யவன் தலைமீ துமது பாதம்
தாங்கவேத்த துமது செய லே அரி

பகலவன் குலத்துக்கே பகைவனென பரசு
ராமனென பிறந்து நீயே
அகிலமதினிற் கார்த்த வீரியனுக்கே வைரி
யாகியவன் சிரம்கொய்ய தாயே அரி

தசரத சுதனென தரணிதனிற் பிறந்து
தாயுரையாலே வனமோடி
தசகண்டனை சிதைத்துததி என்றடுத் தோனுக்கே
தானளித்த தாயே முடிநாடி அரி

அகிலமுழுதும் சமமாகிய தனையே நீ
ஆக்குவதற்க்கே மேடுபள்ளம்
சுகமுடனே பலபத்திர ராமனென
ஜனன மெடுத்தா யுன துள்ளம் அரி

பௌதாவதார மதிற் பிரர்சதி விரதமதை
பகராமலன்று நீயேசெய்தாய்
திவ்வியமுள்ள உந்தன் திருவடிகதியென
தேடும் அடியார்க் கருள்பெய் தாய் அரி

யாதவகுலத்தில் வந்தவதரித்து கஞ்சனை
அதம் செய்தாயே யெனது கண்ணா
பாதாரவிந்த மிந்தபாலனுக் கருள்புரி
பதிதயவான மலர்க் கண்ணே அரி

உரகசயன வுமதருளே யல்லாமல் வே
றுண்டோ சொல்லு மெனது கண்ண
பரம்புருஷதிருபத்த வச்சல கண்ண
பாரும் பாரும் மலர்க் கண் ண அரி

ஆரதார சுவாதிஷ்ட மணிபூரகம் தி
லாடும் எனது யிரு கண்ண
தாரா தலத்திலுந்தன் தயையன்றி வேறுண்டோ
தானே யுகந்து சொல்லும் கண்ண அரி

புண்ணியனே தமது பொன்னிணை கதிஎன
போற்றி செய்தேனே எனதருவே
கண்ணனெ தயைபார் கார்வண்ணனையினி
கதியெனவும் தொழுதேன் குருவே அரி

225-302

ஸ்ரீ சுப்பராய உபாத்தியாரால் இயற்றிய

பங்கய பாதமங்கை சமேத
பாலன் சுப்புராயனும் போற்ற
சங்கை யகலச்செய் சமய கணியநகர்
சச்சிதானந்த புகழ்ந்தேற்ற அரி

கல்யாணத்திற் வரும் மங்களதருவை இவ்விடம் பாடிக்கொள்ளவும்

(சக்கிரவர்த்தி திருமகனார் திருவடிகளுக்கே சரணம்)

---

சீதா
கல்யாணம்
முற்றிற்று.

ஆவணக்காப்பக
225302
சென்னை-600 008.